திராவிடர் ஆலயம்

118
N06
18631



SOUVENIR OF THE INDIAN VISIT.

# The Royal Tour Album.

IN

**TAMIL.**

Arunachalla Aiyer, B.A.,

---

**1906.**

*PRICE ANNAS 8.*

118631

# முகவுரை.

பம்பாய்த் துறைமுகத்தில் பிரிடிஷ் இளவரசர் வந்திறங்கினதும் அவ்விடத்து ஜனங்கள் எதிர்கொண்டு வரவேற்று உபசாரணைப் பத்திரிகை படிக்க, இளவரசர் தம்முடைய பதவிக்குத் தக்கபடி கம்பீரமாயும் பெருங்கருத்துக ளடங்கினதாயும் விடையருளினார். இந்தியாவை ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்த சக்கரவர்த்திகள் பூர்வகாலத்தில் இருந்ததாகப் புராணங்களிலறிகிறோம். பிறகு மத்திய காலத்தில் மொகலாய சக்கரவர்த்திகள் டில்லியில் ஏகாதிபத்தியம் ஸ்தாபித்து இந்தியாவை ஒன்றுபடுத்தி யாண்டு வந்தனர். வந்தாலும் அக்காலத்திய பத்ததியின்படி சக்கரவர்த்தியானவர், பக்கங்களில் வசித்த ஜனங்கள் மட்டும் அறியும்படியா யிருந்தனரேயன்றி, தேசமுழுதும் சுற்றிப்பார்த்து ஜனங்களது நிலைமையையும் உணர்ச்சிகளையும் நேரிலறியும்படியா யிருந்தவர்களல்ல. பிறகு ஆங்கிலேயர் இந்தியாவைச்சேர்ந்து ஆண்டுவரத் தொடங்கியுங்கூட வெகுகாலம் ஈஸ்டிந்தியா கம்பெனியார் ஆட்சி நடத்திவரா யிருந்தபடியால், இந்திய ஜனங்களுக்குத் தங்களை யாளும் அரசனின்னாரென்று தெரிந்துகொள்ள வழியின்றி யிருந்தது. பிறகு 60-வருஷத்துக்குமுன்னால், இந்தக் கம்பெனியானது எடுபட்டுப்போய், பிரிடிஷ் அரசே (ராஜகுடும்பமே) மந்திரிகள் மூலமாய் இந்தியாவை யாளும்படி ஏற்பட்டது. அப்படி யேற்பட்டபோது, விக்டோரியா மகாராணி பிரிடிஷ் அரசியாக வீற்றிருந்தார். இந்தியாவின் ஆட்சியை யேற்றதும் அவர் புருஷனிறந்துபோய் வைதவ்யத்தையடைந்து ஆறாத் துயரை யடைந்தார். அத்துயரம் அவருக்கு இறக்குந்தனையும் ஆறினதில்லை. இவ்வாறாயினும் இந்தியாவிடத்தில் விக்டோரியாமகாராணி வைத்திருந்த அன்பும் கருணையும் அவர் பெருந்தன்மைக்கும் பெருங் குணத்துக்கும் மகோன்னத ராஜபதவிக்கும் ஒத்திருந்தன. அவர் இந்தியாவை நேரிற் பார்க்கவேண்டுமென்று விரும்பியிருந்தது நிறைவேறாமற்போய் பெரும் விசனமடைந்து, அதற்கு ஒருவாறு

பிரதியாகத் தமது இளவரசை 1875-ம் வருஷத்தில் இந்தியாவுக் கனுப்பி, இந்திய ஜனங்களிடம் தாம் வைத்திருக்கும் பட்சத்தையும் ஆசையையும் நேராகச் சொல்லும்படி கற்பித்தனுப்பினார். அப்போது வந்த இளவரசர் இப்போது மகாராஜாவாகி சிம்மாசனம் வீற்றிருந்தும் அவருக்கு வயோதிகமாகி விட்டபடியால் பட்டம் பெற்றபிறகு இந்தியாவுக்கு மறுமுறை வர இயலாமற்போய் விட்டது. இப்போதிளவரசராக வந்திறங்கியிருப்பவர் சில வருஷங்களுக்குமுன்னால் தாமும் தமது பெரிய தமையனுமாக இந்தியாவுக்கு வந்து போனார்கள். போனபிறகு அந்தத்தமையன் இறந்து போய் விடவே, இவருக்கு இளவரசுப்பட்டம் கிடைத்தது. தமது பிதா இளவரசஸ்தானத்திலிருந்தபோது இந்தியாவைச்சுற்றிப்பார்த்ததுபோல தாமும் பார்க்கவேண்டுமென்று வந்திருக்கிறார். பிரிடிஷ் ஏகாதிபத்தியம் உலகெல்லாம் வியாபித்திருக்கின்றது. ஆஸ்ட்ரேலியாவும், கானடாவும், தென்னாப்பிரிக்காவும், இந்தியாவும் உலகத்தில் ஒரே மூலையில் சேர்ந்திருப்பவைகளல்ல. இல்லாவிட்டாலும் இவ்வளவு பெரிய ஏகாதிபத்தியத்துக்கு உரிமை பெற்றிருக்கும் சக்கரவர்த்தியின் இளவரசருக்கு அவைகளை யெல்லாம் பார்த்துவரவேண்டுமென்பது இயல்பான விருப்பமாகும். அவ்வாறே 4-வருஷங்களுக்குமுன் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்ற இந்த இளவரசர் அந்தப் பாகங்களை யெல்லாம் போய்ப் பார்த்து வந்தனர். இந்த வருஷம் இந்தியாவுக்கு வந்திருக்கிறார். இந்தியாவிடத்தில் தமது பிதாவும் பிதாமகியும் அளவற்ற வன்பு வைத்திருப்பதுபோலத் தமக்கும் அளவற்ற வன்பு உண்டென்று பம்பாயில் பேசினபேச்சில் சொன்னார். இவர் இந்தியர்களுடைய மனோபீஷ்டங்களை யறிந்து அவர்களுடைய க்ஷேமத்தில் அக்கரை பாராட்டுவது தமது கடமையென்றுஞ் சொன்னார். அப்படிச் சொன்னதை இந்திய ஜனங்கள் ஒரு கணப்பொழுதேனும் சந்தேகிக்காமல் நம்புவார்கள். இந்தியருக்கும் விக்டோரியா மகாராணியின் வம்சத்தில் உதித்த இளவரசர் விஷயத்தில் அன்புக்கும் மதிப்புக்கும் அளவிருக்க மாட்டாது. இந்தியர் ராஜவிசுவாச மென்பதே பெரும் பூஷணமாகக் கொண்ட ஜாதியார். அதிலும், பிரிடிஷ் அரசர்களைப்போலக் குடிகளைச் செங்கோல் செலுத்திப்பாதுகாக்கு மரசரிடத்தில் விசுவாசத்துக்கு என்னதடையிருக்கக்கூடும், பம்பாயில் வந்து இளவரச ரிறங்கினபோது



ஜனங்கள் காட்டின உற்சாகமும் ஆரவாரமும் இந்தியாமுழுமையும் ஜனங்கள் காட்டும் விசுவாசத்துக்கு முன்னறி குறிகளாயின. இந்தியாவை எந்த அன்னியர் வந்து பார்த்தாலும் அதன் காட்சிகளையும் ஜனங்களது குணங்களையுங் கண்டு பிரமிக்காதவரில்லை. இளவரசர் ஏற்கனவே இந்தியர்களுடைய சாந்தகுணங்களையும் அன்பையும், தைரியத்தையு மறிந்து மெச்சுவதாகச் சொன்னார். இன்னும் இந்தியாவைவிட்டுப் போவதற்கு முன்னால் இந்தக் குணங்கள் நிறைந்திருப்பதைக் கண்டறிய வேண்டுமான சமயங்களேற்படும். இந்தியர் பிரிடிஷ் அரசர்களிடத்தில் விசுவாசமும், பிரிடிஷ் அரசர், இந்தியரிடத்தில் அன்பும்வைத்து, இரண்டுதேசங்களும் ஒன்றுபட்டு வாழ்ந்து பெருமைப்பட வேண்டுமென்று இந்தியர் யாவரும் பிரார்த்திப்பார்கள்.

# இந்தியாவில் இளவரசு பிரயாணம்

## பிரயாண விவரப் பட்டி.

---

1905-06.

| | | | | |
|---|---|---|---|---|
| பம்பாயில் வரவு | .. | .. | நவம்பர் மீ | 9உ (பிற்பகல்) |
| பம்பாய் | .. | .. | ,, | 9—14 |
| இண்டோர் | .. | .. | ,, | 15—17 |
| உதயபுரி | .. | .. | ,, | 18—20 |
| ஜெயபுரி | .. | .. | ,, | 21—23 |
| பிகானீர் | .. | .. | ,, | 24—27 |
| லாகூர் | .. | .. | ,, | 28—டிசம்பர் 1 |
| பெஷாவரம் | .. | .. | டிசம்பர் மீ | 2—4 |
| ராவல் பிண்டிக்கடுத்த மனூவர்ஸ் | .. | | ,, | 5—8 |
| ஜம்மு | .. | .. | ,, | 9—10 |
| அமிர்தஸரம் | .. | .. | ,, | 11 |
| டில்லி | .. | .. | ,, | 12—15 |
| ஆக்ரா | .. | .. | ,, | 16—19 |
| குவாலியர் | .. | .. | ,, | 20—25 |
| லக்னோ | .. | .. | | 26—28 |
| கல்கத்தா | .. | .. | ,, | 29—ஜனவரி 6 |
| டார்ஜிலிங்கு | .. | .. | ஜனவரி மீ | 7—8 |
| கடற்பிரயாணம் | .. | .. | ,, | 9—12 |
| ரங்கூன் | .. | .. | ,, | 13—15 |
| மாண்டலே | .. | .. | ,, | 16—18 |
| நதிப்பிரயாணம் | .. | .. | ,, | 19—20 |
| ரங்கூன் | .. | .. | ,, | 21 |
| கப்பற்பிரயாணம் | .. | .. | ஜனவரி | 22—23 |
| மதிராஸ் | .. | .. | ,, | 24—28 |
| மைசூர் | .. | .. | ,, | 29—பிப்ரவரி 4 |
| பெங்களூர் | .. | .. | பிப்ரவரி | 5—7 |
| ஐதராபாக்கம் | .. | . | ,, | 8—15 |
| ரயில்பிரயாணம் | .. | .. | ,, | 16 |
| எல்லோரா | .. | .. | ,, | 17 |
| காசி | .. | .. | ,, | 19—20 |
| நேபாளம் | .. | .. | ,, | 21—மார்ச்சு 4 |
| அலிகார் | .. | .. | மார்ச்சு மீ | 6 |
| ஸிம்லா | .. | .. | ,, | 7—9 |
| ரயில்பிரயாணம் | .. | .. | ,, | 10—11 |
| குவெட்டா | .. | .. | ,, | 12—16 |
| கராச்சி | .. | .. | ,, | 17—19 |
| கராச்சியைவிட்டுப் புறப்படுதல் | | .. | ,, | 19 |

---

# வேல்ஸ் இளவரசர் வரவு.

(9-11-05.)

## தந்தி.

9-ந்தேதி மாலை வேல்ஸ் இளவரசர் வந்து இறங்கியவுடனே பம்பாய் நகரமானது தேவநகரமொப்ப விளங்கியதென்று தந்தியினால் அறிகின்றோம். லார்டு கர்ஸன் தோணியிலேறி வேல்ஸ் இளவரசரின் ஸ்டீமருக்கே சென்று எதிர்கொண்டழைத்து வந்தார். ஜனங்கள் அளவற்ற உற்சாகம் பாராட்டினர். லார்டு லாமிங்டன் வேல்ஸ் இளவரசருக்கு அநேகம் பிரமுகர்களை அறிமுகஞ்செய்வித்தார். இதற்கெல்லாம் முன்பு வெகு அவசரமாக இடார் மகாராஜாவாகிய ஸர் பிரதாபஸிங் என்பவர் ஒருவர் தமது கைவாளை வேல்ஸ் இளவரசரின் பாதத்தின் கீழும் இளவரசியின் பாதத்தின் கீழும் வைத்து எடுத்துக்கொண்டனராம். பிறகு முனிஸிபாலிடியாரின் நல்வரவுப் பத்திரிகை படிக்கப்பட்டது. வேல்ஸ் இளவரசர் அதற்கு மிக ஆதரவுடன் மறுமொழி கூறினர். முனிஸிபாலிடியின் தலைவராகிய ஸர் பி. எம். மேடாவினால் அவ்வுபசாரப்பத்திரிகை படிக்கப்பெற்றதென்றால் அப்போது ஜனங்களுக்கிருந்த உற்சாகம் கூறவேண்டுவதில்லை. நேற்று சக்கரவர்த்தியின் பிறந்தநாள் விசேஷமும் கூடிற்றாகையால் குண்டு முழக்கமும், ஜன ஆர்ப்பரிப்புக்களும் மிகுதியாக ஏற்பட்டிருந்தன. வேல்ஸ் இளவரசர் தாம் என்றும் கண்டிராததென்று கூறத்தக்க இந்த மகோற்சவங்களனைத்தையும் கண்டு மிகவும் மனம் பூரித்தனரென அறிகின்றோம். பிறகு இளவரசரும் மனைவியாரும் கவர்ன்மெண்ட் மாளிகைக்குச் சென்று விட்டனர்.

---

# இளவரசரும் இந்தியரும்.

## பம்பாய் கார்பரேஷன் நல்வரவுப் பத்திரிகைக்கு வேல்ஸ் இளவரசர் சொன்ன பதில்.

9-ந்தேதி வியாழக்கிழமை தினம் வேல்ஸ் இளவரசர் தம் மனைவியாருடன் பம்பாயில் வந்திறங்கி விட்டாரென்று சொன்னோமல்லவா? அச்சமயம் பம்பாய்க் கார்பரேஷன் மெம்பர்கள் தமக்கும் தமது மனையாட்டிக்கும் வாசித்துக் கொடுத்த நல்வரவுப் பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு சக்கரவர்த்தி திருமகனார் பின்வருமாறு பதில் சொன்னார் :—

வேல்ஸ் இளவரசியையும் என்னையும் உள்ளன்போடும் உற்சாகத்தோடும் நல்வரவுகூறி யழைத்ததற்கு நான் உங்களை வந்தனஞ்செய்கின்றேன். வேல்ஸ் இளவரசி இங்கு வந்திருப்பதைச் சுட்டி நீங்கள் உங்களுடைய நல்வரவுப் பத்திரிகையில் பேசியிருப்பது எங்கள் இருவருடைய மனதையும் எவ்வளவோ இளகச் செய்துவிட்டது. உண்மையிலேயே இவ்விந்திய நாட்டில் வந்து முதல் முதல் காலடிவைத்த இளவரசி தான் தானென்று அவ்வரசி பெருமை பாராட்டுகின்றாள். உங்களுடைய நல்வரவு பத்திரிகையில் நீங்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகள் மிகவும் சொல்வன்மையுடையனவாயிருந்தபோதிலும், பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தின் மற்றப்பாகங்களிலுள்ள பிரிடிஷ் குடிகளுக்கு நாங்கள் இங்கு பார்க்கும் காட்சி இத்தன்மையது என்று தெரியப்போகிறதில்லை. அந்த வார்த்தைகள், இந்திய நாட்டின் மேல் பாக வாசிகளாகிய நீங்கள் எங்கள் வரவேற்கக் கருதிச் செய்திருக்கும் ஏற்பாடுகள் விஷயத்தில் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டீர்களோ, அதையாவது, எவ்வளவு பேரன்பால் தூண்டப்பட்டீர்களோ, அதையாவது, சரியானபடி வெளிப்படுத்தப் போவதுமில்லை. இன்றைக்கு 30-வருஷங்களுக்கு முன்னே (ஒருநாள்கூட முந்திப்பிந்தி யில்லை) என் அருமைத் தகப்பனார் ராஜசக்கரவர்த்தி நாங்கள் இப்போதிருக்கும் இடத்துக்குச் சமீபத்திலேயே நின்று இந்தியாவைப் பார்க்கவேண்டுமென்ற

ஆசை யிறுதியும் மேலிட்டவராய்த் தாம் இருந்ததென்று சொன்னார். அதுபோலவே வேல்ஸ் இளவரசியும் நானும் இந்தியாவைப் போய்ப்பார்த்து வரவேண்டுமென்று கருதிக்கொண்டிருந்தோம். எங்களுடைய பேரெண்ணம் நிறைவேறும்படிச் செய்துவிட்டதற்காக நாங்களிருவரும் உங்களை மனப்பூர்வமாய் வந்தனஞ் செய்கின்றோம். என்னுடைய தந்தை செய்தமாதிரியே வேல்ஸ் இளவரசியும் நானும் செய்திருப்பதில் அவர் ஏற்படுத்திய மாமூலைத்தான் நாங்கள் அனுசரித்திருக்கிறோம். அந்த மாமூல் தலைமுறை தலைமுறையாய் அனுசரிக்கப்பட்டுக் கொண்டே போகும் என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய தந்தையார் மனதில் அவர் இவ்விந்திய நாட்டிற்கு வந்தது காரணமாக இந்நாட்டினிடத்து உண்டாகிய அன்பு மேலிட்டு, பற்றைப்போன்ற (அப்பற்று இதுவரையும் என்றும் குறைந்த தில்லை) பற்றொன்று எங்கள் மனதிலும் உதிக்குமென்றே நான் உறுதியாய் நம்புகிறேன். இவ்விந்திய ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த பலதாரிகளிலும் நாங்கள் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது வேல்ஸ் இளவரசியும் நானும் இந்திய ஜனங்களின் ஒற்றுமை யுணர்ச்சியையும் உள்ளன்பையும் பெறுவோமாயின், இவ்விந்திய நாட்டிற்குச் சுற்றுப்பிரயாணம் வரும்படியாக நாங்கள் பெற்ற பாக்கியத்தின்மேல் ஒரு பாக்கியம் படைத்தவர்களாவோம். கடல் கடந்துள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளைப் போய்ச் சுற்றிப் பார்த்துவர 4 - வருஷங்களுக்கு முன்னே நாங்கள் இங்கிலாண்டு விட்டு புறப்பட்டு மற்றவைகளுக்குப் போய்வந்தோம். அச்சுற்றுப் பிரயாணத்தின் முடிவுகாலமாகிய இச்சமயம் இவ்விந்திய நாட்டிற்கு வந்திருக்கிறோம். இந்த அழகிய நகரத்துக்கு நாங்கள் புதியோரும் அன்னியருமானாலும் உங்களுடைய முயற்சிகளைப்பற்றியும் நீங்கள் அடைந்த காரிய சித்திகளைப் பற்றியும் அதிகமாய் வாசித்திருக்கிறோம், கேட்டுமிருக்கிறோம். மேற்கிந்தியாவின் தலைநகராயிருப்பதைப்பற்றியும், ஐரோப்பாவோடு இந்தக்கீழ்நாட்டையிணைக்கும் துறைமுகமாயிருப்பது பற்றியும், இக்கீழ்நாட்டு மற்ற நகரங்களைவிட அதிகமாய் நற்கால வாழ்க்கைக்குற்ற வசதிகள் உண்டாகும்படியாய் இந்த பம்பாய் நகரம் தன்னை அமைத்துக்கொள்ளும் படியாயிற்று.



பம்பாய் நகரம் அதன் நிலைமைக்குத்தக்கபடி உயர்ந்து விளங்க வேண்டியதாயிருக்கிறது. அழகியதும் யாவருடைய மனதையும் கவருவதுமாகவுள்ள இவ்விந்திய நாட்டின் தலைவாயிலிலிருக்கும் பட்டணமாயிருப்பதுபற்றி அந்த நிலைமைக்குத் தக்கபடி அஃது அவ்வாறு விளங்குதல் சற்று கஷ்ட சாத்தியமாகத்தானிருக்கிறது. ஆனால் கடலிலிருந்த வண்ணமாய் நான் பம்பாய் நகரைப் பார்த்ததிலிருந்தும், பம்பாய்க் கரையினைச் சேர்ந்து இங்குள்ளவைகளையெல்லாம் நான் இப்போது கண்கூடாகப் பார்ப்பதிலிருந்தும் நான் அபிப்பிராயஞ் சொல்லக்கூடுமானால், பம்பாய் நகரமானது தன் கடமைகளைச் சரியாய்ச் செலுத்தக்கூடிய ஸ்திதியிலேயே இருக்கிறதென்பேன். அதனிலுள்ள கட்டடங்களின் அழகும் அதன் இயற்கையமைப்பால் விளையும் சௌகரியங்களும் ஒருபுறமிருக்க, அப்பட்டணம் வர்த்தக வசதிகளிலும் அதனைக் காட்டிலும் முக்கியமானதாகிய சுகாதார வசதிகளிலும் நோக்கமுடையதாயிருக்கிறது. கப்பல்கள் வந்து நிற்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் சேதுதுறையும் நகர விருத்திச் சங்கத்தார் புதிதாய்க் கட்டியிருக்கும் பெரிய தெருவும் என் பேரால் வழங்க விருப்பதில் எனக்குச் சந்தோஷந்தான். வர்த்தகத்தை நம்பியிருக்கும் மற்ற பெரிய பட்டணங்களைப் போலவே பம்பாய்க்கும் ஏற்றத் தாழ்ச்சிக் காலங்க ளிருந்தன. உங்கள் முனிசிபாலிடியின் சரித்திரம்போன்ற சரித்திரத்தை யுடையதாய் இவ்வேகாதிபத்தியத்தில் நான் சுற்றிப் பார்த்து வந்த பட்டணங்களுள் எவ்வளவோ பட்டணங்களிருக்கின்றன. உங்களுக்கு சமீபகாலம் வரையும் உன்னதமான கட்டடங்களையும் மற்றுஞ்சில சொத்துக்களையும் உடையவர்களாய் விட்டீர்கள்; அதுபற்றி நீங்கள் பெருமை பாராட்டலும் தகும். ஆனால், அதற்குத் தக்கபடி உங்கள் பட்டணத்தின் ஜனத்தொகை பெருத்துப் போய்விட்டது (சீருவிக்க முடியாமல் பெருத்துப் போய்விட்டதென்று கூடச்சொல்லலாம்). அதுபற்றி மேல்நாட்டில் எங்களை கவலைப்படுத்திய விஷயங்கள் இப்போது உங்களையும் கவலைப்படுத்துகின்றன. நீங்கள் இப்போது விசாலமான தெருக்களை எப்படி அமைக்கலா மென்றும், தொழிலாளிகள் வசிக்கும் இடங்களையும் தொழிற் கூடங்களையும் சுகாதாரக்குறைவின்றி எப்படி

அமைச்சரா மென்றும் ஆலோசனை செய்து வருகிறீர்கள். அக்கிராசனதிபதியாயுள்ள உமக்கும், பம்பாயின் க்ஷேமத்துக்காகப் பாடுபடுகிற எல்லோருக்கும் தெய்வம் அனுக்கிரகம் செய்யட்டும் என்று நான் விரும்புகிறேன். பிரதி மனிதனும் தன்னுடைய பட்டணத்தின் நன்மைக்காக ஏதேனும் செய்யவேண்டுமென்று பாடுபடுவதைவிட மேலான காரியமொன்று இருக்கிறதென்று என் புத்திக்குப் படவேயில்லை.

இளவரசியும் நானும் இப்போது புறப்பட்டுப்போகிற பிரயாணத்தைப்போன்ற பிரயாணத்துக்கு ஒரு குறையுண்டு. போகுமிடங்களில் ஒவ்வொன்றையும் பார்க்கவும், எங்களை நல்வரவு கூறி விருப்பாய் ஏற்பவர்கள் ஒவ்வொருவருக்கும், நாங்கள் உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம் என்று சொல்லவும், போதுமான சாவகாசமில்லை. என் தந்தையிடத்திருந்தும், காலஞ்சென்றுவிட்ட நமது அரசி (உங்களுடைய சக்கரவர்த்தினி) யினிடத்திருந்தும் இந்தியாவினிடத்தும் இந்தியர்களிடத்தும் ஆதரவு காட்டுதலை ஒரு சொத்தாகப் பெற்றிருக்கிறேன். என்னுடைய இளமைப்பருவந் தொட்டு இந்தியாவென்னும் பேருடன், அன்பு, ராஜவிசுவாசம், ஆணவம், மரியாதையாகிய நாற்குணங்களை சம்பந்தப்படுத்தி ஞாபகத்தில் வைத்து வந்திருக்கிறேன். அம்மாதிரி இளமைப்பருவந்தொட்டுக் கொண்டிருந்த எண்ணங்கள் இன்னும் சிலமாதங்களில் எனக்கு அனுபவ சித்தமாவதோடு உறுதிபெற்று பலப்படுமென்று நான் திட்டமாய் நம்புகிறேன். உங்களுடைய நகரிலுள்ள பொதுஸ்தாபனங்களையெல்லாம் நாங்கள் பார்க்கவேண்டுமென்று விரும்புகிறபடி பார்க்கமுடியாது. ஆனால் இந்தியாவின் மற்ற இடங்களிலே உங்கள் நகரிலுள்ள ஸ்தாபனங்களைப்போன்ற ஸ்தாபனங்களைப் பார்த்து விஷயங்களை அறிந்துகொள்ளச் சமயம் வாய்க்குமென்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் எங்களுடைய இந்தப் பிரயாணம் முடிந்து இங்கிலண்டுக்குத் திரும்பும்போது இந்திய ஜனங்களிடம் விசேஷ ஒற்றுமை யுணர்ச்சியும் பற்றுமுள்ளவர்களாய்த் திரும்பிப் போவோமென்று நம்புவதுடன், இந்தியாவுக்குள்ள குறைகளிலும், இந்திய விஷயங்களிலும் நீங்காத அக்கறையுள்ளவர்களாயும், இந்தியாவின் நன்மைக்கும் இந்தியர்களின் க்ஷேமத்துக்கும் உழைக்கும்



உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களாயுள்ள பிரிடிஷாரையும், இந்தியரையும் சேர்ந்த பலவகுப்புகளையும், அறிந்தவர்களாயும், திரும்புவோமென்று நம்புகிறோம்.

நீங்கள் சக்கரவர்த்தியிடத்தும் அவர் ஆட்சியிடத்தும் ராஜவிசுவாசத்துடன் பக்தி வைத்திருப்பதாகத் தெரிவிக்கச் சொன்னதை, ராஜ சக்கரவர்த்திக்குத் தெரிவிக்க நான் தவறமாட்டேன். நாம் இன்று அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடுவதைக் கருதும்போது அந்த உறுதிமொழிகள் அவருக்கு விசேஷ திருப்தியை உண்டாக்கும். இந்தப் பெரிய ஜனசமூகம் இம்மாதிரியே இன்னும் அவருடைய பிறந்த நாள் திரும்பி வந்துகொண்டிருக்கவேண்டுமென்று விரும்புவதில் என்னுடன் கலக்குமென்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

---

## பம்பாய் நகரத்தில்

## வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும்.

10-ந்தேதி மாலை $4\frac{1}{2}$-மணிக்கு வேல்ஸ் இளவரசர் பம்பாயிலே அவர் வரவின் அறிகுறியாக ஸ்தாபனமாகப்போகின்ற காட்சிப் பங்களாவிற்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். பிறகு வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் கப்பல் செப்புமிடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

## வேல்ஸ் இளவரசிக்கு மாதர்கள் செய்த உபசரணைகள்.

பிறகு வேல்ஸ் இளவரசியார் பம்பாய் மாதர்களுக்குப் பேட்டியளிக்கும் பொருட்டுத் தனியாக டவுன் ஹாலில் வந்திறங்கினார். அம்மண்டபமானது மேற்படி விசேஷத்தின்பொருட்டு வெகு ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. காஷ்மீர பாரஸீக தேசங்களிற் செய்துவந்த கம்பளவிரிப்புக்களும், சுவர்களிலும் தூண்களிலும் செய்

இருந்த பட்டு சரிகை அலங்காரங்களும், மிகச்சிறப்பான "குளோப்" "லஸ்தர்" முதலியவற்றின் ஒளியும் எங்கு பார்த்தாலும் புஷ்பமாலைகளும் பூம்பந்தல்களும் குளிர்ச்சி பெறவிளங்கிய தோற்றமும், மண்டபத்தியில் வேல்ஸ் இளவரசிக்குப் போட்டிருந்த பொற்சிங்காதனமும் பார்ப்போர் விழிகளைக் களிப்புச் செய்தன. பார்ஸிகள், ஹிந்துக்கள், மகமதியர்கள், ஐரோப்பியர் என்ற 4 வகைப் பெண்மணிகளும் தமக்குரிய ஆபரணங்களுடனும் ஆடைகளுடனும் இனிது விளங்கினர். லேடி ஜம்ஸெட்ஜி, லேடி பெடிட், லேடி மேட்டா என்னும் மூன்று மாதர்களுமே உபசாரணை முதலியவற்றில் தலைமைவகித்தனர்.

## பார்ஸிமாதர்கள் வேல்ஸ் இளவரசிக்கு திருஷ்டி கழித்தமை.

பார்ஸி மாதர்கள் வேல்ஸ் இளவரசிக்கு திருஷ்டி கழித்த மாதிரி தமிழ் நாட்டாருக்கு வெகு விநோதமாகத் தோன்றும். ஓர் தேங்காயையும், கோழி முட்டையையும் ஏழுமுறை வேல்ஸ் இளவரசியின் தலையை சுற்றிக் கொண்டுவந்து பிறகு உடைத்து விட்டார்கள். பிறகு தண்ணீர்ப் பீங்கானொன்றை ஏழுமுறை தலையைச்சுற்றிக் கொணர்ந்து கீழே வைத்தார்கள். பிறகு வேல்ஸ் இளவரசியின் தலையில் சிறிது அக்ஷதை (அரிசி) போடப்பட்டது. கடைசியாக ஓர் பார்ஸி மாது தனது விரல்களை மடித்துக் கன்னத்தில் சொடுக்கிக் கொண்டு வேல்ஸ் இளவரசிக்குத் திருஷ்டி கழித்தனராம்.

## ஹிந்து மாதர்களின் உபசாரம்.

பிறகு ஹிந்து மாதர்கள் பலர் ஓர் தட்டிலே தீபமேற்றி[illegible] அத்தட்டில் வைத்திருந்த குங்குமத்தை வேல்ஸ் இளவரசி புருவத்தில் தீற்றி உபசரிக்கும் பொருட்டுச் சென்றார்கள். ஆனால் வேல்ஸ் இளவரசிக்கு அது பிரியமில்லை யாதலால் அவ்விசேஷம் நடத்தப்படவில்லை.



## மகமதிய மாதர்களின் உபசாரம்.

அதன்பின் மகமதியமாதர்கள் "ஆமீன்" என்றதோர் விசேஷம் செய்தார்கள். அதில் முதலாவது வேல்ஸ் இளவரசிக்குமாலை சூட்டினார்கள். பிறகு வாதாங்கொட்டைகள் இளவரசியின் தலையைச்சுற்றி எறியப்பட்டன. பிறகு வேல்ஸ் இளவரசிக்குத் தேங்காய் கொடுத்தார்கள்.

## உபசாரப் பத்திரிகை படித்தல்.

பின்பு மராட்டி, உருது, குஜராத்தி என்ற பாஷைகளிலே உபசாரப் பத்திரிகைகள் படிக்கப்பட்டன. வேல்ஸ் இளவரசியார் மறுமொழி கூறியபின் சிற்றுண்டி யளித்தல், மாலைபோடுதல் முதலிய உபசாரங்கள் நடந்தன.

## முத்துமழை சொரிதல்.

வேல்ஸ் இளவரசி மண்டபத்திலிருந்து புறப்பட்டுப்போகுந் தருணத்தில் மிஸ்டர் தாபூர் சந்த் என்ற ஹிந்துவர்த்தகரின் மனைவி வேல்ஸ் இளவரசியின் முடிமீது முத்துக்களை சொரிந்து பொழிந்தனள். வேல்ஸ் இளவரசி மிகவும் சந்தோஷம் கொண்டு புன்னகை பூத்திருந்தனர். (11-ந்தேதி இரவு கவர்னர் மாளிகையில் இளவரசர் அனைவருக்கும் பேட்டி யளித்த விவரம்)

## பம்பாயில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியும்.

பம்பாயில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் சனிக்கிழமை யிரவு பம்பாய் கவர்ன்மெண்ட் ஹௌஸில் சிலதேச மன்னர்களுக்கும் கனவான்களுக்கும் அவர் பேட்டிகொடுத்தார். முதலில் தேசமன்னர்களுக்கும் டெக்கான் சர்தார்களுக்கும் பேட்டிகொடுக்கப்பட்டது.

அப்புறம் சில கனவான்களுக்குத் தனித்தனியே பேட்டி கொடுக்கப்படாமல் பொதுவாய் ஒரு பேட்டி கொடுக்கப்பட்டது. ஒரு சுமார் 4000 ஜனங்கள் கூட்டமிருக்குமென்று பத்திரிகை நிருபர்கள் தெரிவிக்கிறார்கள். கவர்ன்மெண்ட் ஹௌஸ் எங்கும் ஒரே பிரகாசமாய் இருந்ததாம். ஜப்பானிய லாந்தர்கள் எங்கே பார்த்தாலும் போடப்பட்டிருந்தது பற்றி அவ்விளக்குகளின் வெளிச்சம் பார்ப்போர் கண்ணைப் பறித்துக்கொண்டு போகும்படியா யிருந்ததாம்.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமையா யிருந்தபடியால் சக்கரவர்த்தி குமாரர் யாதொரு விசேஷ வேலையும் வைத்துக் கொள்ளவில்லை. காலை ரெயிலில் பம்பாய்ப் பட்டணத்தின் எல்லைப்புறங்களை மோடார்வண்டி சவாரிபோய்ப் பார்த்துவிட்டு வந்தார். சாயங்காலம் கோயிலுக்குப் போய்வந்தார்.

மறுநாள் திங்கட்கிழமை யாதலால் அவர் சும்மாவிராமல் சுற்றுப் பிரயாணப்பட்டியில் கண்டபடி தமக்கு ஏற்பட்ட வேலையைச் செய்ய ஆரம்பித்தார். வெள்ளிக்கிழமையன்று வந்த தேசமன்னர்களை அவர்களுடைய பங்களாவிலேயே போய் மறுபேட்டியாகப் பார்த்து வரவில்லையோ அந்தத் தேச மன்னர்களைப்போய் மறுபேட்டி கண்டுவந்தார். அவருடன் பம்பாய் பொலிடிகல் டிபார்ட்மெண்ட் முக்கிய காரியதரிசி மிஸ்டர் எட்ஜர்லியும் அவருடைய பரிவாரக் கூட்டத்துக்கு முக்கியஸ்தராகிய ஸர் வால்டர் லாரென்ஸூம், போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஜெல்லும் சென்றார்கள். சரியாய் காலமே 10-45 மணிக்கு கவர்ன்மெண்ட் ஹவுஸை விட்டுப் புறப்பட்டார்கள். அவர் போகும் வழியெல்லாம் அவரைப் பார்க்க வேண்டுமென்று கூடியிருந்த ஜனங்கள் சந்தோஷ மிகுதியால் ஆரவாரஞ் செய்யச் சென்றார். அவர் பார்த்து வரவேண்டுமென்ற தேசமன்னர்களின் பங்களாக்களோ எவ்வளவோ அலங்கரிக்கப்பட்டிருந்தன. அவர் முதலில் ராஜபிப்லா நவாப் பங்களாவுக்குச் சென்றார். அங்கு போய்ச் சேர்ந்ததும் நவாப்பும் பொலிடிகல் ஆபீஸரும் வேல்ஸ் இளவரசரை தர்பார் அறைக்கு அழைத்துச் சென்று அவருக்கு ஆசனமிட்டு உட்காரச்செய்ய சக்கரவர்த்தி குமாரர் அந்த நவாப்புடனும் அவருடைய சமஸ்தான உயர்பதவி உத்தியோகஸ்தர்களுடனும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு



விடைபெற்றுக்கொண்டனர். அங்கிருந்து புறப்பட்டவர் ஜுனகாட் நவாபின் பங்களா போய்ச்சேர்ந்தார். அங்கும் அவர் ஜுனகாட் நவாப்பாலும், பொலிடிகல் ஆபீஸராலும் நல்வரவுகூறி உபசரிக்கப்பட்டார். அப்புறம் இளவரசர் கட்ச் நாட்டுராவ் இறங்கியிருந்த பங்களாவுக்குச்சென்று அவரை மறுபேட்டி கண்டுவிட்டு நவநகரத்து ஜாம் சாகிப்பை அவருடைய சொந்த அரண்மனையிலேயே போய்ப் பார்த்தார். ஜாம் சாகிப் விசேஷ ஆசார உபசாரங்கள் செய்து தம்முடைய ராஜவிசுவாசத்தை வெளியிட்டார். கடைசியாக கொண்டால் நாட்டு தாக்கோர் சாகிப் பங்களாவுக்குச் சென்றார். அவர் தம்முடைய பங்களாவின் வாசற்படியண்டை சக்கரவர்த்தி குமாரர் வந்துசேரும் நல்லவேளை யெப்போதோவென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாராம். தாக்கோர் சாகிப் பங்களாவில் இளவரசருக்கு நடந்த மரியாதைகள் மற்ற இடங்களில் நடந்த மரியாதைகளைவிட எந்த அம்சத்திலும் குறைந்ததா யிருக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அன்று சாயங்காலம் வேல்ஸ் இளவரசர் பம்பாய்த் துறைமுகத்தில் புதுரேவு ஒன்று கட்டுவதற்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அவர் பம்பாய்த்துறைமுகத்துக்குப் புறப்பட்டுப்போவார், அப்போது அவரைப் பார்க்கலாமென்ற யோசனை மேலிட்டு அவர் கவர்ன்மெண்ட் ஹவுஸைவிட்டுப் புறப்பட்டு போகும்வழி நெடுகிலும் வீதிகளின் இருபக்கத்துமுள்ள வீடுகளின் மெத்தைகளிலும் பலகணிகளிலும் தெருமுன்றில்களிலும் ஜனங்கள் மொய்த்து நின்றார்களாம். ஜனங்களின் முகவரிசைகள் அலைவரிசைகளை யொப்பக் காணப்பட்டனவாம். அப்படியாகத் தங்களிருவருடைய வரவையும் எதிர்பார்த்து நின்ற ஜனங்கள் தங்களைக் கண்ணாரப்பார்த்து சந்தோஷிக்கத் துறைமுகம் நோக்கிச்சென்ற சக்கரவர்த்திகுமாரரும் அவரது மனைவியாரும் பம்பாய் போர்ட் டிரஸ்ட்-சேர்மனாலும் மற்ற மெம்பர்களாலும் வரவேற்கப்பட்டார்கள். உடனே பம்பாய் கவர்னர் லார்ட் லாயிடன் வேல்ஸ் இளவரசருக்கு போர்ட் டிரஸ்ட் சேர்மனை அறிமுகம் செய்துவைத்தார். அந்தச் சேர்மன் போர்ட் டிரஸ்ட் சீப் இஞ்சினீரை இளவரசருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்புறம் போர்ட் டிரஸ்ட் சேர்மனது மனைவி ஒரு பூச்செண்டை

யெடுத்து வந்து வேல்ஸ் இளவரசி கையில் கொடுத்தான். இளவரசியும் அதனை சிரித்த முகத்துடன் வாங்கிக்கொண்டார்கள். அதன்மேல் இளவரசர் அங்கு அமைக்கப்பட்ட உயர் மேடைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டார். ஒரு நல்வரவு பத்திரிகை வாசித்துக் கொடுக்கப்பட்டு, புது ரேவு துறைக்கு அஸ்திவாரக்கல் நாட்டும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். போர்ட் டிரஸ்ட் சேர்மன் கேட்டுக்கொண்டபடியே இளவரசர் அஸ்திவாரக் கல்லை நாட்டி விட்டு அவர்களுடைய நல்வரவுப் பத்திரிகைக்குப் பதில் சொன்னார். அதனில் அவர் 30-வருஷங்களுக்கு முன்னே தம்முடைய தகப்பனால் அஸ்திவாரக்கல் நாட்டப்பெற்ற ரேவுத்துறைக்கு பிரின்ஸஸ் டாக் (Prince's Dock) என்ற பெயர் கொடுக்கப்பட்டது போல, இப்போது தம்மால் அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டிருக்கும் ரேவுக்கு அலெக்ஸாண்ட்ரா டாக் (Alexandra Dock) என்று வைக்கப்படுதல் தமது தாய்க்கு மிகுந்த சந்தோஷமாயிருக்குமென்று சொன்னார். இரவு பைகல்லா கிளப்பார் தங்கள் கிளப்பில் ஒரு பெரிய விளையாட்டும், விருந்தும் நடத்தி, இளவரசரையும் இளவரசியையும் உபசரித்தார்கள்.

---

பம்பாய் மாதர்களின் உபசாரப் பத்திரிகைக்கு

வேல்ஸ் இளவரசியார் கூறிய மறுமொழி.

பம்பாய் மாதர்கள் படித்த உபசாரனைப் பத்திரிகைக்கு வேல்ஸ் இளவரசியார் பின்வருமாறு மறுமொழி அளித்தனர். "உங்களது இனிய உபசாரங்களின் பொருட்டு நான் உங்களுக்கு மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றேன். மேற்படி பத்திரிகை படிக்குமாறு உங்களைத் தூண்டிய கருத்தினை [illegible] அறிவேன். எனது ஆரம்பத்திலேயே இந்தியமாதர்களைப்பற்றி மிக மேலான எண்ணம் உண்டாகும்படி நீங்கள் செய்து விட்டீர்கள். எனது யாத்திரையின் முக்கியக் கருத்துக்களிலே இந்திய மாதர்களுடன் நல்ல பழக்கம் செய்துகொள்ள வேண்டுமென்பதொன்று. உங்களுடன் பழக்கம் அதிகப்பட அதிகப்பட உங்களது புகழ்மிக்க குணங்களில் எனது மதிப்பு அதிகப்படுமென நம்புகிறேன். எனக்கு இப்போதேற்பட்



டிருக்கும் நல்லெண்ணம், இன்னும் இந்தியா முழுதிலும் செய்யப் போகிற யாத்திரையிலே ஸ்திரப்பட்டு விடுமாயின், நான் எனது தேசம் சென்றபிறகும், உங்களைப்பற்றி என்றும் இனிய ஞாபகங்களிருக்கும். அதன்பேரில் நமக்குள்ளே யிருக்கும் பரஸ்பரமதிப்பும், நல்லெண்ணமும் மிகுதிப்படும்."

அவர்கள் இருவரும் அதற்குப்பிறகு ஒருநாள்தான் பம்பாயில் தாமதித்தார்கள். அடுத்த நாள் இராத்திரி, அதாவது, செவ்வாய்க் கிழமை இராத்திரி, அவர்கள் பம்பாயை விட்டு புறப்பட்டு விட்டார்கள்.

---

## இந்தூர்.

(15உ—17உ)

14உ செவ்வாய்க்கிழமை ராத்திரி வேல்ஸ் இளவரசர் இளவரசியுடன் பம்பாயை விட்டுப் பிரயாணமானாரென்றோம். அவர்கள் இருவரும் புறப்பட்டுப் போகும் வேளை நடு இராத்திரி வேளையாயிருந்தாலும் ஏராளமான ஜனங்கள் அவர்களிருவரையும் வழிவிடுவோரையொப்ப ரெயில்வேலயனுக்கு இருபுறமும் நின்று அவர்களேறியிருந்த வண்டி புறப்பட்டதும் ஆரவாரித்தார்கள். புதன்கிழமையன்று பிற்பகல் 1-மணிச் சுமாருக்கு ரட்லாம் ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தார்கள். அந்த ஸ்டேஷனுக்கு இடையேயுள்ள ஸ்டேஷன்கள் ஒவ்வொன்றையும் இளவரசரின் ஸலூன் வண்டி தாண்டிச் செல்லும்போது சுற்றுப் பக்கத்தேயுள்ள ஜனங்கள் இன்று சக்கரவர்த்தி குமாரரும், அவரது மனைவியாரும் ரெயிலோடு இந்தூர் போகிறார்களாதலால் அவர்களுடைய முகம் எப்படியிருக்கிறதென்பதை பார்த்து வருவோம் என்ற எண்ணமேலிட்டவர்களாய், ரெயில்பாதையின் இருபுறத்திலும் போய் மொய்த்து நின்றார்கள். சில ஜனங்கள் இளவரசரின் ஸலூன் வண்டி கொஞ்சம் தூரத்தில் வரும்போதே தங்கள் கையை உயர்த்தி நல்வரவு கூறுவோரை யொப்ப ஜாடை செய்தார்கள். சிலர் தங்கள் அங்கவஸ்திரத்தை யெடுத்து வீசினார்கள். சிலர் தங்களுடன் கொண்டு வந்திருந்த கொடிச்சீலையைப் பறக்கவிட்டுக்கொண்டு நின்றார்கள்.

அவர்களுடைய ராஜ விசுவாசத்தை இளவரசரும் இளவரசியும் கவனித்திருப்பார்களென்றே நாம் நினைக்கிறோம். "தங்களுடைய ஊர்களை நாம் கடந்து செல்வதையும் கவனியாது இந்த ஜனங்கள் நம்மிருவரையும் இவ்வளவு உள்ளன்போடு வரவேற்கிறார்களே, இவர்கள் ஊரில் சில தினங்கள் தாமதித்துப் போவதாயிருந்தால் இவர்கள் இன்னும் எவ்வளவாக நம்மை வரவேற்று உபசரிக்க மாட்டார்கள்," என்று இளவரசர் மனதிலும் இளவரசி மனதிலும் பட்டிருக்க வேண்டும்.

ரட்லாம் ஸ்டேஷனில் சக்கரவர்த்தி குமாரரும் அவரது மனைவியும் பசிதீரச் சிறிது ஆகாரம் சாப்பிட்டானதும் மறுபடியும் வண்டி விடப்பட்டது. சாயங்காலம் 5-மணிச்சுமாருக்கு இந்தூர் மகாராஜாவும் (அவர் சிறுபிள்ளை 16 வயதுக்கு மேலில்லை) ஒரு சுமார் 150 தேசத்தலைவர்களும் இளவரசரையும் அவரது மனைவியையும் வரவேற்கச் சித்தமாயிருந்தார்கள். போபால் பேகம் (இவர் ஒரு மகமதிய ஸ்திரீ) வந்திருந்தார்கள். ரீவா, ஆர்ச்சா, தார், தேவாஸ், சாம்பார், ஜாவோரா, ராஜ்கர், ரட்லாம், சார்மாரா இந்த நாட்டுத்தலைவர்களும் வேறு சில குறுநிலத்தலைவர்களும் வந்திருந்தார்கள். மத்திய இந்தியாவின் கவர்னர் ஜெனரலுடைய ஏஜெண்டாயிருக்கும் மேஜர் டாலியும், இந்தூர் ரெஸிடெண்ட் மிஸ்டர் ஜோஸால் கெட்டும் சில சிவில், ராணுவ உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தார்கள். சாயங்கால வேளையாயிருந்தபடியால் ஸ்டேஷன் எங்கும் நல்ல வெளிச்சம் போடப்பட்டிருந்தது. இளவரசர் ஸ்பெஷல் ஸ்டேஷன் மேடைக்கு வந்து நின்றதும் வயதில் சிறிய ஹோல்கார் மகாராஜா அவருக்கும் இளவரசிக்கும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். இளவரசர் மகாராஜாவுடன் கைகுலுக்கினார். உடனே அங்கு வந்திருந்த பல குறுதேசத்தலைவர்களுக்கும் பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் இளவரசர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அது முடிந்ததும், அவர் அங்கு வந்திருந்த கௌரவக்காப்புப் படையைச் சிறிது நேரம் பார்வையிட்டுக்கொண்டு நின்றார். இளவரசியோ அந்த நேரமெல்லாம் போபால் பேகமுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.



சக்கரவர்த்தி குமாரரும் இளவரசியும் ஸ்டேஷனைவிட்டு அந்த சமஸ்தான ரெஸிடெண்டின் பங்களாவுக்குப் புறப்படுஞ்சமயத்தில் 31-வெடிகள் போடப்பட்டன. ஹோல்கார் மகாராஜா இளவரசர் கூடவே போனார். ரெஸிடெண்ட் பங்களாவின் எல்லைப் புறத்தில் மகாராஜாவின் துருப்புகள் வரிசைப்படுத்தி நிறுத்தப்பட்டிருந்தன. அங்கிருந்து பங்களாவரையில் ரஸ்தாவின் இருபுறத்திலும் இந்திய சைனியத்தைச்சேர்ந்த துருப்புகள் வரிசைப்படுத்தி நிறுத்தப்பட்டிருந்தன. அந்தத் துருப்புகள் இளவரசரும், இளவரசியும் தங்களைக் கடந்து போகும்போது ராணுவ முறைப்படி கையெடுத்து சலாம் செய்தன. மறுபடியும் 31-குண்டுகள் போடப்பட்டன. சக்கரவர்த்தி குமாரரும் ரெஸிடெண்ட் பங்களா போய்ச் சேர்ந்தார்.

மறுபடியும் இரவு 6-மணிச் சுமாருக்கு சமஸ்தான உத்தியோகஸ்தர்களுள் முக்கியஸ்தர்களாயுள்ள நால்வர் ராஜ விருந்தினர்களின் க்ஷேம சுகத்தைப்பற்றி விசாரித்துவிட்டு வருவதற்காக ரெஸிடென்ஸிக்குப் போனார்கள். அப்படிப்போனவர்களை இளவரசரின் பரிவாரக்கூட்டத்தைச் சேர்ந்த இரண்டு உத்தியோகஸ்தர்கள் அத்தரும், வெற்றிலை பாக்கும் கொடுத்து மரியாதை செய்து அனுப்பினார்கள். அன்றிரவு இந்தூர் நகரமெங்கும் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்தது, ஒவ்வொரு வீடும் அதன் சொந்தக்காரருடைய ஸ்திதிக்குத் தக்கபடி அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏழை ஜனங்களும் தங்கள் வீடுகளை தங்களுடைய சக்திக்குத் தக்கபடி அலங்கரித்திருந்தார்கள். அன்றிரவு வாணவேடிக்கையும் நடத்தப்பட்டது.

வேல்ஸ் இளவரசரைப் பார்த்துவிட்டுப் போவதற்காகவே இந்தூருக்கு வந்திருந்த மத்திய இந்தியாவைச் சேர்ந்த தேசத்தலைவர்களுக்கு பேட்டிகொடுப்பதற்காக வியாழக்கிழமை காலமே ஒரு தர்பார் நடத்தப்பட்டது. அந்தத் தர்பாருக்கு 55 குறுநிலத் தலைவர்கள் வந்திருந்தார்கள். காலமே 9-மணிக்கு அத்தலைவர்களின் வரவை யறிவிக்கும் அறிகுறியாக பீரங்கி வெடிகளின் சப்தம் இந்தூர் நகரத்து ஜனங்களுக்குக் கேட்க ஆரம்பித்ததாம். தர்பார் கொட்டகையில் ஓர் உயர்மேடை கட்டி அதனில் சக்கரவர்த்திகுமா

ருக்கும், அவரது மனைவிக்கும் ஆசன மமைக்கப்பட்டிரு குருகுலத் தலைவர்கள் தர்பார் கொட்டகை வாசலில் வந்திற வுடன் அவர்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி 11 குண்டு குக் குறையாமலும் 19 குண்டுகளுக்கு மேற்படாமலும் வெ போடப்பட்டன. அவர்கள் உள்ளே அழைத்துக்கொண்டு பட்டு அவரவர்களுக்கு ஏற்பட்டிருந்த இடத்தில் உட்கார்த் டார்கள்.

காலமே 11-மணிச் சுமாருக்கு வேல்ஸ் இளவரசர் கொட்டகை வந்து சேர்ந்தார். (அதற்கு முன்னேயே இள வந்துவிட்டார்கள்.) அப்போது 31 வெடிகள் போடப்பட் எல்லோரும் வந்துசேர்ந்து அவரவர் இருப்பிடத்தில் அமர்ந் னர், மேஜர் டாலியின் கீழுள்ள உத்தியோகஸ்தர் தர்பாரை பிக்கலாமா வென்று கேட்டார். அப்படியே உத்தரவு கொடுக்க டவுடன், போபால் பேகமும், மற்றத் தலைவர்களும் இளவரச பேட்டிசெய்து வைக்கப்பட்டார்கள். போபால் பேகம் மக மாதாதலால் கோஷா வழக்கத்தையொட்டி முகத்துக்கு சீலையொன்று போட்டுக்கொண்டிருந்தார்கள். இளவரசரை வொருவரும் காணிக்கைவைத்தே பேட்டிகண்டார்கள். அ அவைகளை ஏற்ற பாவனையாய் கையால் தொட்டார். எல்லே பேட்டிசெய்து வைக்கப்பட்ட பின்னர், சக்கரவர்த்திகுமார பாருக்கு வந்திருந்தவர்களைப் பார்த்து சிறியதோர் பிரசங்கம் தார்.

அந்தப் பிரசங்கத்தில், தர்பாருக்கு வந்திருந்த குருகுலத் வர்களைப் பார்க்க நல்லசமயம் வாய்த்ததென்று தாம் சந்தே படுவதாயும், அவர்களைச் சிறிது சாவகாசமாய்ப் பார்க்கவேண் ன்று தாம் விரும்பியபடிப் பார்க்கச் சௌகரியப்படாமல் பே தென்றும், தமக்கு அத்தலைவர்களை அவர்களிறங்கியிருக்கும் ளாவிலே போய்ப்பார்த்து வர சாவகாசமில்லாமற் போனது இப்படி தர்பார் கூட்டி, எல்லோரையும் ஏககாலத்தில் ஒரேயிட பார்த்ததென்றும்சொன்னார். பிரசங்கம் முடிந்ததும் அந்த யர்ந்த குருகுலத்தலைவர்களுக்கு இளவரசரே தம்கையால் அத்



வெற்றிலைப்பாக்கும் கொடுத்தார். மற்றவர்களுக்குப் பொலிடிகல் ஆபீஸர்களால் கொடுக்கப்பட்டன. உடனே தர்பார் கலைந்தது. இளவரசரும், மற்றவர்களும் தர்பாருக்கு வந்தபோது எவ்வளவு மரியாதை குண்டுகள் போடப்பட்டனவோ, அவ்வளவு மரியாதைகுண்டுகள் போட வெளிக்கொண்டார்கள்.

அன்று சாயங்காலம் 5-மணிக்கு ரெஸிடெண்ட் பங்களாவின் வெளிப் புறத்தேயுள்ளபசும் புல் தரையில் ஒரு தோட்டக்கச்சேரி நடத்தப்பட்டது. அத்தோட்டக் கச்சேரிக்கு ஹோல்கார் மகாராஜாவையும் போபால் பேகத்தையும் சேர்த்து 20 முதல் அந்தஸ்து தேசத்தலைவர்கள் வந்திருந்தார்கள். அவர்களையெல்லாம் மேஜர் டாலியும் அவருடைய மனைவியாரும் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள். தோட்டக் கச்சேரி ஆரம்பம் ஆவதற்கு சிறிது முன்னாலேயே ரெஸிடெண்ட் பங்களாவுக்கு வந்து சேர்ந்த போபால் பேகத்தை மேஜர் டாலியின் மனைவி மிஸ்ஸெஸ் டாலி, பங்களாவின் உட்புறத்தில் வேல்ஸ் இளவரசியிருந்த அறைக்கு அவ்வரசியை ஏகாந்தத்தில் காண்பதற்காக அழைத்துச் சென்றாள். அங்கு இவ்வரசியோடு சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அம்மாது கோஷாஸ்திரீயாதல்பற்றி அவருக்கென்று தனியாய் அமைக்கப்பட்ட கூடாரத்துக்குள் சென்று விட்டார். தோட்டக்கச்சேரிக்கு வரவேண்டுமென்று அழைக்கப்பட்டிருந்தவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்களென்று தெரிய வந்தவுடன், வேல்ஸ் இளவரசர் இளவரசியுடன் பங்களா மெத்தையை விட்டு இறங்கி கச்சேரி நடக்கும் இடம்வந்து சேர்ந்தார். வேல்ஸ் இளவரசர் அக்கச்சேரி நடந்த சமயத்தில் அங்கு வந்திருந்த தேசத் தலைவர்களுடன் கைகுலுக்கி ஒவ்வொருவருடனும் தனித்தனியே வெகுசரசமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். ஒரு மணி நேரம் போல இளவரசரும் இளவரசியும் அக்கச்சேரி நடக்கு மிடத்தில் தாமதித்து உல்லாசமாய்ப் பொழுது போக்கினார்கள். கச்சேரியைவிட்டு பங்களாவுக்குப் போவதற்குமுன்னே வேல்ஸ் இளவரசர் மேஜர் டாலியோடு போபால் பேகத்தைப் பார்த்துவர அம்மாது தனித்திருந்த கூடாரத்துக்குச் சென்றார். அப்போது அம்மாது சிரோன்மணி வலைச்சீரையால் தம்மைப் போர்த்துக்கொண்டு கூடாரத்துக்கு வெளியே

வந்து சக்ரவர்த்தி குமாரரை வரவேற்றார். இரவு 8-மணிக்கு இளவரசர், இளவரசி, இவர்கள் இருவரையும் கருதி ஒரு ராஜ விருந்து செய்யப்பட்டது. அதற்கு முக்கியமாயுள்ள சிவில் ராணுவ உத்தியோகஸ்தர்கள் வந்திருந்தார்கள். விருந்து நடந்து முடிந்ததும் ரெஸிடெண்டின் பங்களாவிலேயே ஒரு ரிஸெப்ஷன் (Reception) நடந்தது. அதற்குத் தேசத்தலைவர்கள் பலரும் வந்திருந்தார்கள். அச்சமயம் போபால் பேகத்துக்கு G. C. I. E. பட்டம் சூட்டப்பட்டது; ஸைலானாராஜாவுக்கு K. C. I. E. பட்டம் சூட்டப்பட்டது.

17-தேதி வெள்ளிக்கிழமை காலமே வேல்ஸ் இளவரசர் போபால் நாட்டு விக்டோரியா சேட்டிப் படையினைப் பார்வையிட்டார். யார்க், லங்காஸ்டர் ரெஜிமெண்டுகளுக்குப் புதுக்கொடிகளும் கொடுத்தார். நடுப்பகல் நேரம் ஹோல்கார் மகாராஜா வேல்ஸ் இளவரசரை ரெஸிடெண்ட் பங்களாவில் வந்து பேட்டி கண்டார். வேல்ஸ் இளவரசரும் மகாராஜாவை அவருடைய அரண்மனையில் போய் மறுபேட்டி கண்டு வந்தார். அந்த நேரத்திற்குள் இளவரசி, போபால் பேகத்தைப் போய் மறுபேட்டி கண்டு வந்தார். நேற்றுப் பிற்பகல் எட்வர்ட் சக்ரவர்த்தியின் முடிசூட்டு ஞாபகசின்னமாக இந்தூர் தர்பாரால் கட்டி விடப்பட்ட எட்வர்ட் ஹாலை வேல்ஸ் இளவசர் திறந்து வைத்தார். சாயங்காலம் அவர் இளவரசியுடன் உதயபுரத்துக்குப் பிரயாணமானார்கள்.

அவர் இரவு நேரத்தில் ரெயில்பிரயாணம் செய்தாராயினும், ரெயில்வே பாதைக்கு அக்கம்பக்கத்துள்ள ஜனங்கள் தீவர்த்திகளைப் பிடித்துக்கொண்டு ரெயிலோடு போகும் சக்ரவர்த்தி குமாரரையும் அவருடைய மனைவியாரையும் பார்க்க வந்திருந்தார்கள்.

## உதயபுரம்.

(18௳—20௳)

18௳ காலமே 8-30 மணிக்கு உதயபுரம போய்ச் சேர்ந்தவுடன் உதயபுரம் மகாராணாவும் மீவார்நாட்டு சர்தார்களும் ரெயில்வேஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள். கவர்னர் ஜெனராலுடைய ஏஜெண்டும்



அவருடைய சிப்பந்திகளும், மீவார்நாட்டு ரெஸிடெண்டும் அவருடைய சிப்பந்திகளும் வந்திருந்தார்கள். இளவரசரும் இளவரசியும் வந்து இறங்கினவுடன் கவர்னர் ஜெனராலுடைய ஏஜெண்டு உதயபுரம் மகாராணாவையும் மீவார் ரெஸிடெண்டையும் சக்ரவர்த்தி குமாரருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அப்புறம் மீவார் ரெஸிடெண்டின் பங்களாவுக்கு இளவரசரும், மகாராணாவுமாக முன்னால் ஒரு வண்டியில் போனார்கள். பின்னால் கவர்னர் ஜெனரலது ஏஜெண்டு வேறொரு வண்டியில் இளவரசியை அழைத்துச் சென்றார். மகாராணா இளவரசரை ரெஸிடென்ஸியில் கொண்டுபோய் விட்டுச் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுத் தம்முடைய அரண்மனைக்கு வந்துவிட்டார். அப்புறம் 11-மணிக்குமேல் மகாராணாவின் முக்கிய சர்தார்கள் போய் இளவரசர் இளவரசி இவர்கள் இருவருடைய தேக சௌக்கியத்தையும் பற்றி விசாரித்துவிட்டு வந்தார்கள். அப்போது அவர்களுக்கு அத்தரும் வெற்றிலைப்பாக்கும் கொடுத்து மரியாதை செய்யப் பட்டது. அதன் பிறகு சிறிது நேரத்திற் கெல்லாம் உதயபுரம் மகாராணா இளவரசரை ரெஸிடென்ஸியில் போய் பேட்டி கண்டு வந்தார். இளவரசர் மகாராஜாவுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து அத்தர் வெற்றிலை முதலானவை அவருக்குக் கொடுத்து அனுப்பிவிட்டு ஒருமணிநேரம் கழித்துத் தாம் புறப்பட்டு மகாராணாவின் அரண்மனைக்குச் சென்று அவரை மறுபேட்டி கண்டு வந்தார். இரவு நகரெங்கும் தீப அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. மகாராணா, ராஜ விருந்தினர் இருவருக்கும் தமது அரண்மனையில் ஒரு விருந்து செய்தார்.

உதயபுரம் மகாராணா சனிக்கிழமையன்று ராஜ விருந்தினர்களிருவருக்கும் தமது மாளிகையில் விருந்து செய்துவைத்த சமயம், இதற்கு முன் இப்போதைய ராஜச் சக்கரவர்த்தி வேல்ஸ் இளவரசரென்ற முறையில் இந்தியாவுக்குச் சுற்றுப்பிரயாணம்வந்தபோது, தம்முடைய சமஸ்தானம் அவரை வரவேற்று உபசரிக்கும்படியான பெருமையை யடையவில்லையென்றும், இப்போதோ தாம்வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் உதயபுரத்துக்கு வரும்படியான பாக்கியத்தை அடைந்ததாகவும் சொல்லி, ராஜவிருந்தினர்களிருவரும் நீண்டகாலம் க்ஷேமமாய் வாழவேண்டுமென்றும் அவர்களிருவரும்

க்ஷேமமாய் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு ஜன்மதேசம் போய்ச் சேரவேண்டுமென்றும், தாம் விரும்புவதாகவும், தம்மைப்போலவே விருந்துக்கு வந்திருப்பவர்களெல்லோரும் விரும்பும்படியாகத் தாம் கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார். அதற்கு வேல்ஸ் இளவரசர் இளவரசியும் தாமும் தங்களுடைய க்ஷேமத்தை விரும்பி அவ்வளவு தூரம் பேசிய மகாராஜாவுக்கு வந்தனம் செலுத்துவதாகச் சொன்னார். இதற்குமுன்னே ராஜபுதனநாட்டு ஜனங்களைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோமே யொழிய இதுவரை அவர்கள் நாட்டுக்கு வந்து நேரில்பார்த்ததில்லை யென்றும், இப்போது அவர்களை நேரில்வந்து பார்த்ததில் நாங்கள் இதற்குமுன் ராஜபுதனத்தாரைப் பற்றியும் அந்நாட்டைப்பற்றியும் கேள்விப்பட்டிருந்ததற்கும் இப்போது கண்ணாரப்பார்ப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறதென்றும், நாங்கள் இதற்குமுன் கேள்விப்பட்டது தினைத்துணையாகுமென்றும, இப்போது நாங்கள் எங்கள் கண்ணாற்பார்த்தது பனைத்துணையாகுமென்றும் சொல்லி மகாராஜாவின் க்ஷேமத்தை விரும்பினார். விருந்துநடந்தபிறகு வாணவேடிக்கைகள் நடந்தன. மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாயிருந்தது பற்றி வேல்ஸ் இளவரசர் யாதொரு வேலையும் வைத்துக்கொள்ளவில்லை. அன்று காலமே இளவரசர் உதயபுரத்தையடுத்துள்ள காடுகளில் வேட்டையாடிவந்தார். இளவரசி அவர் வேட்டையாடப்போயிருந்த சமயத்தில் அவ்வூரிலுள்ள ஜகதீசுவரர்கோயிலையும் வேறுசில இடங்களையும்போய் பார்த்து வந்தார்கள். அன்றுசாயங்காலம் 6-30 மணிக்கு சக்கரவர்த்திகுமாரரும் இளவரசியும், மகாராஜாவும் உதயபுரவாசிகளும் ரெயில்வே ஸ்டேஷன்வரையில்வந்து வழியனுப்ப ஜெயபுரத்துக்குப் பிரயாணமானார்கள்.

## ஜெயபுரம்.

(21௳—23௳)

21௳ காலமே வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் ஜெயபுரம்போய்ச் சேர்ந்தார்கள். ஜெயபுரம் மகாராஜாவும் அவருடைய



மந்திரியும், சர்தார்களுள் சில முக்கியஸ்தர்களும், கவர்னர் ஜெனராலுடைய ஏஜெண்டும், பிரிடிஷ் ரெஸிடெண்டும், அவர்களிருவரையும் வரவேற்கச் சித்தமாயிருந்தார்கள். அவர்களிருவரும் வந்து இறங்கினதும் கவர்னர் ஜெனராலுடைய ஏஜெண்டு மகாராஜாவை வேல்ஸ் இளவரசருக்கு அறிமுகஞ்செய்துவைத்தார். வேல்ஸ் இளவரசரும் ஜெயபுரம் மகாராஜாவும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டது இங்கிலீஷ்நாட்டு மாதிரியை யனுசரித்திருந்தது. மகாராஜா வேல்ஸ் இளவரசரை வணங்கித் தம்முடைய கத்தியை அவருடைய பாதத்தில் வைத்து எடுத்துக்கொண்டார். இளவரசர் ரெஸிடென்ஸிக்குச் சென்றபோது ஜனங்கள் சந்தோஷமேலீட்டால் செய்த ஆரவாரம் வெகு பலமாயிருந்தது. சக்கரவர்த்தி குமாரர் ஏறிச்சென்ற வண்டி ஒரு அலங்கார வளைவின்கீழ் சென்றபோது சமஸ்தானபண்டிதர்கள் சிலர் கேட்பதற்கு வெகு இனிமையாயிருந்த ராகத்துடன்வாழ்த்துச்சுலோகங்கள் பாடினார்கள். ஜெயபுரத்து மாதர்கள் சக்கரவர்த்தி குமாரர் ஏறிவந்தவண்டியின்முன்னர் ஜலந் தெளித்தார்கள். நாகஜாதி ஜனங்கள் காட்டுமாதிரி கத்தியெடுத்து விளையாடினார்கள். ரெஸிடென்ஸியின் பங்களாவரையில் தெருக்களினி, சமஸ்தானத் துருப்புகள் வரிசைப்படுத்தி நிறுத்தப்பட்டிருந்தன. இவ்வளவுங்காலத்துடனும் இளவரசரை ஜெயபுரம் மகாராஜா ரெஸிடென்ஸியில் கொண்டுபோய் விட்டுச் சிறிதுநேரம் அவருடன் பேசிக்கொண்டிருந்துவிட்டு தம்முடைய அரண்மனைக்குத் திரும்பினார்.

10-மணிக்கு மகாராஜாவின் சர்தார்கள் சிலர் சக்கரவர்த்தி குமாரரின் தேகஸ்திதியைப்பற்றியும் இளவரசியின் தேகஸ்திதியைப்பற்றியும் ரெஸிடென்ஸிக்குப்போய் விசாரித்துவிட்டு வந்தார்கள். அப்போது அவர்கள் அத்தரும் வெற்றிலைப்பாக்கும் கொடுத்து உபசரிக்கப்பட்டுவிடைகொடுக்கப்பட்டார்கள். அப்புறம் 11-30மணிச் சுமாருக்கு சில சர்தார்களை கூட்டிக்கொண்டு மகாராஜா வேல்ஸ் இளவரசரை ரெஸிடென்ஸியில் போய் பேட்டிகண்டார். இளவரசர் மகாராஜாவை வரவேற்று அவருடன் பேசிக்கொண்டிருந்து அவருக்கு அத்தரும் வெற்றிலைப்பாக்கும் கொடுத்து அனுப்பினார். சிறிது நேரம் கழியவும் வேல்ஸ் இளவரசர் மகாராஜாவை மறுபேட்டிகாண

வந்தார். அவர் மறுபேட்டி காணப்புறப்படுவதற்கு முந்தியே அவர் புறப்பட்டுபோகிறாரென்பதற்கு அறிகுறியாக அதிர்வெடிகள் போடப்பட்டபடியால் ஜெயபுரத்து ஜனங்கள் வேல்ஸ் இளவரசரைப் பார்க்கவேண்டுமென்ற ஆசையால் அவர் வரும் வழி நீள மொய்த்து நின்றார்கள். அவர் எந்தத் தெருக்களின்வழியாய்ச் சென்றாரோ அந்தத் தெருக்களிலுள்ள வீடுகளின் மேல்மெத்தைகளிலும் பல்கனி வாசல்களிலும் விரல்நுழைய இடமில்லாமல் ஜனங்கள் வந்து குவிந்திருந்தார்கள். அவ்வளவு ஜனங்களும் நல்வரவு கூற வேல்ஸ் இளவரசர் மகாராஜாவின் அரண்மனைக்குச் சென்றார்.

அரண்மனையிலோ மகாராஜா அவர்கள் கொலுவிருந்தாரென்றே சொல்லலாம். மகாராஜா தம்முடைய சர்தார்களுடனும், சமஸ்தானக் கனதனவான்களுடனும், தர்பார் ஹாலில் வேல்ஸ் இளவரசரின் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அப்படி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது சக்கரவர்த்தி குமாரர் குறிப்பிட்ட நாழிகையில் அந்த தர்பார் மண்டபம் போய்ச் சேர்ந்தார். உடனே மகாராஜா அவரைக் கைகொடுத்து அழைத்துச் சென்று ஓர் சிம்மாதனமிட்டு அதனில் அவரை உட்கார்த்தி ஒருமணி நேரம்போல் அவருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்புறம் மகாராஜா அவர்கள் சக்கரவர்த்தி குமாரருக்குப் பூமாலைசார்த்தி உபசரித்தார். அந்த நேரமெல்லாம் இளவரசி தர்பார் ஹாலுக்கு மேலேயிருந்த பல்கனியிலுட்கார்ந்து கீழே நடக்கும் விமரிசைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இளவரசருக்குப் பூமாலைசார்த்தியானபின் இளவரசிக்கும் பூமாலை சார்த்தப்பட்டது. அதன்மேல் மகாராஜாவின் முக்கிய சர்தார்களும் சமஸ்தானத்து மந்திரியும் இளவரசருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள். அவர்கள் இளவரசரை காணிக்கை வைத்துக்கண்டார்கள். அக்காணிக்கைகளை தாம் ஏற்றபாவனையாக வேல்ஸ் இளவரசர் கையால்தொட்டார். அப்புறம்சக்கரவர்த்திகுமாரருடன் வந்திருந்த உத்தியோகஸ்தர்களுக்கு மாலை போடப்பட்டு எல்லோருக்கும் அத்தரும் வெற்றிலைப்பாக்கும் வழங்கப்பட்டதும், வேல்ஸ் இளவரசர் ரெஸிடென்ஸிக்குத் திரும்பினார்.



ரெஸிடென்ஸிக்குத் திரும்புவழியில் ஜெயபுரத்திலுள்ள காட்சி பங்களாவை சக்கரவர்த்திகுமாரர் பார்வையிட்டார். அந்தபங்களா அதிகாரிகள் அவரை ஓரிடம்பாக்கியில்லாமல் எங்கும் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டினார்கள். சிலதந்தவேலைகளையும், மண்வேலைகளையும், கல்வேலைகளையும் பார்த்து நிரம்ப சந்தோஷப்பட்டார். அந்த பங்களாவில் சேர்த்துவைக்கப்பட்டிருந்த சித்திரவேலைச் சாமான்கள் அத்தனையும் முதல்தர வேலைப்பாட்டுச் சாமான்களென்றும், இந்தியா சித்திரவேலைக்கு வெகுகாலமாய்ப் பேர்போனதென்பதற்கு அச்சாமான்களே சாட்சியாகுமென்றும் சொன்னார்.

---

பிற்பகல் 3-15 மணிக்கு ஆஜ்மீரிலிருந்து அந்த நகரத்துமுனிசிபாலிடிப் பிரதிநிதிகள் இளவரசருக்கு ஒரு நல்வரவுப்பத்திரிகை வாசித்துக் கொடுப்பதற்காக வந்துசேர்ந்தார்கள். அந்தப்பிரதிநிதிகள் இளவரசருக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டானதும், ஆஜ்மீர் முனிசிபல்சேர்மன் மிஸ்டர் வாடிங்டனுக்குப்பதிலாய் முன்ஷி பிஷாம்பர்நாத் முனிசிபாலிடியாரின் நல்வரவுப்பத்திரிகையை வாசித்தார். அதனில் ஆஜ்மீர் வாசிக[illegible] இளவரசர் தங்கள் ஊருக்கு வாராமல் போவதில் மிகுந்தவிசனமென்றும் ஆயினும், வேல்ஸ இளவரசர் அனுப்பிய தந்தியின் மேலான உட்கருத்தை அந்நகர் வாசிகள் அனைவரும் உணராதிருக்கவில்லை யென்றும் சொல்லப்பட்டிருந்தது. அந்த நல்வரவுப்பத்திரிகையை பெற்றுக்கொண்டு வேல்ஸ் இளவரசியும் தாமும் ஆஜ்மீர் முனிசிபல் பிரதிநிதிகளுக்கு மனப்பூர்வமாய் வந்தனஞ்செலுத்துவதாகவும், அதனில் உள்ளன்போடு சொல்லப்பட்டிருக்கும் பிரிய வார்த்தைகளைத் தாங்கள் மதிப்பதாகவும் சொல்லிவிட்டு, சக்கரவர்த்திகுமாரர், 'நான் அனுப்பியதந்தி உங்களுக்கு ஏற்கனவே கிடைத்திருக்கவேண்டு'மென்றும், 'நாங்கள் உங்கள் ஊருக்கே வந்து உங்களைப்பாராமல் இவ்வூரில் பார்ப்பதில் படும் வருத்தத்தை நீங்கள் இப்போது சொல்லிய ஆஜ்மீரின் சரித்திரம் சிறிது அதிகப்படுத்திவிட்ட'தென்றும், 'நீங்கள் சில வருஷங்களாக மிகுந்த கஷ்டத்தை யனுபவித்ததற்காக நாங்கள் மனம் இரங்குகிறோ'மென்றும், 'நீங்கள் கஷ்டப்பட்டதெல்லாம் நீங்க, உங்களுக்கு நற்காலம்பிறக்குமென்று நாங்கள் நம்புகிறோ'மென்றும் சொன்னார்.

மறுநாள் காலமே வேல்ஸ் இளவரசர் புலிவேட்டை யாட இடார் மகாராஜாவோடும் தம்முடைய சிப்பந்திகள் சிலரோடும் சென்றார். அவர் வேட்டையாடச் சென்றிருந்த நேரத்தில் அவருடைய சிப்பந்திகளுள் வேறு சிலர் மகாராஜா அரண்மனைக்குச் சென்று, கோழிகளும், ஆட்டுக்கடாக்களும், எருமைக்கடாக்களும், காட்டுப்பன்றிகளும் சண்டை யிடுவதையும், சில பட்சிகளும் குதிரைகளும் சர்க்கஸ் பழக்கங்கள் செய்வதையும் பார்த்து சந்தோஷித்தார்கள். அந்நேரமெல்லாம் இளவரசியார் அந்நகரத்து அதிசயங்களைப்பார்க்கப்போய் வந்தார். அவ்வூர் சித்திரகலாசாலைக்கும், காட்சிப் பங்களாவுக்கும் அந்தப் பெருமாட்டிப் போய் வந்ததாய்த் தெரிகிறது. புலி வேட்டையாடச் சென்ற இளவரசர் 9 அடி, 6 அங்குலநீளமுள்ள ஒரு புலியைச் சுட்டு வீழ்த்தினார். தோள்பட்டையில் பட்ட குண்டின் வேதனையால் அப்புலி பொத்தென்று கீழே விழுந்தது.

இரவு 8 மணிக்கு மகாராஜாவின் அரண்மனையில் நடந்த விருந்துக்கு இளவரசியும் இளவரசரும் போயிருந்தார்கள். எல்லாரும் கூடி விருந்துண்ணும்போது அவ்விரண்டு ராஜவிருந்தினர்களும் தமது சமஸ்தானத்துக்கு வர இசைந்ததைப்பற்றியும், அவர்களுக்கு விருந்து செய்யும்படியான பாக்கியம் தமக்குக் கிடைத்ததைப்பற்றியும் சிறிது எடுத்துப்பேசி அவர்களது வரவின் ஞாபகச் சின்னமாக ஜனங்களின் பஞ்சநிதிக்கு 4-லட்சம் ரூபாய் உபகரிப்பதாய் மகாராஜா வாக்களித்தார். மகாராஜா பேசியதற்கு இளவரசர் பதில்சொன்னதில், மகாராஜா எட்வர்ட் சக்கரவர்த்தியின் முடி சூட்டுக்கு லண்டனுக்கு வந்திருந்தது பற்றித் தமக்குப் பழைய சிநேகிதரென்றும், இப்போது தங்களின் வரவின் ஞாபகச்சின்னமாக மகாராஜாவும் மகாராணியும் 4-லட்சம் ரூபாய் இந்திய ஜனங்களது பஞ்சநிதிக்குக் கொடுப்பதாய் வாக்களித்தது தங்களுக்கு விசேஷ திருப்தியை யுண்டாக்கி விட்டதென்றும் சொன்னார். விருந்து நடந்து முடிந்ததும் ஒரு சங்கீதக் கச்சேரி நடந்தது. அதனையும் சக்கரவர்த்தி குமாரரும் இளவரசியும் சிறிதுநேரமிருந்து கேட்டார்கள். அப்புறம் மகாராஜாவிடம் விடை பெற்றுக்கொண்டு ராஜவிருந்தினர்களிருவரும் ரெஸிடென்ஸிக்குப் புறப்பட்டு வழியிலுள்ள கட்டடங்கள் எல்



லாம் தீபாலங்காரம் செய்யப்பட்டிருந்த அரிய காட்சியைப் பார்த்துச் சந்தோஷித்துக்கொண்டே போனார்கள்.

மறுநாள் காலமே இளவரசர் காலைப்பசியைத் தீர்த்துக்கொண்டு புலிவேட்டையாட ஜெயபுரத்திலிருந்து 6-மைல் தூரத்திலுள்ள சங்கானீருக்கு ரெயிலேறிச்சென்றார். ஆனால் சங்கானீர்போய்ச் சேர்ந்ததும் எந்த புலியை வேட்டையாடவேண்டுமென்று சக்கரவர்த்திகுமாரர் சென்றாரோ, அந்தப்புலி எங்கோ மறைந்தோடிவிட்டதென்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். அவர்கள் அப்படிதெரிவிக்கவும் இளவரசர் சற்று ஏமாற்றத்தை யடைந்தவராய்த் தாம் ஏறிச்சென்ற வண்டியை விட்டுக்கூடக் கீழே யிறங்காமல் வண்டியைத் திருப்பிவிடச் சொல்லி ஜெயபுரம் வந்துசேர்ந்தார். வேல்ஸ் இளவரசியோ மகாராஜாவின் புஸ்தகசாலையையும், சமஸ்தானத்து நட்சத்திரசாலையையும், வேறுசில இடங்களையும் போய்ப்பார்த்து வந்தார்கள். அவர்களுடைய பரிவாரச்சிப்பந்திகளில் ஒருபகுதியார் அன்று விடியற்காலம் ஜெயபுர சமஸ்தானத்தின் பழையத் தலைமைப் பட்டணமாகிய ஆம்பரைப் போய்ப் பார்த்து வந்தார்கள். வேறு சிலர் பன்றிவேட்டையாடி வந்தார்கள். அன்று சாயங்காலம் இளவரசர்இளவரசியாருடன் ஜெயபுரம் விட்டு புறப்பட்டார்கள்.

## பிகானீர்.

(24உ—27உ)

---

24உ காலமே 8-30 மணிக்கு வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் பிகானீர்போய்ச்சேர்ந்தார்கள். அங்கு அவர்கள் பிகானீர் மகாராஜாவாலும் கவர்னர் ஜெனரலுடைய ஏஜெண்டாலும் வரவேற்கப்பட்டார்கள். பிகானீரில் அவர்களிருவரும் 'லால்கார்' என்ற அரண்மனையொன்றில் கொண்டுபோய் இறக்கப்பட்டார்கள். 9-30 மணிச்சுமாருக்கு மகாராஜாவின் சர்தார்கள் சிலர் இளவரசர் இறங்கியிருந்த அரண்மனைக்குச் சென்று அவர்களுடைய தேக சௌக்கியத்தைப் பற்றி விசாரித்துவிட்டு வந்தார்கள். பிறகு மகாராஜா தம்முடைய சர்தார்கள் சிலருடன் சென்று இளவரசரை காணிக்கை வைத்துக் கண்டுவிட்டு வந்தார். வழக்கத்தையனுசரித்து வேல்ஸ் இளவரசர் மட்டும் மகாராஜாவை அவருடைய அரண்மனைக்குச் சென்று மறு பேட்டி காணவில்லை. தாம் இறங்கியிருந்த 'லால்கார்' மாளிகையிலேயே மகாராஜாவை பேட்டிகண்டார். அன்று பிற்பகல் 2-30 மணிக்கு வேல்ஸ் இளவரசர் காஜ்நருக்கு வேட்டையாடும் நோக்கமாய்ப் போனார். அவருடன் பிகானீர் மகாராஜாவும், கவர்னர்ஜெனரலுடைய ஏஜெண்டும், வேறு சிலரும் போனார்கள்.

அவர் 3 நாள் காஜ்நரில் தாமதித்தார். காஜ்நர் தடாகத்தில் பட்சிவேட்டை மிகுதியாய் அகப்படுமாம். ஒரு சுமார் அந்தத் தடாகத்தில் 15,000 நீர்ப்பறவை சஞ்சரிக்கிறதாய் மதிக்கப்படுகிறது. வேல்ஸ் இளவரசர் அந்த தடாகத்தில் உள்ள நீர்ப்பறவைகளை வேட்டையாடப்போகிறாரென்பதைக் கருதி சமீப ஏரிகள் எல்லாம் வற்றவைக்கப்பட்டன. சென்றவருஷம் அந்த ஏரியில்போய் சிலர் இரண்டுநாள் வேட்டையாடியதில் 2,841 பறவைகள் சுட்டுவீழ்த்தப்பட்டதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறபடியால் வேல்ஸ் இளவரசர்



வேட்டையாடச்சென்றிருக்கும் இந்த வருஷமும் வெகுபறவைகள் சுட்டு வீழ்த்தப்படலாமென்று நம்பப்பட்டது. 25உ சனிக்கிழமை தினம் வேல்ஸ் இளவரசருக்கு நல்லவேட்டை கிடைத்ததாகவுஞ் சொன்னார்கள். மொத்தத்தில் 21 பேர்கள் அத்தடாகத்திலுள்ள பட்சிகளின்மீது இலக்குவைத்துச் சுட்டார்கள். அவர்களெல்லோருமாய்ச் சேர்ந்து 1,129 பறவைகளைச் சுட்டுப்பிடித்ததாய் தெரிந்தது. அவர்களுள் வேல்ஸ் இளவரசர் சுட்டுப்பிடித்த பறவைகள் 200, பிகானீர் மகாராஜா சுட்டுப்பிடித்த பறவைகள் 109.

27உ காலமே 11-மணிக்கு இளவரசி காஜ்நரிலிருந்து பிகானீருக்குத் திரும்பினார்கள். அப்பெருமாட்டி பிகானீர் கோட்டையைப் போய் அன்றைதினம் இரண்டுமுறை பார்த்து வந்தார்கள். அங்கு பழையகாலை ஆயுதங்களும், ராஜக்கிரகதைச் சேர்ந்த ஆபரணங்களும், வேறு அதிசயப்பொருள்களும் இளவரசிக்குக் காட்டப்பட்டன. சாயங்காலம் 5-மணிக்கு இளவரசர் பிகானீருக்குத் திரும்பி கோட்டையிலேயே இளவரசியைச் சந்திக்க, அவர்களிருவரும் லால்பாக் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்றிரவு வேல்ஸ் இளவரசருக்கும் இளவரசிக்கும் பிகானீர் அரண்மனையில்விருந்து நடக்கதாயும் இளவரசர் சிறிது தேகஅசௌக்கியமாயிருந்ததுபற்றி அவ்விருந்துக்குப்போகவில்லை. ஆனாலும் அவ்விருந்து சமயத்தில் மகாராஜா சொல்லும் உபசார வார்த்தைகளுக்கு, இளவரசர் உடம்பு சரியாயிருந்தால் சொல்லியிருக்கக்கூடிய பதில், கவர்னர்ஜெனரலுடைய ஏஜெண்ட மிஸ்டர் கோலவினால், இளவரசர் எழுதிக் கொடுத்திருந்தபடி வாசிக்கப்பட்டது. அன்று இரவு பிகானீரைவிட்டுப் புறப்பட்டார்கள்.

---

## லாகூர்.

(28உ — டிசம்பர் ௴)

வேல்ஸ் இளவரசியும், இளவரசியாரும் பிகானீரை விட்டுப் பிரயாணமானதென்று நாம் முந்தி கூறினோம். பிரயாணமான போது நடந்த சமாசாரங்களைப் பற்றி சற்று விளக்கமாய்க் கூறுவோம்.

27உ திங்கட்கிழமை யிரவு இளவரசரும் இளவரசியாரும் பிகானீர் விட்டுப் பிரயாணமானபோது பிகானீர் நகரம் தீபவொளியால் பிரகாசித்துக் கொண்டிருந்தது. "லால்கார்" அரண்மனையிலிருந்து பழைய அரண்மனைக்குச் செல்லும் ரஸ்தாக்களிலெல்லாம் பல்லாயிரம் தீபங்களேற்றப்பட்டிருந்தன. பழையகோட்டையின் மதில்களிலெல்லாம் தீபங்கள் சுடர்விட்டெரிந்தன. கோட்டையின் வாசலுக்கெதிரே தீபவொளி மிகவும் அதிகமாயிருந்தது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை யதிகாலையில் இளவரசரும் இளவரசியாரும் பாடின்டாவிலிருந்து லாகோருக்குச் செல்லும்வழி மிகவும் அலங்காரமாயிருந்தது. நிலமானது பிகானீர் விட்டுப் பிரயாணமானபோது சமபூமியாயிருந்த போதிலும் எங்கு பார்த்தாலும் கண்ணுக்குப் பச்சையாய்த் தோன்றிற்று. பார்வைக்கு அழகான காட்சியாய் மரங்களும் செடிகளும் முளைத்திருக்கின்றன, தினைப்பயிர்கள் கதிர்தாங்கிச் செழித்திருந்தனவாம். மியான்மீர் ராணுவஸ்தானத்தைக்கடந்து சிகப்புத்துணிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த லாகோர்ரெயில்வே ஸ்டேஷனை மறுநாளாகிய 28உ சாயந்திரம் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் போய்ச் சேர்ந்தார்கள்.

லாகோரானது பஞ்சாப் தேசத்தின் தலைநகரம். இதுவே ஆதியில் பாஞ்சால தேசமென வழங்கிவந்தது. ஐந்து நதிகளையுடைத்தாயிருப்பதாலிதற்கு இப்பேர் வந்தது. இந்தியாவைப் பாதுகாப்பதற்கு இம்மாகாணம் மிகவும் முக்கியமானது. இங்கு வசிப்போர் மிகவும் ராஜவிசுவாசிகள், போர்த்தொழிலில் மிகவும் வல்லவர்கள். பஞ்சாபியர்கள் வேல்ஸ் இளவரசருக்கும்இளவரசியாருக்கும் மிகவும் அன்பாகவும்உற்சாகமாகவும் உபசாரஞ்செய்துஎதிர்கொண்டழைத்தார்கள்.



லாகோர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து கவர்ன்மெண்ட் அவுஸ்வரை வழிநெடுகக் கொடிகள் பறந்தன. வளைவுகள் கட்டப்பட்டிருந்தன.

ஜனங்கள் திரண்டு ஈக்கள்போல் மொய்த்திருந்தார்கள். சாலை மரங்களும் தோட்டங்களும் லாகோரில் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருக்கும். அகன்று நீண்ட தெருக்களும், விஸ்தாரமான புதுக்காக்களும், அழகிய கடைகளும் எங்கும் காணலாம். பஞ்சாப் லெப்டினென்ட் கவர்னராகிய ஸர் சார்லஸ் ரைவாஸ், ஸர்பின்டன்பிளட் முதலிய பல ஸிவில் மிலிடேரி உத்தியோகஸ்தர்கள் பிரசன்னமாயிருந்தார்கள். அவர்களுடன் கலந்து சிறிது நேரம் சம்பாஷித்து, ஆங்கு வைக்கப்பட்டிருந்த ராணுவப்படையார்களைப் பார்வையிட்டுப் பின்னர் இளவரசரும் இளவரசியாரும் ஸர்வால்டர் லாரன்ஸும் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியிலேறிச் சென்றார்கள். பன்னிரண்டாவது ஈட்டிப்படையாரும், பஞ்சாப் குதிரைப்படையார்களும் பின்தொடர்ந்து சென்றார்கள். தெருக்கள்தோறும் ஜனங்கள் நிறைந்துநின்றார்கள். வீட்டு மேல்மாடிகளிலும், ஜன்னல்களிலும், மேற்கூரைகளிலும் எங்கும் பார்த்தாலும் ஜனக்கூட்டமே திரண்டிருந்தது. ஜனங்கள் மிகுதியான ராஜவிசுவாசமும், உற்சாகமும் காட்டி மனமகிழ்ந்தார்கள். பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் கூட்டம் கூட்டமாக நின்று ஆரவாரித்தார்கள்.

பஞ்சாப் தேசத்துச் சுதேசமன்னர்கள் பலர் லாகோரில் திரண்டிருந்தார்கள். இப்படித் திரண்டு செறிந்திருந்த சுதேசமன்னர்களிடையே இளவரசரும் இளவரசியாரும் சென்றபோது காட்சியானது தேவேந்திர சபைபோலிருந்தது. பாட்டியாலாதேசத்து வேந்தர், பாவல்பூர் மன்னர், நாபாராஜா, ஜின்ட்ராஜா, கபாத்தலர் ராஜா, முண்டி ராஜா, பாரிட்கோட்ராஜா, மாலர்கோட்லாராஜா, சம்பாராஜா, ஸுகேத்ராஜா முதலிய பலதேச மன்னர்கள் தங்கள் தங்கள் படைகளோடும் பரிவாரங்களோடும் கொடிவிருது முதலிய ராஜசின்னங்களோடும் பிரசன்னமாயிருந்தார்கள். இம்மன்னர்கள் ஆதிகாலத்திலிருந்த நிலைமையையும், மகாபாரதயுத்தத்தில் இவர்களெல்லாம் பாண்டவர்களுக்குச் சகாயராய் யுத்தஞ்

செய்த பெருமையையும் நினைக்குந்தோறும் இந்தியர்கள் மனமகிழ்ச்சிகொள்வார்கள். பஞ்சாப் தேசத்தரசர்களெல்லாம் புயபராக்கிரமமும் தோள்வல்லமையும் படைத்தவர்கள். தற்போதும் யுத்தஞ்செய்வதில் மிகவும் சிறந்தவர்கள். பெருத்தமூக்கும், கூரியகண்களும், திரண்டுருண்ட உருவமும், செறிந்த பங்கியும்படைத்த எல்லைநாட்டு வீரர்கள் குதிரைகள் மீதும், குதித்தாடும் அசுவங்கள் மீதும் தோன்றி இளவரசரை எதிர்கொண்டழைத்தார்கள். கபூர்த்தலா மகாராஜாவினுடைய காலாட் படையார்கள் மிகுந்த காம்பீரத்துடன் பிரசன்னமாயிருந்தார்கள். பன்னூறு குதிரைகளும் கூட்டமாய்த் திரண்டிருந்தன. சகல மன்னர்களும் வேல்ஸ் இளவரசரையும் இளவரசியாரையும் மரியாதையாய் வணங்கினார்கள். பின்னர் இளவரசரும் இளவரசியாரும் கவர்ன்மெண்ட் அவுஸ் நோக்கிச்சென்றபோது "அனார்க் காலித் தோட்டத்தில்" லாகோர் முனிசிபாலிட்டியார் மிகவும் உபசாரமாக வந்தனப்பத்திரிகை வாசித்தார்கள். இளவரசரும் மிகவும் அன்பாகவும் உபசாரமாகவும் பதில்சொன்னார்.

அன்றிரவு "மாண்ட் கோமரி ஹாலில்" வேல்ஸ் இளவரசர் சுதேச மன்னர்களுக்குப் பேட்டி கொடுத்தார். பாடியாலா மகாராஜா நீலவர்ணமான ஆடைதரித்து முத்துகளும் வைரங்களுமிழைத்த தலைப்பாகை தரித்திருந்தார். கபூர்த்தலா மகாராஜாவும் மற்றும் மன்னர்களும் மிகவும் உன்னதமானதும் அழகானதும் விலையுயர்ந்ததுமான ஆடைதரித்திருந்தார்கள். படைத்தலைவர்கள் பெரிய உருவத்தினர்களாய் வேல்ஸ் இளவரசருடன் கைகுலுக்கினார்கள். அன்றிரவு 'மாண்ட் கோமரி ஹாலில்' நடைபெற்ற தர்பாரானது மிகவும் சிலாக்கியமானதாயிருந்தது. பாடியாலா மகாராஜாவும், கௌர் சாஹேப்பும், படைத்தலைவர்களும் பிரசன்னமாயிருந்தார்கள். மொத்தத்துக்கு 130-பேர் வேல்ஸ் இளவரசருடைய பேட்டி பெற்றார்கள். பேரிகைகள் முழங்கவேல்ஸ் இளவரசர் தர்பார் மண்டபம் சென்று ஆங்கு அமைக்கப்பட்ட சிம்மாசனத்திலமர்ந்தார். பிக்கானீரில் வேட்டையாடிக் களைப்படைந்த இளவரசர் பார்ப்பதற்கு மிகவும் தேக சௌக்கியமாகவே யிருந்தார். சுதேச மன்னர்கள் பேட்டி பெற்ற பின்னர் வேல்ஸ் இளவரசர் அவர்களு



டன் சுமார் அரைமணி நேரம் கலந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார். நாபா தேசத்துத் தலைவர் மட்டும் தேக அசௌக்கியத்தால் தர்பார் மண்டபத்துக்கு வரவில்லை.

லாகோரில் கட்டப்பட்டிருக்கும் கோட்டையைப் பார்க்க வேல்ஸ் இளவரசர் விரும்பியபோதிலும் பலவகையான அலுவல் மிகுதியால் புதன்கிழமை முடியாது போயிற்று. பிற்பாடு கவர்ன்மெண்ட் அவுஸில் பஞ்சாப் தேசத்துத் தலைவர்களெல்லாம் இளவரசருடைய பேட்டிபெற்றார்கள். பாடியாலா மகாராஜா பாவல்பூர் நவாப், ஜிண்ட் தேசாதிபதி நாபா ராஜா கபூர்த்தலா ராஜா முதலிய பல சுதேசமன்னர்கள் பேட்டி பெற்றபோது இளவரசர் மிகவும் சந்தோஷமும் அன்புங் காட்டினார். இமயமலைச் சாரலில் ராஜாதிகாரஞ் செய்யும்வேந்தர்களும் இளவரசருடைய பேட்டி பெற்றார்கள். இமயமலையின்கீழ்ப் பக்கத்துச் சாரலிலே காங்கிராப்பள்ளத்தாக்குக்கு மத்தியிலுள்ள மண்டிமாகாணத் ததிபதியும், மாலீர் கோட்லா அதிபரும் ஷாம்பாராஜாவும் சுமார் 400 மைல் விஸ்தீரணமுள்ள மலைநாடாகிய குக்கட்டு வேந்தரும் தங்கள் தங்கள் பரிவாரங்களோடு பிரசன்னமாகி இளவரசருடைய பேட்டிபெற்றார்கள். இங்ஙனம் சுதேச மன்னர்களுக்குப் பேட்டி கொடுத்த பின்னர் இளவரசர் அன்று பிற்பகலில் ஜெனரல் பீட்ஸனுடன் வேட்டையாடச் சென்றார். டப்பரின் ஆஸ்பத்திரியை இளவரசர் பார்வையிட வில்லை. வேல்ஸ் இளவரசியார் லாகோரிலுள்ள மியூஸியத்தைப் பார்வையிட்டார்கள். பின்னர் அன்றிரவு இளவரசரும் இளவரசியாரும் லாகோர்க் கவர்மெண்ட் அவுசில் விருந்துண்டார்கள். அப்பொழுது "ஷாலிமார்த் தோட்டம்" தீபமாய்ப் பிரகாசித்தது.

30-ந்தேதி வியாழக்கிழமை யன்று காலை பீரங்கிகள் முழங்க வேல்ஸ் இளவரசர் சுதேசமன்னர்களைப் போய்ப்பார்த்தார். யானைப் படையார்களும் ஈட்டிப்படையாரும் சூழ்ந்திருந்த பாடியாலா மகாராஜாவையும் ஒட்டகப்படையார்களால் சூழப்பட்டிருந்த பாவல்பூர் நவாப்பையும் மற்றும் சுதேசமன்னர்களையும் வேல்ஸ் இளவரசர் பார்வையிட்டார். பஞ்சாப் தேசத்திலுள்ள பல உழவர்களும் பிரசன்னமாயிருந்து வேல்ஸ் இளவரசரைப் பார்வையிட்டார்கள். அன்று

பிற்பகலில் வேல்ஸ் இளவரசர் எச்சிஸன் காலேஜைப் பார்வையிட்டார்கள். பின்னர் அன்று தினம் இரவு பால் கூட்டம் நடந்தது. சுமார் 800-பேர் பிரசன்னமாயிருந்தார்கள். ஸர் பிண்டன் பிளடின் மனைவியாருடன் வேல்ஸ் இளவரசரும், வேல்ஸ் இளவரசியாருடன் ஸர் சார்ல்ஸ் ராவைஸூம் கைகோர்த்தாடினார்கள். விடியற்காலம் 4-மணி வரை ஆட்டம் நடந்தது. மறுநாள் பிற்பகலில் கவர்ன்மெண்ட் அவுஸில் தோட்டக்கச்சேரி நடைபெற்றது. பிற்பாடு அன்றிரவு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பெஷாவர் நோக்கிப் பிரயாணமானார்கள்.

## பெஷாவரில் தாமதம்.

(2உ—4உ)

டிசம்பர் மீ 2-ந் உ அதிகாலையில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பெஷாவர் போய்ச்சேர்ந்தார்கள். ஆங்குள்ள ஜனங்கள் மிகவும் ஆனந்தக்கிளர்ச்சியுடன் ராஜகுமாரரை எதிர்கொண்டழைத்து உபசாரஞ்செய்தார்கள். கோர்க்ஹாத்திரி யென்றவிடத்தில் வந்தனோபசாரப் பத்திரிகையொன்று வாசிக்கப்பட்டது. பெஷாவர் முனிஸிபாலிட்டியார் வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்தார்கள். அதற்கு வேல்ஸ் இளவரசர் பதில் கூறினார்கள். பின்னர் எல்லை நாட்டு வேந்தர்கள் பேட்டிபெற்றார்கள். சிட்டிரால் மாகாணத்து மேட்டர் முதல் முதல் பேட்டி பெற்றார். இவர் வயதில் சிறியவர். டீர் மாகாணத்து நவாப்பும், ஸ்வாத மாகாணத்து நவாப்பும், மற்றும் மலைநாட்டுவேந்தர்களும் பேட்டிபெற்றார்கள். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரிடத்திலும் எட்வர்ட் மகாராஜா விடத்திலும் இந்ததேசத் ததிபதிகள் வைத்திருக்கும் மதிப்பும் அன்பும் அளவற்றவை. அன்றையதினம் பிற்பகலில் பெஷாவரில் கவர்ன்மெண்ட் அவுஸில் ஒரு தோட்டக்கச்சேரி நடந்தது. பின்னர் அன்று மாலை வேல்ஸ்இளவரசரும் இளவரசியாரும் சவாரி சென்றார்கள். மறு நாள் ஞாயிற்றுக்கிழமையன்று இளவரசரும் இளவரசியாரும் ஓய்வு நாளாகக் கழித்தார்கள்.

அடுத்தநாள் திங்கட்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் கைபர்க் கணவாயைப் பார்க்கும்படியாகப் பெஷாவர்



விட்டுப் பிரயாணமானார்கள். ஜம்ரூட் கோட்டையைப் பார்வையிட்டார்கள். பின்னர் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் குதிரை வண்டியிலேறி லாண்டி கோட்டால் கோட்டைக்குச் சென்றார்கள். அதாவது இந்தியாவினெல்லை நாட்டைவிட்டு ஆப்கானிஸ்தானத்தின் எல்லைக்குச்சென்றார்கள். மலைக்குன்றுகள் பலவற்றைக்கடந்து கடைசியில் அலிமாஸ்ஜித் கோட்டையைப் போய்ச் சேர்ந்தார்கள். ஆயிரத்து நானூறு வீரர்கள் இக்கணவாயைக் காத்து நிற்கின்றார்கள். கணவாயைப்பார்த்து மகிழ்ந்துவிட்டு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் ஜம்ரூட் கோட்டைக்குத் திரும்பினார்கள். அன்று இரவு ராஜகுமாரரும் இளவரசியாரும் பெஷாவர் விட்டு ராவல்பிண்டி நோக்கிப் பிரயாணமானார்கள்.

## ராவல்பிண்டியில் தாமதம்.

(5உ—8உ).

4-ந் தேதி யிரவு இளவரசரும் இளவரசியாரும் பெஷாவர்விட்டுப் பிரயாணமானரென்றோம். 5-ந்தேதி காலை ராவல்பிண்டி போய்ச்சேர்ந்தார்கள். சுமார் 57,000 படைவீரர்களும் சேனாதிபதியாகிய லார்ட்கிச்சனரும் பிரசன்னமாயிருந்தார்கள்.

சிலதினங்களாக ராவல்பிண்டிக்குச்செல்லும் பலரஸ்தாக்கள் வழியாக ஆயுதபாணிகளான அநேகம்படைவீரர்கள் கூட்டம்கூட்டமாக ராவல்பிண்டிக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். வடதிசை, தென்திசை, கீழ்திசை மேற்றிசையாகிய நான்குதிசைகளிலிருந்தும் குதிரைவீரர்களும் காலாள்வீரர்களும், பீரங்கிகளும், சாமான் சரக்கேற்றிச்செல்லும் படைவீரர்களுமாகப் பலர் சென்றுகொண்டிருந்தார்கள். இப்படிப் பல நாட்களாகச் சென்ற வீரர்கள் 55000-பேர். 5-ந்தேதி செவ்வாய்க்கிழமையன்று ராவல்பிண்டியிலும் அதற்கருகாமையிலும் அணிவகுத்து நின்றார்கள். இவர்களெல்லாம் யுத்தவீரர்கள். இந்தியாவிலுள்ள படையார்களில் இவர்களே சிரேஷ்டமானவர்கள். அணியணியாக இவர்களெல்லாம் சென்று கடைசியில் அன்றிரவு தங்கள் தங்களுக்குக் குறிப்பிட்ட இடங்களில் நின்றார்கள். இதுவரை சுற்றுப்பிரயாணஞ் செய்தவிடங்களில் வேல்ஸ்

இளவரசரும் இளவரசியாரும் எவ்வளவோ குதிரைப்படைகளையும், பீரங்கிக் குதிரைப்படைகளையும், ஏகாதிபத்தியச் சேவகக்குதிரைப் படைகளையும், ஒட்டகப்படைகளையும் பார்வையிட்டிருந்த போதிலும், அன்றுதான் மிகவும் பெரிய படையொன்று இரண்டணிகளாகப் பிரிக்கப்பட்டு வேடிக்கையாகச் சண்டை செய்வதைப் பார்த்தார்கள். இவ்விரண்டு படைகளும் தக்க சேனாதிபதிகளால் நடத்தப்பட்டுப் போர்புரிந்த காட்சியை இளவரசியும் இளவரசியாரும் நேரிற்பார்த்து மிகவும் சந்தோஷங் கொண்டார்கள்.

இந்தப் பொய்ச் சண்டை நடத்தப்பட்ட விவரத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறுவதவசியம். ராவல் பிண்டிக்கு வடக்கே ஒரு பெரிய ராஜியமும், தெற்கே ஒரு பெரிய ராஜியமு மிருப்பதாயும் இவ்விரு ராஜியங்களும் சென்ற சிலகாலமாக யுத்தஞ் செய்ய ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தன வென்றும் பாவித்துக் கொள்ளவேண்டும். வடபாக ராஜியத்தின் சேனைக்கு ஸர் ஆர்ச்சிபால்ட் ஹண்டர் சேனாதிபதியாகவும், தென்பாக ராஜியத்தின் சேனைக்கு ஸர் ஆல்பிரட் காஸிலி சேனாதிபதியாகவும் நின்று பொய்ப்போர்நடத்தினார்கள். வடபாக ராஜியத்தார் முதல் முதல் போரையாரம்பித்து அதிவேகமாய் இந்தஸ் நதியைத் தாண்டி ராவல்பிண்டியைக் கைப்பற்றவருவதுபோலவும், தென்பாக ராஜியத்தார் எதிரிகளை எதிர்த்து நார்காலாக்குன்றுகளுக்குச் செல்வதுபோலவும், அவர்களுக்கு உதவியாக ஜீலத்திலிருந்தும் லாகோரிலிருந்தும் படைகள் செல்வது போலவும் அபிநயிக்கப்பட்டுப் பொய்ப்போர்நடந்தது. வடபாக ராஜியச் சேனையில் 30000 பேர்களும் தென்பாக ராஜியச் சேனையில் 24250 பேர்களும் பிரசன்னமாயிருந்தகாட்சி மிகவும் இனிமையாக விருந்தது, இந்தியச் சேனாதிபதியாகிய லார்ட் கிச்சனரும் பிரசன்னமாயிருந்தார்.

இத்தகைய பொய்யுத்தம்நடந்த விடத்தைப்பற்றிச்சில வார்த்தைகள் கூறுவாம். இவ்விடமோ ஒரு பெரிய மைதானம். இம்மைதானத்துக்குத் தென்பக்கத்திலும் வடபக்கத்திலும் அநேகம் கணவாய்களையுடைய சிறுசிறு குன்றுகளிருக்கின்றன. மைதானத்தின் கிழக்குப்பாகம் குதிரைப்படைகள் கூட்டம் கூட்டமாக விரை



ந்து செல்வதற்குத் தகுந்தவிடம். மேற்பாகமோ அப்படியல்ல. ஒவ்வொரு குதிரைவீரராய்ச் செல்லக் கூடுமேயொழியக் கூட்டமாகச் செல்லமுடியாது. இப் பொய்ச்சண்டையைப் பார்ப்பதற்காக லார்ட் கிச்சனர்சார்கோலா என்றவிடத்தில் கூடாரமடித்துத் தங்கியிருந்தார். வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரு மேறிவந்தரெயில்வண்டியான துஹாஸான்-ஆப்டா என்றவிடத்தில் நிறுத்தப்பட்டது. இவ்விடத்தில் லார்ட் கிச்சனர் இளவரசரையும் இளவரசியாரையும் சந்தித்தார் பின்னர் லார்ட் கிச்சனரும் இளவரசரும் குதிரைகள் மீதேறிப் போர்க்களம் நோக்கிச் சென்றார்கள். அவர்கள் பின்னாக இளவரசியாரும் லேடி ஷார்லட்ஸ்பரியும் ஒரு பெரிய யானை மீதேறிச் சென்றார்கள். பன்னிரண்டு குதிரைப்படையார்களும் நான்கு குதிரைப் பீரங்கிப் படையார்களும் இந்தப் பொய் யுத்தத்தில் கலந்து சண்டை செய்தார்கள். ராவல் பிண்டியில் இளவரசியார் தங்கியிருக்க, இளவரசர் மட்டும் பொய்ச்சண்டை நடந்த களத்திலேயே அமைக்கப்பட்டகூடாரமொன்றில் லார்ட் கிச்சனரின் விருந்தாளியாருந்தார். மறுநாள் புதன் கிழமையன்றும் ராவல்பிண்டி மைதானத்தில் ஒருபெரிய பொய்ச்சண்டை நடந்தது. அமெரிக்கா தேசத்துப் படையைச் சேர்ந்த ஜெனரல் மாக் ஆர்தரும், ஆஸ்டிரேலியா தேசத்துப்படையைச்சேர்ந்த கர்னல் இர்வினும் ஜப்பானிய ஏகாதிபத்தியப் படையைச்சேர்ந்த மெஜர் ஹிகாஷியும், பிக்கானீர், ஆல்வார், ஜோட்பூர் மகாராஜாக்களும் பிரசன்னமாருந்தார்கள். அடுத்தநாள் வியாழக்கிழமையன்று டாக்ஷிலாமாவும் ராவல்பிண்டிக்குச்சென்று வேல்ஸ் இளவரசருடைய பேட்டிபெற்றார். இவருடன் 300-பேர் வந்திருந்தார்கள். 8-ந்தேதி வெள்ளிக்கிழமையன்று வேல்ஸ்இளவரசரும் இளவரசியாரும் ராவல்பிண்டியில் திரட்டப்படிருந்த படைகளையெல்லாம் பார்வையிட்டார்கள். ராவல்பிண்டியில் தூசியதிகம். தூசியதிகமாக்க் கிளம்பிவிட்டால் எதிரேயுள்ள எந்த வஸ்துவையும் பார்ப்பது கஷ்டமாகிவிடும். படையார்கள் அணிவகுத்துச்சென்றால் அவர்களைப் பார்ப்பதே கஷ்டமாகிவிடும். ஆகையினாலே தூசிகிளம்பவிடாதபடி முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளெல்லாம் செய்யப்பட்டிருந்தன. படைகள் மொத்தத்திற்கு 55000-பேர் இவர்கள் அணி அணியாகப் பிரிந்து நின்று வேல்ஸ் இளவரசர் முன்னர்வந்துசலாம் செய்து போகவேண்டும். குதிரைவீரர்களும் காலாட்வீரர்களும

உற்சாகத்தோடு துள்ளிக் குதித்துவரும்போது தூசியானது கிளம்புமாதலால் அதனை நீக்கச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. வேல்ஸ் இளவரசருக்கு எதிரேயும் வலப்பக்கத்திலும் இடது பக்கத்திலும் கொஞ்சத்தூரம் வைக்கோல்பரப்பப்பட்டிருந்தது. ஆனால் 55000-வீரர்கள் வந்து குதிக்கும்போது இவ்வைக்கோல் எவ்வளவுநேரம்தான் தாங்கும்? ஆகையினாலே தூசி ஒருவேளை கிளம்பினாலும் அதனை யடக்கும்பொருட்டுத் தண்ணீர் தெளிக்கும்படியாக அநேகர் தயாராக வைக்கப்பட்டிருந்தார்கள்.

அன்று காலை மிகவும் குளிராயிருந்தது. காற்றானது கொஞ்சங்கூட அசையவில்லை. ஆகையினாலே தூசி கிளம்பினலங்கே அடங்காது போய்விடுமோவென அஞ்சப்பட்டது. கொஞ்சநேரத்துக்கெல்லாம் வெயிலடித்துப் பிரகாசஞ் செய்யவே படையாளர்கள் கண்ணுக்கு மிகவும் நன்றாய்ப் புலப்பட்டார்கள். உக்கிரமான போர் புரியும் 55000 வீரர்கள் அணிவகுத்துச் சுமார் இரண்டரைமைல் தூரம் பரவி நின்ற காட்சியானது மிகவும் அற்புதமாயிருந்தது. நான்கு குதிரைப்பீரங்கிப் படையார்களும், பதினாறு குதிரைப்படையார்களும், ஒன்பது போர்களப் பீரங்கிப் படையார்க்களும் இரண்டு கனத்த பீரங்கிப்படையார்களும், ஐம்பத்திரண்டு காலாட்படையார்களும் 55000 தலைவர்களும் படைவீரர்களும், 13000 குதிரைகளும் 282 பீரங்கிவண்டிகளும் சாமான் சாக்கேற்றிச் செல்லும் 15000 மிருகங்களும் கஜகஜவென மொய்த்து ஆர்ப்பரித்து நின்ற காட்சியை யாவரே வருணிக்கவல்லார்? இந்தியாவில் போர்புரியும் படைகளில் ஐந்திலொருபாகத்தார் அணிஅணியாகப்பிரிந்து மௌனமாயும் அசையாமலும் மைதானத்தில் கடல்போல் பரவிநின்ற காட்சியை வேல்ஸ் இளவரசர் கண்குளிரப்பார்த்தானந்தித்தார். வேல்ஸ் இளவரசரும் லார்ட் கிச்சனரும் மற்றும் பரிவாரத்தினரும் குதிரைகள் மீதேறிச் சுமார் ஒரு மணிநேரம் படைகளையெல்லாம் ஒருபக்கமிருந்து கடைசி அணிவரையில் பார்வையிட்டுச் சென்றார்கள். வேல்ஸ் இளவரசியார் குதிரைவண்டியிலேறிப் பின்தொடர்ந்து சென்றார்கள். கடைசியில் இளவரசரும் லார்ட் கிச்சனரும் வைக்கோல் பரப்பப்பட்ட இடத்தில் வந்து நின்றபோது டாஷிலாமாவும் அங்குப் பிரசன்னமாயிருந்தார். முரசுகளும் பேரிகைகளும் முழங்கின. யுத்தக்



கருவிகள் எம்மருங்கும் ஒலித்திசைத்தன. மேஜர் ஜெனரல் வில்லேடர்ட்ஸ், பார்ஸன்ஸ், காலின்ஸ், எலியட், ஹென்ரி, ஸர்ஜன் ஜெனரல் ஸர்தாமஸ் கால்வெ, லெப்டினென்ட் ஜெனரல் காவிலி, ஸர் பிண்டன்பிளட், ஸர் ஆர்ச்சிபால்ட் ஹண்டர் முதலிய சேனாதிபதிகளும் லார்ட் கிச்சனரும் முன்னணியில் நின்றார்கள்.

முதல்முதல் 'ராயல் ஹார்ஸ் ஆர்டிலரி'ப்படையார் வெகு கம்பீரமாக இளவரசர் முன்பு சென்றார்கள். பின்னர் இந்தியக் குதிரைப் படையார்கள் அணிவகுத்து அணி அணியாகச் சென்றார்கள். துப்பாக்கிகளும், கத்திகளும், ஈட்டிகளும், வேல்களும் தாங்கிய குதிரைவீரர்கள் அதிவிரைவாகச்சென்ற காட்சி பிரமிக்கத்தக்கதாயிருந்தது. பின்னர்க் காலாட்படையார்களும் சென்றார்கள். ஆங்கிலேய வீரர்களும், சீக்கியவீரர்களும் ராஜபுத்திர வீரர்களும், மகமதியவீரர்களும், மாப்பிளாவீரர்களும், கூர்க்கா வீரர்களும், அணி அணியாகத் துள்ளி சென்றார்கள். கொஞ்சநேரம் கழித்த பின்னர் ஜெனரல் ஹெய்க் என்பவர் அதிவேகமாய்ப் பாய்ந்துவரக் குதிரைப் படையார்கள் அணிஅணியாய்த்தாவிச்சென்றார்கள். எழுபது வெள்ளம் வானரச்சேனைகளை ராமபிரானும் சுக்கிரீவனும் பார்த்ததுபோல் வேல்ஸ் இளவரசரும் லார்ட் கிச்சனரும் பார்த்துப் பூரித்தார்கள். இந்தத் 'தானை' காண்படலத்தை வருணிக்கக் கம்பரே வேண்டும். இப்படிப்படைகள் அதிதீவிரமாக அணிவகுத்துச் சென்றபோது எங்கேயோ அவிழ்த்துவிடப்பட்ட கோவேறுகழுதையொன்று கட்டுதடுமாறி இளவரசர் முன்பு கனைத்துக்கொண்டோடிச் சென்றதைப் பார்த்து யாவரும் நகைத்தனர்கள். படையார் அணிவகுத்துச்சென்ற காட்சிக்கு இதையொரு திருஷ்டிக்கழிப்பென்றே யாவரும் மகிழ்ந்தார்கள். இந்தியப் படைவீரர்கள் மிகவும் உறுதியான தேகமும் தளராத ஊக்கமும் சிறந்த போர்ப்பயிற்சியும் பெற்றவர்களென வேல்ஸ் இளவரசர் படையார்களுக்கெல்லாம் தெரியப்படுத்தியிருந்தார். அன்று மாலை வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும், காஷ்மீர் தேசத்தில் ஜம்முவென்றவிடம் நோக்கிப்பிரயாணமானார்கள்.

## ஜம்முவில் தாமதம்.

(9உ—10உ)

9-ந்தேதி சனிக்கிழமை பகற்காலையில் இளவரசரும் இளவரசியாரும் ஜம்மு நகரம் போய்ச்சேர்ந்தார்கள். ஜம்மு மகாராஜா தம்முடைய சகோதரரும் ராஜ்யவத்தலைவரும் மந்திரியுமாகியவர் அமார்சிங்குடனும், அவருடைய குமாரர் மியான்சாயப்புடனும், மிகவும் உபசாரஞ்செய்து வேல்ஸ் இளவரசரையும், இளவரசியையும் எதிர்கொண்டழைத்தார்கள். சத்வாரி ரயில்வேஸ்டேஷனுக் கருகாமையிலேயே வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் ஜம்மு நாட்டிலிருக்கும் வரையில் தங்குவதற்கு ஒரு கூடார மடிக்கப்பட்டிருந்தது. அந்தக் கூடாரத்துக்குச் சக்கரவர்த்தி குமாரர் ரயில் விட்டிறங்கினதும் போய்ச் சேர்ந்தார். ரயில்வேஸ்டேஷன் முதல் அக்கூடாரம் வரையில் பலங்கொண்ட கூர்க்கர்களும், பருத்த முரடர்களான டோகிராஸ் படையார்களும் அணிவகுத்து நின்றார்கள். இளவரசர் கூடாரத்திற் போய்ச்சேர்ந்த சிறிது நேரத்துக்கெல்லாம் சமஸ்தானத்துப்பெரிய உத்தியோகஸ்தர்கள் இவர் போய் விருந்தினர்களின் க்ஷேம சுகத்தைப்பற்றி விசாரித்துவிட்டு வந்தார்கள். அப்புறம் மகாராஜாவே 11-30மணிக்கு சுமாருக்கு வேல்ஸ் இளவரசரை யவர் இறங்கியிருந்த விடத்திற் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்.

அன்று பிற்பகலில் தர்பார் நடந்தது. 'மந்தி' அரண்மனையில் வேல்ஸ் இளவரசர் மகாராஜா அவர்களைப் போய்ப் பார்த்தார். பிற்பாடு அன்றிரவு ராஜவிருந்து நடந்தது. விருந்து மண்டபமானது மின்சார விளக்குகளால் பிரகாசித்துக்கொண்டிருந்தது. விருந்து முடிந்தவுடன் மகாராஜா அவர்கள் தம்முடைய ராஜ விசுவாசத்தைக் காட்டிச் சிறிதுநேரம் பேசி வேல்ஸ் இளவரசர் ஜம்முவுக்கு வந்ததற்கறிகுறியாக அவ்விடத்தில் ஸ்டேட் காலேஜ்கட்டவேண்டுமென்றும் அதற்கு பிரின்ஸ் ஆவ்வேல்ஸ் காலேஜ் எனப் பெயரிடவேண்டுமென்றும் கூறினார். வேல்ஸ் இளவரசரும் அன்பாகவும் இனிமையாகவும் கூறினார்கள். அன்றிரவு நகரமெல்லாம் தீபமயமாய்ப்பிரகாசித்தது. வாட என்ற விடத்திலிருந்து வந்திருந்த திபேத்தியச் சந்நியாசிகள் பேயாட்டம் ஆடியது மிகவும் அற்புதமாயிருந்தது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமையானதால் ஓய்வுநாளா



கக்கொண்டாடப்பட்டது. சுமார் 20000 ஏழைகளுக்கு அன்னம்போடப்பட்டது. வேல்ஸ் இளவரசருடன் கூடவந்த பரிவார படையார்களுக்குக் கொடுக்கப்படுவதாயிருந்த 5000 ரூபாயையும் ஏழைகளுக்கு அன்னம்போடுவதில் செலவழிக்கும்படியாக இளவரசர் தெரிவித்தபடியினால் அன்று ஏழைகள் காட்டிய உற்சாகம் மிகவும் அதிகமாயிருந்தது. மகாராஜா அவர்களும் இளவரசரும் இளவரசியாரும் நேரிற்சென்று ஏழைகள் சாப்பிடுவதைப்பார்த்து அவர்களை அன்போடு உபசரித்தார்கள். அன்று மாலை இளவரசரும் இளவரசியாரும் அமிருதசரஸ்நோக்கிப் பிரயாணமானார்கள்.

## அமிருதசரத்தில் தாமதம்.

(11உ)

11ந் தேதிகாலை வேல்ஸ் இளவரசியும் இளவரசரும் அமிருதசரஸ் போய்ச்சேர்ந்தார்கள். பஞ்சாப்லெப்டினென்ட் கவர்னராகியவர் சார்ல்ஸ்ரைவாஸும் மற்றுஞ்சில உத்தியோகஸ்தர்களும் அதிக உபசாரத்துடன் எதிர்கொண்டழைத்தார்கள். அப்பொழுது அவ்வூர் முனிசிபாலிடியார் வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்க, அதற்கு வேல்ஸ் இளவரசர் தக்கபடி பதில் சொன்னார். அப்புறம் கால்ஸாக்கலேஜைப் போய்ப்பார்க்க அங்கு சக்கரவர்த்தி குமாரருக்கு ஒரு நல்வரவுப்பத்திரிகை வாசித்துக்கொடுக்கப்பட்டது. அதற்கும் இளவரசர் சமயோசிதமாய்ப் பதில் சொன்னார். பின்னர் சீக்கியர்களுடைய அதிசயக்கத்தக்க தங்கக் கோவிலைப்பார்த்து ஆனந்த மடைந்து அக்கோவிலுக்கு சக்கரவர்த்தி குமாரர் தான் பார்வையிட்டு வந்ததின் அறிகுறியாக 1500-ரூபாய் நன்கொடை கொடுத்தார். இவ்விதமாய் இளவரசர் சீக்கியர்களுடைய பெருமையையும் கீர்த்தியையும் சிறப்பையும் கண்குளிரப்பார்த்து அன்றிரவு டில்லி நோக்கிப் பிரயாணமானார்கள்.

## டில்லியில் தாமதம்.

(12உ—15உ)

12-ந் உ வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் டில்லிபோய்ச் சேர்ந்தார்கள். இளவரசரும் இளவரசியாரும் டெல்லிவந்து சேர்ந்த போது பனியானது சற்றே உக்கிரமாகப் பெய்தபோதிலும் ஆகாயம் சுத்தமாகவும் குளிர்ச்சியாகவுமிருந்தது. டெல்லியோ மிகவும் புரா

னமான பட்டணம். இந்த நகரத்தில் எங்குப்பார்த்தாலும் பழங்காலத்து வேந்தர்களுடைய கீர்த்திப் பிரதாபம் விளங்கும். பலவருஷங்களுக்கு முன்னர் நாதிர்ஷா என்ற கொடியோன் டெல்லிமீது படையெடுத்துவந்து அதனைக் கைப்பற்றி நகரத்திலுள்ள ஜனங்களை வதைத்துக் கொன்றபோது "ஷாண்டிசௌக்" என்றவிடமானது ரத்தமயமாயிருந்தது. "ஜும்மாமஸ்ஜிட்" என்ற பெரிய கட்டிடத்தைக் கடந்து, "ஷாண்டிசௌக்" வழியாகப் பிரவேசித்து "மோரிகேட்"* வழியாகச் சென்று "நிக்கல்ஸன்" கல்லறையையும், "ரஞ்சிட்சிங்" கல்லறையையும் கடந்து "கொடிஸ்தம்பக் கோபுரம்' போய்ச்சேர்ந்தார்கள். டெல்லியானது சிப்பாய்க் கலகக் காலத்தில் முற்றுகை போடப்பட்டபோது இந்தக் 'கொடிஸ்தம்பக் கோபுர'த்தில் பிரிடிஷ்வீரர்களுக்கும் சிப்பாய்களுக்கும் பெரிய யுத்தம் நடந்தது. இவைகளையெல்லாம் கடந்துசென்று இளவரசரும் இளவரசியாரும் 'சர்க்கியூட் அவுஸ்' போய்ச்சேர்ந்து அந்தமாளிகையிலேயே வாசஞ்செய்தார்கள்.

டெல்லியிலுள்ள நகர மண்டபத்தில் டெல்லி முனிசிபாலிடியார் வந்தனோபசாரப் பத்திரிகை *வாசித்தார்கள். தெருக்களிலெல்லாம் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகத்திரண்டு சந்தோஷஆரவாரங் காட்டினார்கள். டெல்லியானது பல விஷயங்களில் மிகவும் முக்கியமான நகரம். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியவர்கள் இந்திய அரசாட்சியை நேராகக்கைப்பற்றி இந்தியச் சக்ரவர்த்தினியென்ற பேர் பூண்ட விஷயம் முதல் முதல் இவ்விடத்திலேயே இந்திய ஜனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எட்வர்ட் மகாராஜா அவர்கள் இந்தியச் சக்கரவர்த்தியான விஷயமும் தெரிவிக்கப்பட்ட இடமும் இதுவேயாகும். சென்ற சில வருஷங்களாக டெல்லியானது வியாபார வர்த்தகத் தொழிலின் முயற்சிகளில் விருத்தியடைந்திருக்கின்றது. தொழிற்சாலைகளும் யந்திரசாலைகளும் இவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது எட்வர்ட் மகாராஜாவாயுள்ளவர்கள் சுமார் முப்பது வருஷங்களுக்குமுன்னர் டெல்லியைப் பார்த்தகாலத்தில் மூன்று ரெயில்வேக்கள் மட்டும் இந்நகரத்துக்கு வந்தன. இப்போது ஏழு ரெயில்வேக்கள் இவ்விடத்துக்கு வருகின்றன. இன்னொரு ரெயில்வேயும் கூடிய சீக்கிரத்தில் வந்து சேரும். முனிசிபாலிடியாருடைய வந்தனோபசாரப் பத்திரிகைக்கு வேல்ஸ் இளவரசர் இனிமையாகப் பதில்சொன்னார்.



வேல்ஸ் இளவரசர் அமிருதசரசில் சீக்கியர்களுடைய பெருமையையும் கீர்த்தியையும் சிறப்பையும் கண்டார். டெல்லியிலே மொகலாயர்களுடைய பெருமையையும் கீர்த்தியையும் சிறப்பையும் கண்டார். 11-ந் தேதி திங்கட்கிழமையன்று சீக்கியர்களுடைய தங்கக்கோயிலைப்பார்வையிட்டார். அன்று டெல்லியிலுள்ள "ஜும்மா மஸ்ஜிட்" என்ற மகம்மதியப் பள்ளிவாசலைப் பார்வையிட்டார். சீக்கியர்களும் மகம்மதியர்களு மொருவரை யொருவ ரெதிர்த்து மிகவும் கொடுமையாகவும் உக்கிரமாகவும் போர் புரிந்தவர்கள் இவ்விரண்டு ஜாதியாரும் இப்போது வேல்ஸ் இளவரசரை ராஜ விசுவாசத்தோடும் உள்ளன்போடு மெதிர்கொண்டழைத்து உபசரிப்பதை, நோக்கும்போது பிரிடிஷ் அரசாட்சியின் பெருமை நன்கு விளங்கிற்று.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் டெல்லியின் தெருக்களில் சென்று ஆங்குள்ள பற்பல அபூர்வமான காட்சிகளையெல்லாம் பார்வையிட்டார்கள். முதல் முதல் "காஷ்மீர்கேட்" டைப் பார்த்தார்கள். பிற்பாடு ஜெனரல் ஸ்கின்னரால் கட்டப்பட்ட கிறிஸ்தவக் கோயிலைப் பார்த்தார்கள். அப்பால் கருமருந்துச்சாலையைப்பார்த்தார்கள். சிப்பாய்க் கலகம் நடந்தபோது இந்தக் கருமருந்துசாலையை ஒன்பது ஆங்கிலேய வீரர்கள் மிகவும் சௌரியமாகக் காத்துநின்றார்கள். கடைசியில் சிப்பாய்கள் கிட்ட நெருங்கித் தாக்கவே ஆங்கிலேய வீரர்கள் கருமருந்துச் சாலையைத் தீக்கொளுத்தி எல்லோரும் மரித்தார்கள். பிற்பாடு டெல்லியிலுள்ள பழைய மொகலாயக் கோட்டையைப் பார்த்தார்கள். பின்னர் "விக்டோரியா ஜூனானா ஆஸ்பத்திரி"யைப் பார்த்தார்கள். மறுநாள் புதன்கிழமையன்று ஸர் ஆர் ராஜாவுக்கும், பாஸ்வியா சர்தாருக்கும், பாட்டாடி, லோஹாரு ஜொஜு நவாப்புகளுக்கும் வேல்ஸ் இளவரசர் பேட்டி கொடுத்து ஆதரவாய்ப் பேசினார்.

டெல்லியில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பார்த்த காட்சிகளைப்பற்றி சற்று இங்கே விவரித்துக் கூறுவோம். மறுநாள் புதன்கிழமையன்று "சர்க்கியூட் அவுஸ்" மாளிகையிலிருந்து பிரயாணப்பட்டு முதல் முதல் "கொடிஸ்தம்பக் கோபுர"த்தைப் பார்வை

விட்டார்கள். சிப்பாய்க் கலகம் நடந்தபோது இந்தக் கோபுரத்தருகே ஆங்கிலேயர்கள் மிகவும் உக்கிரமாகப் போர் செய்ததுண்டு. பின்னர் ஹிந்துராவென்ற ஓர் மராட்டியப் பிராமணர் வீட்டைப்போய்ப்பார்த்தார்கள். சிப்பாய் கலகம் நடந்த காலத்தில் மேஜர் ரீடும் கூர்க்காப் படையாளர்களும் இந்த வீட்டில் தங்கியிருந்து எதிரிகளாகிய சிப்பாய்களோடு மிகவும் தீவிரமாகப் போர்புரிந்திருப்பதுண்டு. மோரிகேட்டையும், பழைய் கருமருந்துச் சாலையையும், பழைய கிரிஸ்தவக் கோயிலையும், காஷ்மீர் கேட்டையும் பார்வையிட்டு, லட்லோகாஸில், குட்ஸியாத்தோட்டம், நிக்கல்ஸன் கல்லறை முதலிய காட்சிகளையும் கண்குளிரப் பார்த்தார்கள். அன்றையதினம் ஸர்ஜூர்ராஜாவின் அரண்மனைக்கு வேல்ஸ் இளவரசர் சென்று அவரைப்பார்த்தார். பின்னர் அன்றுமாலை ஒரு ராஜா விருந்து நடந்தது. "சர்க்கியூட் அவுசில்" பலவகையான உபசாரங்களும் நடந்தன. அப்போது அநேகம் சுதேசமன்னர்களும் ஆங்கிலேயர்களும் பிரசன்னமாயிருந்தார்கள். அடுத்த நாள் வியாழக்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் டெல்லியைச் சுற்றியுள்ள அற்புதக் காட்சிகளைப் பார்த்தார்கள். காலைச் சாப்பாட்டானவுடனே மோட்டார் வண்டியேறி ஹுமாயூனுடைய கல்லறையையும், பழைய டெல்லி நகரத்தையும் பார்வையிட்டுக் "குதுப்மினார்" என்ற கோபுரத்துக்குச் சென்று ஆங்குப் பகற்போசனம் செய்தார்கள். பிற்பாடு சால்டர்ஜங்கினுடைய கல்லறையைப்பார்த்துவிட்டு மாலைப்பொழுதில் குளிர்ந்த காற்றடித்துக்கொண்டிருக்கையில் டெல்லிக்குத் திரும்பினார்கள். ராஜரீக சம்பந்தமான வேலையொன்றும் செய்யப்படவில்லை.

'குதுப் மினார்' என்ற கோபுரமானது மிகவும் பெரியதென்பது இந்தியச்சரித்திரம் படித்தோரனைவருக்கும் தெரியும். இதனருகே தருமபுத்திரர் ஆண்ட இந்திரப் பிரஸ்தமெனும் நகரமிருக்கின்றது. பாண்டவர் காலத்தில் வெட்டப்பட்ட சம்ஸ்கிருத எழுத்துக்கள் இன்னும் இந்தத் தூணில் காணப்படுகின்றன. ஆனால் குதுப்உடீன் என்னும் மகம்மதிய அரசனால் கட்டப்பட்ட குதுப் மினார் எனும் கோபுரமோ இந்த இரும்புத்தூணைவிட எத்தனையோ மடங்கு பெரியது. 'ஜும்மாமஸ்ஜிட்' என்ற பள்ளிவாசலுக்கும் 'குதுப் மினார்' என்ற கோபுரத்துக்கும் மத்தியில் அநேகம் அருமையான



காட்சிகளைக்காணலாம். இடிந்துபோன கோட்டைகளும் கொத்தளங்களும், கோயில்களும் சுவர்களும் எங்குப் பார்த்தாலும் காணலாம். அசோகனென்னும் சக்ரவர்த்தியால் நடப்பட்ட இரண்டு பெரிய கல்தூண்களையும், 'புரானா கிலா' என்ற பௌத்தக் கோயிலையும், "ஷீர்ஷா". "ஷீர்மாண்டல்" என்ற பல பள்ளிவாசல்களையும் பார்வையிட்டுக் கடைசியில் அக்பர் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட ஹுமாயூன் கல்லறையைப்போய்ப்பார்த்தார்கள். ஷேக் நிஜாமுடீனவலியாவென்ற பள்ளிவாசலையும், ஷாஜிஹான் சக்கிரவர்த்தியின் குமாரத்தியாகிய ஜகானாராபீகத்தின் கல்லறையையும் பார்வையிட்டார்கள். "ஜும்மாமஸ்ஜீட்" பள்ளிவாசலைத் தாம் பார்த்ததற்கறிகுறியாக வேல்ஸ் இளவரசர் அப்பள்ளிவாசலுக்கு 1500-ரூபாய் கொடுத்தார்கள்.

நாலாநாள் வெள்ளிக்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் டெல்லியில் தர்பார் நடந்த இடத்தைப் போய்ப் பார்த்தார்கள். அன்று தினம் பிற்பகலில் லேடி ஹைவாஸால் ஒரு தோட்டக்கச்சேரி நடத்தப்பட்டது. பின்னர் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் ஆக்ராநோக்கிப் பிரயாணமானார்கள். அவர்கள் பிரயாணமானபோது டெல்லியிலுள்ள தெருக்கள் தீபமயமாய்ப்பிரகாசித்தன. வேல்ஸ் இளவரசர் டெல்லியிலிருந்து பிரயாணமாவதற்கு முன்பாக பஞ்சாப் கவர்ன்மெண்ட் சீப் செக்ரிடேரியாகிய மிஸ்டர் ஏ. எச். டயாக் என்பவருக்குக் கமாண்டர் ஆப் தி ராயல் விக்டோரியன் ஆர்டர் என்று பட்டமளித்தார்.

## ஆக்ரா.

### (16உ—19உ)

16-ந் தேதி சனிக்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் ஆக்ரா நகரம் போய்ச் சேர்ந்தபோது ஏராளமான ஜனங்கள் எம்மருங்கும் திரண்டு மிகவும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் நல்வரவு கூறினார்கள். ரெயில்வே ஸ்டேஷனிலேயே ஆக்ரா முனிசிபாலிட்டியார் மிகவும் அன்பாக வந்தனோபசாரப் பத்திரிகை வாசிக்க அதற்கு வேல்ஸ் இளவரசர் பதில் சொன்னார். பின்னர் "சர்க்கியூட் அவுஸ்" மாளிகைக்குச்சென்று ஆங்குத் தங்கியிருந்தார்

கள். அன்று பிற்பகலில் இளவரசரும் இளவரசியாரும் அக்பர்சக்கரவர்த்தியின் கல்லறையைப் பார்த்தார்கள். அன்றிரவு ஆக்ரா நகரம் முழுவதும் தீபத்தாலும் வெளிச்சங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் இளவரசரும் இளவரசியாரும் ஆக்ராவிலுள்ள அபூர்வமான காட்சிகளைப் பார்த்தார்கள். 'இட்மாட் அட்டௌலா' என்ற கல்லறையையும் 'தாஜ் மஹால்' என்றபெரியகட்டடத்தையும்பார்வையிட்டார்கள். இக்கட்டடத்தின் அழகை விஸ்தரிப்பது முடியாத விஷயம். ஜிஹாங்கிர் சக்கரவர்த்தியால் நூர்ஜிஹானென்ற தமது மனைவிக்காக இக்கட்டடம் கட்டப்பட்டது. அடுத்த நாள் திங்கட்கிழமை காலை இளவரசரும் இளவரசியாரும் ஆக்ராவிலுள்ள கோட்டையைப் போய்ப் பார்த்தார்கள். 'டெல்லிகேட்' வழியாக நுழைந்து 'பேர்ல்மாஸ்க்' திவான்காயாம், ஸமன் பர்ஜ், ஜாஸ்மைன்டவர், ஜீஹாங்கீர் அரண்மனை முதலிய பல கட்டடங்களைச் சுமார் இரண்டு மணிநேரம் பார்த்து ஆனந்தமடைந்தார்கள். காலஞ்சென்ற விக்டோரியாமகாராணியவர்களின் ஞாபகச்சின்னமாக ஆக்ராவில் அமைக்கப்பட்டிருக்கும் உருவச்சிலையை யன்று பிற்பகலில் வேல்ஸ் இளவரசர் திறந்தார். அப்போது ஜெனரலிஸ்மிஸ்டர் ஜஸ்டிஸ் நாக்ஸ் ஒரு சிறிய வந்தனபத்திரிகை வாசித்தார். அதற்கு வேல்ஸ் இளவரசர் பதில் சொல்லியபோது விக்டோரியா மகாராணியவர்கள் இந்தியாவிடம் வைத்திருந்த அன்பானது பரம்பரையாய் வளர்ந்து வருமெனக் கூறினார். அன்றிரவு 'வர்க்கிஹுட்அவுஸில்' ஐக்கியமாகாணங்களின் லெப்டினெண்ட் கவர்னராகியவர் ஜெம்ஸ்லாடுச்சும் அவரது மனைவியாரும் ஒரு விருந்தளித்தபோது வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் மற்றும் அநேகரும் பிரசன்னமாயிருந்தார்கள்.

செவ்வாய்க்கிழமை இளவரசரும் இளவரசியாரும் மோட்டார் வண்டியேறிப் பாடிப்பூர் ஸிக்ரி என்றவிடத்துக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைப்பார்த்தார்கள். இது அக்பர் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட பழமையான நகரம். இப்போது இது மிகவும் சேதமான ஸ்திதியிலிருந்தபோதிலும் மொகலாய சக்கரவர்த்திகளால் அமைக்கப்பட்ட அநேக அபூர்வமான கட்டடங்கள் இவ்விடத்தில் இன்னும் காணப்படுகின்றன.



இந்த விடத்துக்கு விஜயபுரம் என்றுபேர். அக்பர்சக்கரவர்த்தியானவர் தமக்கு ஆண்மகவு உண்டான சந்தோஷத்துக் குறிகுறியாக இந்த நகரத்தைப் புதிதாகக் கட்டினார். சிலவருஷகாலம் அவர் இந்நகரத்தில் வாசஞ்செய்தார். இந்நகரம் ஆதியில் ஆக்ராவை விட மிகவும் அழகுடையதா யிருந்தது. ஆனால் அக்பர் இந்நகரத்தில் வெகுநாள் வாசஞ்செய்யாது போய்விட்டபடியால் நகரமானது புற்பூண்டுகள் முளைத்து விலங்குகளுக்கும் பக்ஷிகளுக்கும் உறைவிடமாயிற்று. ஆறுமைலில் தூரம் கட்டப்பட்ட சுவர்களும் சுவர்களின்றி வறண்டுகிடக்கும் ஏரிகளும் பள்ளிவாசல்களும் கோயில்களும் அரண்மனைகளும் கல்லறைகளும் இன்னும் காணப்படுகின்றன. சுமார் முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னர் அக்பர் சக்கரவர்த்தி எதிரிகளைத் தகர்த்து வெற்றிபெற்றுத் திரும்புகையில் ஸிக்ரி என்ற விடத்தில் தங்கினார். இவரது ராஜபுத்திர மனைவியாகிய மாரியம் ஜாமேனியின் வயிற்றிற் பிறந்த இரட்டைக் குழந்தைகள் மரித்தமையால் இவர் மிகவும் துக்கங்கொண்டு இவ்விடத்திலே ஒரு குகையில் வசித்த ஷேக்ஸெலிம்ஷிஸ்டி என்ற மகமதியச் சந்நியாசியொருவரிடம் சென்று தம்முடைய குறைத்துக்கூறச் சந்நியாசி ஆசீர்வாதஞ்செய்து ஒரு புத்திரன் பிறப்பானெனக் கூறினார். சந்நியாசி கூறிய ஒன்று மாதங்களுக்குப் பின்னர் தமது ராஜபுத்திர மனைவியாருக்கு ஆண்குழந்தையொன்று பிறக்கவே, அக்பர் சக்கரவர்த்தி மிகவும் ஆனந்தங்கொண்டு அவனுக்கு ஸெலிம் அல்லது ஜிஹாங்கிர் எனப்பெயரிட்டு மிகவும் அருமையாய் வளர்த்துத் தமது நன்றியறிதலுக் கடையாளமாகப் பாடிப்பூர் ஸிக்ரி என்ற நகரத்தை மிகவும் பெரிதாகக்கட்டி முடித்தார். இவ்விடத்தில் 'புலந் தார்வாஜா' என்ற பெரிய மண்டபத்தையும் 'ஜம்மா மஸ்ஜித்' என்ற பெரிய பள்ளிவாசலையும் திவான் ஐ-கஸ் மாளிகையும் தமக்குப் பிரத்தியேகமாக வேறு பல அரண்மனைகளையும் பற்பல அழகிய ஏரிகளையும் கட்டினார். இவ்வளவு அழகான நகரத்தை இவர் ஏன் விட்டுச்சென்றாரென்பதற்குப பல காரணங்கள் கூறப்படுகின்றன. இந்நகரமானது சுகாதாரக் குறைவாயிருந்ததென்றும் போதுமான தண்ணீர்வசதியில்லாதிருந்ததென்றும் ஆகையினாலே அக்பர்சக்கரவர்த்தி யிதனைவிட்டுப் போய்விட்டாரென இரண்டு காரணங்களை சொல்லப்படுகின்றன. இந்நகரத்தில் ஜனப்பெருக்கமாமிச் சந்தடி

மிகுதியாகச் சந்நியாசியானவர் ஆக்பரை இந்நகரத்தைவிட்டுப் போய்விடும்படியாகக் கேட்டுக்கொண்டாரென்றும் ஆகையினாலே ஆக்பர் சென்றுவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது. அன்றுமாலை வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் குவாலியர் நோக்கிப்பிரயாணமானார்கள்.

## குவாலியர்.

### (20உ—25உ)

20-ந் தேதிபுதன்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும்இளவரசியாரும் குவாலியர் நகரம் போய்ச்சேர்ந்தார்கள். குவாலியர் மகாராஜா அவர்கள் ரெயில்வே ஸ்டேஷனில் பிரசன்னமாயிருந்து இளவரசரையும் இளவரசியாரையு மெதிர்கொண்டழைத்து மிகவும் சந்தோஷமாகவும் மிகவும் அன்பாகவும் உபசாரஞ் செய்தார். மகாராஜா அவர்களும் வேல்ஸ் இளவரசரும் ஒருபெரிய யானைமீதேறிக்கொண்டார்கள். கவர்னர் ஜெனரல் ஏஜண்டாகிய மேஜர் டாலியும் வேல்ஸ் இளவரசியாரும்வேறொரு யானைமீதேறிக்கொண்டார்கள். நகரத்தின் தெருக்களிலெல்லாம் கத்திப்படையார்களும் ஈட்டிப்படையார்களும் வேற்படையார்களும் அணிவகுத்து மிகவும் ஒழுங்காகவும் அணியணியாகவும் நின்றார்கள். சிவப்புடைதரித்த பல்லக்குப் போயிகளும் அநேகம் யானைகளும் கண்ணுக்குப் புலப்பட்ட காட்சி மிகவும் அபூர்வமாயிருந்தது. இளவரசரும் மகாராஜாவும் இளவரசியாரும் மேஜர்டாலியு மேறிச்சென்ற இரண்டு யானைகளும் மிகவும் பெரியவையாயிருந்தன. சிவப்பு வஸ்திரங்களாலும் தங்க ஆபரணங்களாலும் இவ்விரண்டு யானைகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவ்விரண்டுயானைகளின் முகங்களிலும் துதிக்கைகளிலும் ராஜவிருதுகள் பல எழுதப்பட்டிருந்தன. வேல்ஸ் இளவரசருடன் வந்த பரிவாரத்தினரும் யானைகள் மீதேறியே சென்றார்கள். யானையுடைய படைகாண்டல் முன்னினிதெனத் தமிழர் கூறுவர். யானையானது அரசர்களுக்குரித்தானது. இப்படிச் செய்ததே இந்து மன்னர்கள் செய்யும் முறைமைகளில் பொருத்தமுடையது. இந்தியாதேசத்தின் யானைச்சிறப்பும் மன்னர்தம் சிறப்பும்குவாலியர் நகரத்திலேயேதெற்றென விளங்கினமொத்தத்துக்கு 36 யானைகள் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரு மேறிச்சென்றயானைகள் மிகவும் பெரியவை. உருவத்திலும் உயரத்திலும், பருமனிலும் பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தன. இவர்களேறிச்சென்ற இரண்டுயானைகளுக்குத் தங்க அம்பாரிகள் வைக்கப்பட்டிருந்தன. தங்கச் சங்கிலிகளும், குண்டலங்களும் போடப்பட்டிருந்தன. தங்கமுகப்படாம் அணியப்பட்டிருந்தது. நான்கு கால்களிலும் வெள்ளிச்சதங்கைகள் கட்டப்பட்டிருந்தன தங்கத்தாற்செய்த அங்குசங்கொண்டு யானைப்பாகர்கள் தங்கள் தங்கள் யானைகளைச் செலுத்தினார்கள். வெள்ளிமணிகளிருபுறமும் தொங்கின. மகாராஜாவின் ஸர்தார்களும் யானைமீதேறியே சென்றார்கள்.



தெருக்களில் பற்பலவகையான ஜனங்கள் கூடியிருந்தார்கள். மகாராஜாவின் கஞ்சுகிகள் அணிவகுத்து நின்றார்கள். ஒட்டகப்படை வீரர்களும்ஈட்டிப்படை வீரர்களும் ஒழுங்காய் நின்றார்கள். காட்டியக் குதிரைகள் வரிசையாக நின்றன. ஏகாதிபத்தியச் சேவக ஈட்டிப்படையார் கம்பீரமாகத் திரண்டிருந்தார்கள். காலாட்படையார்களும் மற்றும் அரண்மனைப் படையார்களும் அணியணியாகப் பிரிந்துநின்றார்கள். மிகவும் உக்கிரமான கோபமும் பருத்துருண்ட புயங்களும் பயங்கரமான பார்வையும் நரம்புக் கட்டான தேகமுமுடைய கத்திப்படையார் குதிரைகள்மீது வீற்றிருந்த காட்சியானது எவரும் அஞ்சத்தக்கதாயிருந்தது. இப்படையார் மஹாட்டியக் குதிரை வீரர்களின் சந்ததியார். இப்படையாருடைய முன்னோர்கள் ஸட்டாராவிலிருந்து டெல்லிவரையிலும், பம்பாயிலிருந்து வங்காளக் குடாக்கடல் வரையிலும் மொகலாயர்களைத் தகர்த்துப் பொடிசெய்த வீரர்கள். பேஷீன், கல்கட்டா, டெல்லி, ராஜபுதனம் முதலிய இடங்களையும் மத்தியமாகாணங்களில் அநேகம் பாகங்களையும் தகர்த்த வீரர்களிவர்களே. தெருக்களிலெல்லாம் இளவரசரும் இளவரசியாரும் சென்றபோது மலர்மாரிபொழிந்தது. காகிதத்தாற் செய்யப்பட்ட புஷ்பங்களும், மரங்களும், இலைகளும், கொடிகளும், எங்கும் காணப்பட்டன. வெள்ளையுடையும் பலவகைசிறந்த தலைப்பாகைகளும் தரித்து ஜனங்கள் ஈக்கள்போல் தெருக்களிலெல்லாம் மொய்த்து நின்றார்கள்.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் குவாலியர் போய்ச் சேர்ந்தபோது ரெயில்வே ஸ்டேஷனிலேயே நடந்த சில வைபவங்

களைச் கூறுகின்றோம். ரெயில்வண்டி ஸ்டேஷன் வந்து சேர்வதற்குச் சிறிது நேரத்துக்கு முன்பாக ஸிந்தியா மகாராணியவர்களும் ஸிந்தியா மகாராஜாவின் தாயாரவர்களும் ஏகாதிபத்ய ஈட்டிப் படையாரும் காலாட்படையாரும் சூழ்ந்துவர ரெயில்வே ஸ்டேஷனுக்குப்போய் ஆங்குக்கட்டப்பட்டிருந்த திரைக்குள்ளிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து ஸிந்தியா மகாராஜா அவர்களும் போய்ச் சேர்ந்தார்கள். மகாராஜா அவர்கள் கழுத்தில் விலையற்ற முத்து மாலையொன்று தரித்திருந்தார்கள். ரெயில்வண்டி ஸ்டேஷன்வந்து சேர்ந்ததும் இளவரசனையும் இளவரசியாரையும் மகாராஜா அவர்கள் எதிர்கொண்டழைத்தார்கள். பழையகோட்டைமதிலிலிருந்து பீரங்கிகள் முழங்கியிருந்தன. ஜெனரல் ஸர் ஆர்ச்சிபால்ட் ஹன்டர், ஸீனியர் ஸர்தார் ஸிட்டோலியா முதலிய பலர் பிரசன்னமாயிருந்தார்கள். இளவரசர் துப்பாக்கிப் படையார்களைப் பார்வையிட்டு யானைமீதேறினர். தெருக்களிலெல்லாம் ஈட்டிப்படையார் நின்றார்கள். வீட்டு மேல்மாடிகளில் பெண்கள் திரண்டிருந்தார்கள், பேரிகைகளும் முரசங்களும் ஆர்ப்பக் கொம்புகள் முழக்கெடுப்ப ஒட்டகப் படையாரும் குதிரைமீதேறிய கத்திவீரர்களும் திரண்டார்கள். மணிகள் கட்டிய குதிரைகள் தெருக்களில் துள்ளி ஆரவாரித்துச் சென்றன. பாரவேல்களும் கூரியவாள்களுமேந்திய கரத்தினராய் யானைகள் குதிரைகள் ஒட்டகங்கள் மனிதர்களினூடே யன்றாறு வீரர்கள் பறந்து சென்றார்கள். தேர்ப்படையொன்றுதான் இவ்விடத்தில் காண முடியவில்லை. அபிமன்னனை முடித்தலை தனித்த சிந்து தேசாதிபதியின் சிறப்பை யாவரே கூறவல்லார்? "வேன்கு நெடுங்கட் செவ்வாய்மெல்லியய்'' ஜானகியின் மணக்கோலம் காணுமாறு மிதிலையில் தோன்றிய காட்சியோ யிஃதெனப் பார்த்தோர் மயங்கினர். மகாராஜா அவர்களால் தமது சமஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸிவில் மிலிடேரி யென்ற இரண்டு கலாசாலை மாணவர்களும் பிரசன்னமாயிருந்தார்கள். முப்பத்தாறு யானைகள் இரண்டிரண்டாக அணிவகுத்துச் சென்ற காட்சி மிகவும் அற்புதமாயிருந்தது.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் அரண்மனைபோய்ச் சேர்ந்ததின் பின்னர்த் தர்பார் நடந்தது. தர்பார் மண்டபம் தங்க



மயமாய்ப் பிரகாசித்தது. வேல்ஸ் இளவரசர் சிம்மாசனத் தமர்ந்து மகாராஜாவுடன் சிறிதுநேரம் சம்பாஷித்துவிட்டுப் பின்னர் பன்னிருவர் தங்களுக்குப் பேட்டி கொடுத்தார்கள். மகாராஜா அவர்கள் வேல்ஸ் இளவரசருக்கு அத்தரும் வெற்றிலையும் கொடுத்துப் புஷ்ப மாலை சூட்டினார்கள். பின்னர் வேல்ஸ் இளவரசர் மகாராஜாவுக்குப் புஷ்பமாலை சூட்டினார்கள். அன்றையதினம் பிற்பகலில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் லாஷ்கர் என்ற விடம் சென்று ஆங்கு விக்டோரியா மெமோரியல் மார்க்கெட்டைத் திறந்தார்கள். அப்போது மகாராஜா அவர்கள் ஒருபசாரப்பத்திரிகை வாசிக்க வேல்ஸ் இளவரசர் பதில் சொன்னார். பின்னர் மார்க்கெட்டிக்கு மின்சார விளக்கு வேலையும் திறக்கப்பட்டது. இதற்காக மூன்று லக்ஷம்ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. வாணவேடிக்கைகள் நடந்தன. அநேகம் தீபக்கூண்டுகள் ஆகாயத்தில் பற்பல நிறங்களோடு மின்னிப் பறந்தன.

குவாலியர் நகரத்தில் அரண்மனைக்கு வெளியே மூன்றுமைல் தூரத்திலுள்ள பெரிய மைதானத்தில் மறுநாள் வியாழக்கிழமையன்று ஸிந்தியா மகாராஜாவினுடைய படைகளை வேல்ஸ் இளவரசர் பார்வையிட்டார். அம்மைதானம் பார்ப்பதற்கு மிகவும் அழகு வாய்ந்தது. செம்மண் பூமி. நான்கு பக்கங்களிலும் சிறிய குன்றுகளும் ஓரங்களிலெல்லாம் பசிய மரங்களும் மைதானத்தை அலங்காரஞ்செய்தன. ஸிந்தியா மகாராஜாவின் பெரிய கோட்டையைக் கிரீடமாகப் பெற்ற மலையானது மிகவும் விசாலமான யுத்தக்கப்பல் போல பயங்கரமான தோற்றத்துடன் ஒருபக்கம் விளங்கிக் கொண்டிருந்தது. சூரிய வெளிச்சத்தாலும் கோட்டைச் சுவர்கள் பற்பல வருணங்களுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மைதானத்தில் இடதுபக்கத்திலுள்ள சிறிய மலைக்குன்றில் இவ்வேடிக்கையைப் பார்ப்பதற்காக ஏராளமான ஜனங்கள் திரண்டிருந்தார்கள். வலதுபாகத்தில் வேல்ஸ் இளவரசரும் ஸிந்தியாமகாராணியவர்களும் உயர்ந்த மேடையொன்றில் வீற்றிருந்தார்கள்.

மைதானத்தில் மத்தியிலே குதிரைப் பீரங்கிப் படையார்களும், யானைப் பீரங்கிப் படையாரும், குதிரை வீரர்களும் எருது பீரங்கிப்படையாரும் காலாள்படையாரும் மற்றும் பற்பல போர்த்

தொழில்செய்யும் வீரர்களும் இரண்டு சேர்ந்திருந்தார்கள். மகாராஜாவின் அரண்மனைப் படையார் பலருண்டு. ஏகாதிபத்தியச் சேவகத்துக்காக மூன்று குதிரைப்படையர்களும், இரண்டு காலாட் படையார்களும், மற்றொருபடையுமாக ஆறுபடைகளுண்டு. இரண்டு குதிரைப்பீரங்கிப் படையார்களும் மூன்று குதிரைப் படையார்களும், ஒரு எருதுப் பீரங்கிப்படையார்களும், ஒருயானைப்பீரங்கிப் படையாரும், நான்கு காலாட்படையார்களும், ஒரு ஸாப்பர் படையாருமாக மொத்தம் 5000 பேர் ஸிந்தியா மகாராஜா அவர்களால் நடத்தப்படுகிறார்கள்.

காலை 9-மணிக்கு வேல்ஸ் இளவரசர் இப்படைகளையெல்லாம் பார்வையிட்டபோது முதல் முதல் யானைவீரர்கள் வந்தார்கள். கோபங்கொண்டு துள்ளிய வெங்களிறுகள் கைம்மலைகள்போல் திரண்டுருண்டுவந்தன. மகாராஜாவின் ஸர்தார்கள் ஒவ்வோர்யானை மீது மேறியிருந்தார்கள். யானைப்படையார் புறப்பட்டுவந்து ஒட்டகப் படையாருடனும் சுத்தி வீரர்களுடனும ஈட்டி வீரர்களுடனும் சேர்ந்தார்கள். பின்னர் ஈட்டிப்படையார் சூழ்தர வேல்ஸ் இளவரசரும் வேல்ஸ் இளவரசியாருமம் சகல ஆடம்பரங்களோடும் மைதானம் வந்துசேர்ந்தார்கள். பிறகு சகல வேடிக்கைகளும் ஆரம்பமாயின. வாத்தியப் படையார் குதிரைமீதேறி முன்னணியிற்சென்றார்கள். பின்னர் ஸிந்தியா மகாராஜா அவர்களும் பரிவாரத்தினரும் சென்று வேல்ஸ் இளவரசரை வணங்கினின்றார்கள். பலங்கொண்ட பீரங்கிப்படையார் அணிவகுத்துச் செல்ல குதிரைப்படையார் பின்னேவேயே பறந்து வந்தார்கள். யானை வீரர்களும் காலாள் வீரர்களும் அணியணியாய்ச் சென்றார்கள் அரண்மனைப்படையார்களும் ஏகாதிபத்தியச் சேவகப்படையார்களும் வேல்ஸ் இளவரசர் முன்பு சென்றார்கள். இப்படைகளையெல்லாம் இளவரசர் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டார். குதிரைப் பீரங்கிப் படையார் வந்தபோது வேல்ஸ் இளவரசர் முன்பாக ஒரு குதிரை தமொறி விழுந்துவிட்டது. பின்னணியில் விரைவாகத் துள்ளிவந்த குதிரை வீரர்கள் எங்கே இக்குதிரையை மிதித்துவைத்து விடுகின்றார்களோ வெனச் சந்தேகிக்கப்பட்டது. ஆனால் ஸிந்தியா மகாராஜாவின் பரிவாரப் படையார்களி லொருவர்



சென்று விழுந்த குதிரையை யெழுப்பித் தூக்கினார். வேல்ஸ் இளவரசர்மகாராஜாவின படையார்களி லொன்பதுபேருக்குத் தென்னாப்பிரிக்காவில் செய்த யுத்தத்துக்காகப் பதக்கம் அளித்தார்கள் ஸிந்தியா மகாராஜா தமது படைகளை அந்நிய நாடுகளுக்கு யுத்தஞ் செய்ய இதுவரை யனுப்பாதிருந்த போதிலும் தென்னாப்பிரிக்காவுக்குஇவர் படைகளனுப்பியதும் சீனாவுக்கு வைத்தியக் கப்பலொன்றனுப்பியதும்நம்நேயர்களுக்குத்தெரியும்

அன்று பிற்பகலில் ஒருபெரிய பொய்ச்சண்டை நடந்தது. அதனைக்கண்டு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பின்னர் அன்றிரவு மகாராஜாவின் அரண்மனையில் ராஜவிருந்து நடந்தது. விருந்து நடந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மேஜையைச் சுற்றி ஒரு சிறிய வேடிக்கை ரயில் வண்டியானது ஒயின் முதலிய மதுபானங்களை யேற்றிக்கொண்டு சுற்றிச் சுற்றிச் சென்ற காட்சி மிகவும் அற்புதமாயிருந்தது. விருந்து முடிந்தவுடன் ஸிந்தியா மகாராஜா அவர்கள் மண்டபத்துள் பிரவேசித்து உபசாரமாகச் சில வார்த்தைகள் சொல்ல, வேல்ஸ் இளவரசரும் உபசாரமாகச் சிலவார்த்தைகள் கூறினார். இந்தச் சமயத்தில் வட இந்தியாவில் கொஞ்சம் மழைபெய்தது. வேல்ஸ் இளவரசரின் வருகையினாலேயே மழை பெய்ததெனை ஜனங்களெல்லாம் சந்தோஷத்தால் ஆரவாரித்தார்கள். அடுத்தநாள் வெள்ளிக்கிழமை யன்று வேல்ஸ் இளவரசர் புலி வேட்டையாடினார். அதிகாலையில் இளவரசரும் இளவரசியாரும் ஸிந்தியா மகாராஜாவும் சில பரிவாரத்தினர்களும் குவாலியரிலிருந்து மோடார்வண்டியேறிப் பிரயாணமாகிச் சுமார் இருபதுமைல் தூரத்திலுள்ள பாணிபார் என்றவிடம் போய்ச் சேர்ந்தார்கள். இவ்விடத்தில் மோடார் வண்டியிலிருந்து கீழிறங்கிக் குதிரைமீதேறி வேல்ஸ்இளவரசர் சுமார் ஒன்றரைமைல் தூரம் சென்று ஆங்குக் கட்டப்பட்டிருந்த கோபுரத்தின்மீது உட்கார்ந்து புலியின் வரவை யெதிர்பார்த்திருந்தார். வேல்ஸ் இளவரசியார் பல்லக்கேறிச் சென்று இளவரசருடன் அருகில் ஓர் ஆசனத்திலிருந்தார். முந்நூறு வேவுக்காரர்கள் காட்டுக்குள் விரைந்தோடிச் சென்று முரசுகளும் பேரிகைகளும் முழங்கிப் புலியைக் கலைத்தார்கள். சாயந்திரம் 3½-மணிவரையில் புலியகப்படவில்லை. கடைசியில் ஒரு பெண்புலியும் இரண்டு குட்டிகளும் கண்ணுக்குத் தோன்றின

வேல்ஸ் இளவரசர் வீற்றிருந்த கோபுரத்துக் கெதிரே சுமார் 80-கஜத் தூரத்தில் வேறொருபுலி உல்லாசமாக விளையாடி ஓடிக்கொண்டுவந்தது. இப்படி விளையாடிக்கொண்டு வந்த புலியை வேல்ஸ் இளவரசர் ஒரேகுண்டில் கொன்றார். பெண்புலியும் குட்டிகளு மெங்கேயோ பதுங்கிவிட்டன. பின்னர் வேல்ஸ் இளவரசர் வேறே யாதொரு வேட்டையுமாடாமல் மாலை 6½-மணிக்கு அரண்மனைக்குத் திரும்பினார். காலை நாள் சனிக்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் மகாராஜாவும் குவாலியருக்கு 22-மைல் தூரத்திலுள்ள தெக்கான்பூர் என்றவிடம் நோக்கிப் புலிவேட்டை யாடச் சென்றார்கள். வேல்ஸ் இளவரசியார் கூடச் செல்லவில்லை. சுமார் 2-மணிநேரம் காட்டைக் கலைத்தபிற்பாடு ஒரு புலி தோன்றிற்று: இப்புலியை இளவரசர் சுட்டபோது புலியானது காயம் பட்டபோதிலும் ஓடிவிட்டது. மறுபடியும் தூதர்கள் சுமார் இரண்டுமணி நேரம் இப்புலியைத் தேடிக்கொண்டுவர ஸிந்தியாமகாராஜா ஒரே குண்டால் சுட்டுக்கொன்றார். இப்புலி எட்டடி நீள முள்ளதாயிருந்தது. வேல்ஸ்இளவரசரிப்படி வேட்டையாடிக்கொண்டிருந்தபோது வேல்ஸ் இளவரசியார் ஸிந்தியா மகாராணியவர்களுடன் ஆங்கிலப் பாஷையில் கலந்துசம்பாஷித்துக் கொண்டிருந்தார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாகக் கொண்டாடப்பட்டது. அன்று தினம் பிற்பகலில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும், மலைக்கோட்டையையும் மற்றும் பிரபலமான கட்டடங்களையும் பார்வையிட்டார்கள். கடைசிநாள் திங்கட்கிழமையன்று கிறிஸ்துமஸ் நாளாகக் கொண்டாடப்பட்டது. பின்னர் அன்று மாலை லக்நோ நோக்கி வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பிரயாணமானார்கள்.

## லக்நோ.

### (26உ—28உ)

26-ந்தேதி செவ்வாய்க்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் லக்நோபோய்ச் சேர்ந்தார்கள். ஐக்கிய மாகாணங்களின் லெப்டினெண்ட் கவர்னர் இளவரசரையும் இளவரசியாரையும் வரவேற்று உபசரித்தார். லெப்டினெண்ட் கவர்னரும் ஜெனரல் லாக் எலியட்டும் ஸிவில் ஆபீஸர்களையும் மிலிடேரி ஆபீஸர்களையும் இளவரசரிடம்பேட்டிசெய்து வைத்தார்கள். ராம்பூர் நவாபும் டேரி



ராஜாவும் பேட்டிபெற்றார்கள். அயோத்தியிலுள்ள தாலூக்தார்களும் பேட்டிபெற்றார்கள். லக்நோ முனிஸிபாலிட்டியார் மிகவும் உபசாரமாக வந்தனப்பத்திரிகை வாசித்தார்கள். அதற்குப்பதிலாக வேல்ஸ் இளவரசர் இனிமையாகச் சில வார்த்தைகள் கூறினார். வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் லக்நோ ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குச் சென்றபோது குதிரைப் படையார்களும், பீரங்கிப் படையார்களும், வாலண்டியர்ப் படையார்களும் மற்றும் ஏராளமான ஜனங்களும் தெருக்களிலெல்லாம் ஈக்கள் போல் மொய்த்து நின்றார்கள்.

ராம்பூர் நவாபுக்கும் டேரி ராஜாவுக்கும் பேட்டிகொடுத்த பிற்பாடு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் கவர்ன்மெண்ட் ஹவுஸ் விட்டுப் பிரயாணமாகித் தாங்கள் லக்நோவுக்குச் சென்றதின் அறிகுறியாகக் கட்டப்படும் வைத்தியக் கலாசாலையின் அஸ்திவாரக் கல் நாட்டினார்கள். இக்கலாசாலையின் விவரங்களை யிவ்விடத்தில் கொஞ்சம் கூறுவது பொருத்தமுடையதெனக் கருதுகின்றோம். சென்ற அக்டோபர் மாதம் 20-ந் தேதியன்று மகாராஜா ஸர்பிரதாப நாராயண ஸிங்கும் இன்னும் சில கனவான்களும் ஐக்கியமாகாணங்களின் லெப்டினெண்ட் கவர்னரைச் சந்தித்து இம்மாதிரி வைத்தியக் கலாசாலையொன்று கட்டவேண்டுமெனத் தெரிவித்தார்கள். உடனே நான்கு லக்ஷம் ரூபாய் சேகரிக்கப்பட்டது. பல்ராம்பூர் மகாராஜா வாகிய பாகவதி பிரசாதஸிங் மட்டும் மூன்று லக்ஷம் ரூபாய் கொடுத்தார். இப்போது சுமார் பத்து லக்ஷம் ரூபாய் சேர்ந்திருக்கிறது. இன்னும் ஐந்து லக்ஷம் ரூபாய் சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வைத்தியக் கலாசாலையின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறி ஆனரெபில் ஸர் ஜான் ஸ்டான்லி யென்பவர் ஒரு சிறிய வந்தனோபசாரப்பத்திரிகை வாசித்தார். வேல்ஸ் இளவரசர் இனிமையாக சில வார்த்தைகள் கூறிவிட்டுப் பின்னர் அஸ்திவாரக்கல் நாட்டினார்.

சிப்பாய்க்கலகம் நடந்ததின் அறிகுறியாய்த் தற்போது லக்நோவிலுள்ளவற்றை வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பார்வையிட்டார்கள். சிப்பாய்க் கலகக்காலத்தில் சண்டைசெய்த வீரர்களையும் அவர்களுடைய மனைவி மக்களையும் இளவரசரும் இளவரசியா

ரும் சந்தித்து மிகவும் அன்பாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சிப்பாய்க் கலகக்காலத்திலே சண்டைசெய்த சீக்கியவீரர்களும் ஆங்கிலேய வீரர்களும் சுமார் பதினைந்துபேர்வரையில் பிரசன்னமாயிருந்தார்கள். ஒவ்வொருவருடனும் வேல்ஸ் இளவரசர் கைகுலுக்கினார். இவர்கள் ஒவ்வொருவரும் வேல்ஸ் இளவரசருடைய சுற்றுப்பிரயாணப் புத்தகத்தில் தங்கள் சொந்தக் கையெழுத்திட்டார்கள். இக்கையெழுத்துக்களையெல்லாம் வேல்ஸ் இளவரசர் தம்முடைய சுற்றுப்பிரயாணத்தின் ஞாபகக்குறியாகப் போற்றிவைப்பார். வேல்ஸ் இளவரசியார் மிகவும் இனிமையாகச் சிப்பாய்க்கலகக்காலத்தில் முற்றுகை போடப்பட்ட கோட்டையிலுள்ளிருந்த மிஸர்ஸ் லிங்கன், மிஸர்ஸ் ஆபட், மிஸர்ஸ் டீகுருஸ், மிஸர்ஸ் ராட்கிளிவ் ஆகிய கிழவிகளுடன் கலந்து சம்பாஷித்தார். அன்று மாலை அயோத்தியிலுள்ள தாலுக்தார்கள் இளவரசருக்கு வந்தனோபசாரப்பத்திரிகை வாசிக்க இளவரசர் இனிமையாகப் பதில் சொன்னார்.

அயோத்தியிலுள்ள தாலுக்தார்கள் வேல்ஸ் இளவரசரையும் இளவரசியாரையும் உபசரித்ததானது மிகவும் சிலாக்கியமானதாகவும் புகழத்தக்கதாகவுமிருந்தது. அயோத்தியின் கடைசி அரசராகிய வாஜீத்ஷா என்பவரால் கட்டப்பட்டதும், லக்நோவிலுள்ள அரண்மனைகளிலெல்லாம் பெரியதென்றும், அலங்கார முடையதென்றும், இழிவானதென்றும் பலவாறு சொல்லப்பட்டதுமாகிய 'கெய்ஸர்-பாக்' என்ற மாளிகையில் தாலுக்தாரர்கள் உபசாரங்களைச் செய்தார்கள். வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் அம்மாளிகைக்குச் சென்றபோது ஆங்குத் தீபங்கள் மின்னிப் பிரகாசித்தன. ஆயிரக் கணக்கான ஜனங்கள் திரண்டு சந்தோஷ ஆரவாரம் காட்டினார்கள். தாலுக்தாரர்களில் சிலர் மகம்மதியர்களாகவும், சிலர் இந்துக்களாகவும், சிலர் சீக்கியர்களாகவும், சிலர் காஷ்மீர ஆப்கானிய ஜாதியர்களாகவும், தங்கவஸ்திரமும், வைரமுத்துமாலைகளும் தரித்தவர்களாகவு மிருந்தார்கள். இவர்கள் ஒவ்வொருவருடைய வரும்படியும் வருஷமொன்றுக்கு முப்பது லக்ஷம் ரூபாயென்று சொல்லப்படுகிறது. சில தாலுக்தார்கள் சாதாரணமான உடையே தரித்திருந்தார்கள். மகாராஜா ஸர் பிரதாப நாராயண ஸிங் என்பவர் வந்தனோபசாரப் பத்திரிகையொன்று வாசித்தார். பின்னர் வாணவேடிக்கைகள் நடந்தன.



மறுநாள் புதன்கிழமை காலை ராஜபேட்டி நடந்தது. ஊது கொம்புகளும், முரசங்களும், பேரிகைகளும், பீரங்கிகளும் சதாகாலமும் ஒலித்துக்கொண்டிருந்தன. அயோத்தியின் கடைசி அரசரின் சகோதரராகிய சுலைமான் காதர் என்பவர் தம்முடைய புத்திரரோடு வேல்ஸ் இளவரசரது பேட்டி பெற்றார். பால்ராம்பூர் மகாராஜாவும், அயோத்தி மகாராஜாவும், மகமதபாத் ராஜாவும், மற்றும் ஆறு தாலுக்தார்களும் பேட்டி பெற்றார்கள். பின்னர் வேல்ஸ் இளவரசர் 'மோதி மஹால்' என்ற மாளிகைக்குச் சென்று ராம்பூர்ஸவாரைப் பார்வையிட்டார்கள். இஃதோடு காலையிற் செய்யவேண்டிய வேலைகள் முற்றுப்பெற்றன. பிற்பாடு அன்று பிற்பகலில் இளவரசரும் இளவரசியாரும் "ஹுஸெயினபாத்" தோட்டத்துக்குச் சென்று ஆங்கு "யுனைடெட் ஸர்விஸ் கிளப்" பாரும், "மகமத் பாக் கிளப்" பாரும் கொடுத்த விருந்தில் பிரசன்னமாயிருந்தார்கள். லக்நோவிலுள்ள அரண்மனைகளும், கல்லறைகளும் பார்ப்பதற்கழகற்றிருந்த போதிலும், ஆங்குள்ள தோட்டங்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. "ஹுஸெயினபாத்" தோட்டமானது பார்ப்பதற்கு மிகவும் அலங்காரமாயிருந்தது. இத்தோட்டத்தின் பராமரிப்புக்காக வேண்டிய திரவியம் நிதியாகச் சேர்க்கப்படிருக்கிறது. வேல்ஸ் இளவரசரும இளவரசியாரும் தோட்டத்துக்குச் சென்ற சமயம் மாலைப்பொழுதாகையால் காட்சியானது மிகவும் உல்லாசமாகவிருந்தது. "யுனைடெட் ஸர்விஸ் கிளப்" பார் புதன்கிழமை யன்றிரவு ராஜவிருந்து நடத்தினார்கள். கடைசி நாள் வியாழக்கிழமை பிற்பகல் ஒன்றரைமணிக்கு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் கல்கட்டா நோக்கிப் பிரயாணமானார்கள்.

## கல்கத்தா.

### (29௳—ஜனவரி 6௳)

29௳ மாலை வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும கல்கட்டா போய்ச் சேர்ந்த போது, ஸர் ஆண்ட்ரு பிரேஸரும், சீஃப்ஜஸ்டிஸும், கல்கட்டா பிஷப்பும், லெப்டினென்ட் ஜெனாலும், இன்னும் மற்ற ஜனங்களும் உற்சாகமாக எதிர்கொண்டழைத்தார்கள். கல்கத்தா முனிசிபாலிடியார் வந்தனோபசாரப்பத்திரிகை மிஸ்டர் ஸீலாம்பர் முக்கர்ஜியால் வாசிக்கப்பட்டு, முத்துக்களாலும் வைரங்களாலும் செய்யப்பட்ட

மாலையொன்றை வேல்ஸ் இளவரசியாருக்கு உபசாரமாக அளிக்கப்பட்டது. வேல்ஸ் இளவரசியார் உடனே வெகு பிரியத்துடனும் சந்தோஷத்துடனும் அம்மாலையை யணிந்துகொண்டார்கள். பின்னர் வேல்ஸ் இளவரசர் கல்கத்தா முனிசிபாலிட்டியாருடைய வந்தனோபசாரப் பத்திரிகைக்குத் தக்கபடி உபசாரமாக பதில் சொன்னார். அப்பால் இளவரசரும் இளவரசியாரும், எல்லன்பரோ கோர்ஸ் ரெட்ரோட் வழியாக கவர்ன்மெண்ட் அவுஸ் நோக்கிச் சென்றார்கள் அப்பொழுது பாதையின் இருமருங்கிலும் ஜனங்கள் ராஜகுமாரரைப் பார்க்கவேணுமென்கிற மிகுந்த ஆவலுடன் மொய்த்து நின்றார்கள். இளவரசரும் இளவரசியாரும் கவர்ன்மெண்ட் அவுஸ்வந்து சேர்ந்தபோது, லார்டு மிண்டோ, லேடிமிண்டோ, லார்ட் கிச்சனர், அட்மிரல்போ, டாஷிலாமா, டாங்ஷாபென்லாப், ஸிக்கிம் மகாராஜா முதலியவர்கள் பிரசன்னமாயிருந்து எதிர்கொண்டழைத்தார்கள். பின்னர் அன்றைய தினம் 'லெவி' கொண்டாட்டம் நடந்தது. அது மிகவும் சிறப்புற்றதாயும், சிலாக்கியமானதாயுமிருந்தது. மறுநாள் காலமே சக்கரவர்த்தி குமாரர் "கிங்ஸ்ஓண்ரெஜிமெண்ட்" படையாருக்கு கொடிகளளித்தார். பிறகு வேல்ஸ் இளவரசியாரும் லேடி பிரேஸரும் டப்ரின் ஆஸ்பத்திரியைப் போய்ப்பார்த்தார்கள், அன்று பகல் கல்கத்தா மைதானத்தில் குதிரைப்பந்தய வேடிக்கை நடந்தபோது கூச்பேகார் மகாராஜா தம்முடைய குதிரைமேலிருந்து கீழே விழுந்து விட்டனர். ஆனால் அவருக்கு அபாயமான காயமொன்றுமில்லை. வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் குதிரைப்பந்தயத்தைப்பார்த்து நேத்திரானந்தமடைந்தார்கள். பின்னர் அன்றிரவு லெப்டினெண்ட கவர்னராகிய ஸர்ஆண்ட்ருபிரேஸரால் அவர்களுக்கு ராஜ விருந்தளிக்கப்பட்டது. அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலமே கோயிலுக்குப் போய்வந்தார்கள். பிறகு அன்று ஓய்வுநாளாகக் கொண்டாடப்பட்டபோதிலும், அவர்கள் விருக்ஷங்கள் வைக்கப்பட்டிருக்கும் "பொட்டானிக்கல்" தோட்டத்தைப்போய்ப்பார்வையிட்டார்கள். அதன்பின்னர் இளவரசரும்இளவரசியாரும் புகைக்கப்பலேறி பாரக்பூர் சென்று திரும்பினார்கள். நாலாநாள் திங்கட்கிழமை ஜனவரி முதல் தேதியாகையால் காலமே கல்கத்தா மைதானத்தில் சில ராணுவப் பயிற்சிகள் நடத்தப்பட்டது. அதற்கு இளவரசரும் இளவரசியாரும் பிரசன்னமாயிருந்தார்கள். அன்று



பிற்பகல் வேல்ஸ் இளவரசர் ஆகாக்கானைப்பார்த்தார்கள். அப்பொழுது இளவரசியார் ஓர் கோஷா மாதர்களின் கூட்டத்துக்குப்போய் வங்காளத்து ஸ்திரீகளிற் சிலரைச் சந்தித்துசந்தோஷமாகவும் வேடிக்கையாகவும் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் அப்பெருமாட்டி கூச்பேகார் மகாராணியாரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பலமாதர்களுக்கும் பதக்கமளித்தார்கள். அன்றிரவு இளவரசரையும் இளவரசியாரையு முத்தேசித்து கவர்ன்மெண்ட் அவுஸில் ராஜவிருந்து நடந்தது. அப்போது கொஞ்சம்மழைபெய்த படியால் தெருக்களில் கண்காட்சியாக அமைத்து வைத்திருந்த அலங்காரங்களிற் சிலபாகம் அழிந்துபோயிற்று. அவ்விராஜ விருந்துக்கு சர்க்கார் உயர்பதவி சிவில், மிலிடெரி உத்தியோகஸ்தர்களுள் பலர் வந்திருந்தார்கள்.

செவ்வாய்க்கிழமை வேல்ஸ் இளவரசர், டாஷிலாமாவுக்கும், ஸிக்கிம் மகாராஜா குமாரருக்கும், பூடான் மகாராஜா குமாரருக்கும், டாங்ஸா பென்லாப்புக்கும் பேட்டிகொடுத்தார். அன்னார்கள் ராஜகுமாரரை பாதகாணிக்கைகள் வைத்துக் கண்டார்கள். இளவரசர் அக்காணிக்கைகளை யேற்றபாவனையாய் தாம் அவைகளைக் கையால் தொட்டார். பிறகு கூச்பேகார் மகாராஜா செய்த சிறுவிருந்துக்கும் போயிருந்தார். அன்றைய தினம் கல்கத்தா மைதானத்தில் இந்திய ஏழைகளுக்கு விருந்தளிக்கப்பட்டது. அன்றுசாயங்காலம் கல்கத்தாவாசிகள் தர்பாங்கா மகாராஜாவைத் தலைவராய்க்கொண்டு அவர்தலைமையின்கீழ்க்கூடி இளவரசரையும் இளவரசியாரையும் வரவேற்று வெகுகோலாகலமாய் உபசரித்தார்கள். அச்சமயத்தில் பொழுதுபோக்குக்கு ஆதாரமாயுள்ள பலவித தமாஷ்கள் நடந்தன. புதன்கிழமை தினம் சக்கரவர்த்திகுமாரரும் இளவரசிப் பெருமாட்டியும் கல்கத்தா ஹைகோர்ட் ஜஸ்டிஸ்ஸர் பிரான்ஸிஸ் மக்லீனோடும் லேடிமக்லீனோடும் சிறுவிருந்துண்டார்கள். சாயங்காலம் ராஜப்பிரதிநிதி லார்ட்மிண்டோவும் லேடிமிண்டோவும் தங்களுடைய வரவைக்கருதி நடத்திய தோட்டக்கச்சேரிக்கும்போய் இளவரசரும் இளவரசியும் உல்லாசமாய்ப்பொழுதுபோக்கினார்கள். அன்றிரவு அவர்களிருவரும் இந்தியச் சேனாதிபதி லார்ட்கிச்சனரோடு விருந்துண்டுவிட்டு அந்நகர்தீப அலங்காரக் காட்சியைப்பார்க்க நகர்வலம் வந்தார்கள். மறுநாள்காலமே வேல்ஸ் இளவரசர் கல்கத்தா

மெடிகல் காலேஜைபோய்ப்பார்த்து வந்தார். மாலையில் கல்கத்தா விக்டோரியா ஞாபகச்சின்னக்கட்டடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அப்போது பெங்காளலெப்டினென்ட்கவர்னர் ஸர் ஆண்ட்ரு பிரேஸர் விக்டோரியாஞாபகச்சின்ன சம்பந்தமான சரித்திரத்தைச் சொல்லி அந்த சின்னக்கட்டடத்துக்கு, நீங்கள் அஸ்திவாரம்போட வேண்டும் என்று இளவரசரைக் கேட்டுக்கொள்ள அவர் அதற்கு இசைந்து, ஸர் ஆண்ட்ருபிரேஸருடைய அட்ரெஸ்ஸுக்குச் சிறந்ததோர் பிரசங்கரூபமாய்பதில் சொல்லிவிட்டு அஸ்திவாரக்கல் நாட்டினார். கடைசிநாளாகிய வெள்ளிக்கிழமை தினம் பிற்பகலில் கல்கத்தாவைச் சேர்ந்த பாரக்பூர்நோக்கி வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் சென்றார்கள்.

சுற்றுப்பிரயாண விவரப்பட்டியிற்கண்டபிரகாரம் இளவரசர் டார்ஜிலிங்குக்குப் போகாமல் பாரக்பூர்போனார். போகிறதற்கு முன்னே புதன்கிழமை தினம் இளவரசர் ஆனரபில் மிஸ்டர் கோகலேக்கு பேட்டியளித்தார். அந்த பேட்டியின்போது முக்கியமான எவ்விஷயத்தைப்பற்றியும் பிரஸ்தாபம் நடக்காமல் பொதுவாகச் சொற்ப நேரம் வார்த்தையாடித்திரும்பிவிட்டார்கள். இளவரசர் கல்கத்தாவுக்கு வந்ததை முன்னிட்டுக் கல்கத்தா வியாபாரிகளிற் பிரபலஸ்தரும் சென்றவருஷம் கல்கத்தா ஷெரிபாயிருந்தவருமாகிய மிஸ்டர் கேபிளுக்கும் கல்கத்தா உபசாரணைக் கமிட்டியின் செக்ரிடேரியாகிய மகாராஜாகுமார் ப்ரோதயாத் குமார டாகோருக்கும் 'நைட்' பட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மிஸ்டர் ஈ. வி. கேபிரியல் என்பவருக்கு 'ஸி. வி. ஓ.' என்றபட்டமும், மேஜர் ஆடம், மிஸ்டர் பெய்லி, மிஸ்டர் எக்கார், மிஸ்டர் ஹாலிடே ஆகிய நால்வருக்கும் 'எம். வி. ஓ.' என்ற பட்டமும் கொடுக்கப்பட்டன. மேலும் இளவரசரும் இளவரசியாரும் கல்கத்தாவில் பிரசன்னமாயிருந்தபோது அங்குள்ள போலீசார் செய்த வேலைகளுக்காக மிகவும் வந்தனஞ்செலுத்தி கல்கத்தா போலீஸ் கமிஷனர் ஸர்வால்டர் ஸாரன்ஸுக்கு ஒரு நிருப மெழுதினார். தவிர, குப்பரின்டெனெண்ட் ஹாவ் டெயின் என்பவருக்கும் இன்ஸ்பெக்டர் ஹான்லென் என்பவருக்கும் "விக்டோரியன ஆர்டர்" வெள்ளிப்பதக்கங்களும், இன்ஸ்பெக்டர் பி. கே. குப்தாவுக்கும்பிரத்தியேகமான பதக்கமொன்றும் அளிக்கப்பட்டன. இளவரசருடைய சன்மானங்கள்



இதுமட்டு மிற்காமல் கல்கத்தாவைவிட்டுப் பிரயாணமாகுமுன்னே வைசிராய்க்கும், வங்காளத்து லெப்டினென்ட் கவர்னருக்கும் இரண்டு நேர்த்தியான வெள்ளிச் சின்னங்கள் இளவரசர் ஞாபகார்த்தமாகக் கொடுத்துச்சென்றார். அது போலவே வைசிராயின் பரிவாரத்தாரனைவருக்கும் சிறு சிறு ஞாபகார்த்தப்பொருள்கள் கொடுக்கப்பட்டன. கடைசியாக கல்கத்தாவிலுள்ள கிறிஸ்துவத் தருமங்களுக்காக வேல்ஸ் இளவரசர் 1500 ரூபாய் கொடுத்தார். இளவரசரும் இளவரசியாரும் பாரக்பூரில் 3 நாள் தாமதித்து 9-ந்தேதி செவ்வாய்க்கிழமையன்று அவ்விடத்திலிருந்து ரங்கூன் நோக்கிப் பிரயாணமானார்கள்.

## கப்பற் பிரயாணம்.

(9உ—12உ)

9-ந்தேதி செவ்வாய்க்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசரும் இளவரசியாரும், பாரக்பூரைவிட்டுப் பிரயாணமாகி ஹூக்ளிநதி வழியாகச் சென்று "கார்டன்ரீச்" என்றவிடம்சேர்ந்து, "கைட்" என்ற ஸ்டீமரிலேறி கங்கை நதியின் முகத்துவாரம் போய்ச்சேர்ந்தார்கள். இங்கே "ரிநவுன்" என்ற கப்பலும் மற்றக் கப்பல்களும் காத்துக்கொண்டிருந்தன. "டெரிபிள்" என்ற யுத்தக்கப்பல் மிகவும் பெரியதானதால் சமுத்திரத்திலே நாற்பது மைல் தூரத்துக்கு அப்பால் நங்கூரம் பாய்ச்சிநின்றது. அன்று தினம் மாலைப்பொழுதில் 'ரிநவுன்' என்ற கப்பலில் இளவரசரும் இளவரசியாருமேறியபோது வெடிகுண்டுகள் போடப்பட்டன' மறுநாள் அதாவது புதன்கிழமையன்று காலை 'ரிநவுன்' என்ற கப்பல் வங்காளக் குடாக்கடல் மார்க்கமாக ரெங்கூன் நோக்கிப் பிரயாணமாயிற்று. ரெங்கூன் துறைமுகத்தில் "ரிநவுன்" என்ற கப்பலானது நங்கூரம் பாய்ச்சினவுடனே புத்தர்களுடைய ஷ்வீடாகன் கோயிலானது பிரத்தியக்ஷமாயிற்று. ஸூலிப் பகோடாத் துறைமுகத்தில் சுமார் 2000 ஜனங்கள் திரண்டிருந்து இளவரசருக்கும் இளவரசியாருக்கும் நல்வரவு கூறினார்கள்.

## ரங்கூன்.

### (13வ—15வ)

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் 12-ந்தேதி வெள்ளிக்கிழமை சாயங்காலம் ரங்கூன் போய்ச் சேர்ந்தார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய ரினௌன் கப்பலிலேயே இராப்பொழுதைக் கழித்தார்கள். மறுநாட் காலமே அவர்களிருவரும் வெகு கோலாகலமாய் பர்மா லெப்டினென்ட்கவர்னர் ஸர். எச். டி. வொயிட்டாலும், சீவ்ஜஸ்டிஸ் ஸர். எச். ஆட்ம்ஸோனும் மற்றுமுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்களாலும் வழக்கப்பிரகாரம் உபசாரமாக வரவேற்கப்பட்டார்கள்.

ராஜ தம்பதிகளின் வரவேற்புக்காக சுலேபகோடா பாலத்தில் விசேஷ ஏற்பாடுகளுடன் பந்தல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. உபசரணைக் கமிட்டிக்கு பர்மியர் சீனர், இந்தியர், மகமதியர், பார்ஸியர் முதலிய ஒவ்வொரு ஜன சமூகத்தினின்றும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டிருந்தனர். லெப்டினென்ட் கவர்னரும் அவரது பரிவாரங்களும், தரைப்படை, கப்பற்படைத்தலைவர்களும், சீப்கோர்ட் ஜட்ஜிகளும், சட்ட நிருபணசபை மெம்பர்களும், முக்கியமான கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களும் வரவழைக்கப் பட்டிருந்தனர். ஷான்தேசத்து அரசர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். "ரினௌன்" என்ற கப்பலில் இருந்து ராஜதம்பதிகள் "டோகோ" என்ற ஸ்டீம் படகில் ஏறி சுமார் 3½ மைல் தூரம் ஐராவதி நதியில் பிரயாணம்செய்து சுலேபகோடாபாலத்தில் வந்து இறங்கினார்கள். ஸ்டீம் படகு பாலத்தை யணுகியவுடன் போர்ட்டி பென்ஸ் பாட்டரியிலிருந்து 31 மரியாதைக் குண்டுகள் வெடி தீர்க்கப்பட்டன. லெப்டினென்ட் கவர்னர் வாஞ்சில் இறங்கி ராஜதம்பதிகளை வரவேற்று பாலத்தில் அழைத்து வந்தனர். சீப்கோர்ட் சீப்ஜட்ஜி ஆனரெபில் ஸர் ஹெர்ளி ஆட்மென் வரவேற்புக்கு அழைக்கப் பட்டிருந்த பிரதிநிதிகளை ராஜ தம்பதிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிறகு உபசரணைப் பந்தலுக்கு வந்தவுடன் உபசரணைக் கமிட்டிச் சேர்மன் மிஸ்டர் K. பின்லே (Kirkmen Finlay) லெப்டினென்டு கவர்னரால் பரிச்சயம் செய்விக்கப்பட்டபின் ஆனரெபில் மிஸ்டர் பூஷைவேலே வைங் நல்வரவுப்பத்திரிகை வாசித்தார். நல்வ



வுப்பத்திரிகைக்குப் பதில்சொல்லி முடித்ததும் உபசரணைக்கமிட்டி மெம்பர்கள் அறிமுகம் செய்யப்பட்டதும் ராஜ தம்பதிகள் கவர்ன்மெண்ட்வண்டியிலேறி கவர்ன்மெண்ட் அவுசுக்குப் புறப்பட்டனர். வழி நெடுகிலும் அங்கங்கே இந்தியர்கள், சீனர்கள், பர்மியர்கள் ஒவ்வொரு வகுப்பாரும் சிங்காரித்திருந்த பந்தல்களில் உபசரிக்கப் பெற்று கவர்ன்மெண்ட் ஹவுஸ் போய்ச் சேர்ந்தனர். அன்று மாலை விக்டோரியாமிமோரியல் தோட்டத்தின் பிரவேச உற்சவம் இளவரசரால் நடத்தப்பெற்றது. ஞாயிற்றுக்கிழமை ராஜதம்பதிகள் தேவாலயத்துக்குச் சென்றுவந்து மாலை ஷ்வேடகான் பகோடா என்ற புத்தரின் சுவர்ண ஆலயத்தைப் போய்ப் பார்த்து வந்தனர்.

15 தேதி காலை வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பீ. டீ. லிமிடெட், யானைகள் வேலைசெய்யுமிடத்தில் விஜயஞ்செய்தார்கள். அக்கம்பெனிமானேஜர் மிஸ்டர் ஹொயால் உபசரிக்கப்பட்டு 1-மணிநேரம் வரையில் யானைகள் விசித்திரமாய் வேலைசெய்வதை கவனித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு பகல் 4½ மணிக்கு தங்களது திருமாளிகையில் பர்மா, ஷான், பார்ஸி, இந்து கனவான்களுடன் தோட்டவிருந்து நடந்தது. இரவு 8-மணிக்கு ஒரு சிறுவிருந்து நடந்தது. பிறகு 9½ மணிக்கு ராஜநடாகத்தில் விசித்திரமாக ஜோடித்திருந்த போட்டில் சிறு நேரம் தம்பதிகளோடு நீர்விளையாட்டு நடந்தது. சுமார் 10 மணிக்குமேல் பாணவேடிக்கைகள் நடந்தன.

ரங்கூனில் வேல்ஸ் இளவரசர் விஜயஞ்செய்த சமயத்தில் அவ்விடத்திலுள்ள கண்காட்சியை விவரிக்க சாத்தியமில்லை. ஆனாலும் இயன்றமட்டும் சற்று விவரிப்போம். ராஜதம்பதிகள் தெருக்களில், பலவிதருங்காலெயில் பர்மாஸ்திரீகள் பார்ஸிமாதர்கள், சீனஸ்திரீகள், இந்தியஸ்திரீகள் ஆகிய எல்லோரும் அவரவர்கள் பிரத்தியேகமாய் திவ்வியாலங்கிருதமாய் அமைத்துவைத்த சிங்காரப்பந்தல்களில் ராஜதம்பதிகளை உபசரிப்பதையும், அவர்கள்மேல் புஷ்பங்கள் சிதறுவதையும், எங்குபார்த்தாலும் ஜனங்கள் இருமருங்கிலும் சந்தோஷ முகவிலாசத்துடன் மொய்த்து நிற்றலையும், சாயங் கரியும், டல்ஹௌஸித் தோட்டமும் தீபமயமாய்ப்பிரகாசிப்பதையும் பார்க்கப்பதினாயிரங்கண்கள் வேண்டும். ஆங்குள்ள புத்தகோயில் களில் காணப்படும் பற்பல காட்சிகளை காவல் சொல்லத்தரமல்ல. தற்சமயத்தில் ரங்கூனில் தீபாலங்காரமானது மிகவும் விஸ்தியமா

யிருந்தது. எங்கெல்லாம் வெளிச்சமயமாய்ப் பிரகாசித்தன. சூரியன் அஸ்தமனமானவுடனே மரங்களும், வீடுகளும், பாலங்களும், துறைமுகத்திலுள்ள கப்பல்களும், ஸ்டீமர்களும், தோணிகளும், பல்லாயிரம் தீபங்களுடையவைகளாய்த் தோன்றிய காட்சி மிகவும் அற்புதமாயிருந்தது.

மேற்சொல்லியவைகளையெல்லாங் கண்டு நேத்திரானந்தமடைந்து, ரங்கூனில் யானைகள் மரங்களை யிழுத்துச்செல்வதையும், மலைச்சாதியாரும், ஷான்சாதியாரும் ஆடுவதையும் வேடிக்கை பார்த்துவிட்டு திங்கட்கிழமை மாண்டலேயிக்குப் பிரயாணமாய்ப் பர்மாரயில் வேகம்பெனியாரால் ஜோடித்திருந்த ஸ்பெஷல்டிரேயினில், டிராபிக் மானேஜர் கார்டாகவும் மற்றவர்கள் பயர்மன்களாகவு மிருக்க இளவரசரும், இளவரசியாரும் போய்ச்சேர்ந்தார்கள்.

## மாண்டலே.

### (16உ—18உ)

15 உ திங்கட்கிழமை மாலை இளவரசரும் இளவரசியாரும மாண்டலே போய்ச்சேர்ந்தார்கள். சேர்ந்தவுடனே வழக்கப்பிரகாரம் அவ்வூர் முனிசிபாலிட்டியாரால் உபசாரமாய் வரவேற்கப்பட்டார்கள். பிறகு முனிசிபாலிட்டியார் வந்தனோபசாரப்பத்திரிகை வாசிக்க அதற்கு இளவரசர் இனிமையாகவும் உபகாரமாகவும் பதில் சொன்னார். அப்பால் இளவரசரும் இளவரசியாரும் டப்பரின் கோட்டையைப் போய்ப் பார்வையிட்டார்கள். மறுநாளிரவு ராஜதம்பதிகளின் பொருட்டு மாண்டலேயில் ராஜவிருந்து நடந்தது. வெல்ஸ் இளவரசர் 19-ந்தேதி காலை மாண்டலே விட்டு இராவதிநதியில் படகிற் பிரயாணமாகி 20ந்தேதி ரங்கூன்வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்திலிருந்து இளவரசரும் இளவரசியாரும் 21-ந்தேதி 'ரிநௌன்' கப்பலேறி சென்னை நோக்கிப் பிரயாணமானார்கள்.

## சென்னப்பட்டணம்.

### (24உ—28உ)

வேல்ஸ் இளவரசரும், இளவரசியாரும் 21உ ரங்கூனைவிட்டுப் புறப்பட்டார்களென்றோம். 22, 23-ந் தேதிகளில் கடற்பிரயாணத்திற் காலத்தைப்போக்கிவிட்டு 24-ந்தேதி புதன்கிழமைபிற்பகல்



சென்னைவந்து சேர்ந்தார்கள். இளவரசர் சென்னை விஜயத்தின் பொருட்டு நடக்கும் சில விநோதங்களையும், ராஜாங்கஏற்பாடுகளையும் சென்னையின் தற்கால குதூகல நிலைமையையும் சற்று விவரித்து கூறுவது அவசியம். இளவரசர் விஜயதினத்தன்று 4½ மணி வரையில் கரைசேர மாட்டாரென்றும் கோலம்செல்லும் பீச்ரோட்டிலே மாலை 3 மணி முதலாகக் கோலம் முடிவு பெறுமட்டும் வண்டிகள் விடப்படமாட்டாவென்றும், ஹாரியர் பந்தலுக்குள் சேர டிக்கெட் பெற்றிருப்பவர்களின் வண்டிகள்மாத்திரம் 3½ மணி வரையில் விடப்படுமென்றும், மேற்படி கனவான்கள் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் பந்தலில் அவரவரிடம் வந்து சேர்ந்துவிட வேண்டுமென்றும், 3½மணிக்குமேல் கவர்னரவர்கள் வகையார் வண்டிகள் தவிர வேறெவ்விதமான வண்டியும் மேற்படி ரோட்டில் விடப்படமாட்டாதென்றும் ராஜாங்க ஏற்பாடுகள் வழங்கின. இவ்விதமான ஏற்பாடுகள் இம்மட்டு நிற்காமல் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்கிற பழமொழியை கைவிடாதவர்களான குதிரை வண்டிக்காரர்களையும் கோச்வண்டிக்காரர்களையும் பிடித்தன. விஜயதின முதல் பிப்பரவரி முதல்தேதி வரையில் சென்னையில் ஒற்றைக்குதிரை வண்டியொன்றுக்கு ரூபாய் 20 முதல் ரூபாய் 25 வரை வாடகையென்றும், ஒற்றைக்குதிரை பூட்டிய புரூஹாம் வண்டிக்கு ரூபாய் 20 வாடகையென்றும், ஒற்றைக்குதிரை பூட்டிய விக்டோரியாவண்டிக்கு ரூபாய் 25 வாடகையென்றும், இரட்டைக்குதிரை பூட்டிய வண்டிக்கு நாளொன்றுக்கு ரூபாய் 50 வாடகையென்றும், எல்லாக் குதிரை வண்டிக்காரர்களும் இதேமாதிரி வாடகை வாங்கவேண்டுமென்றும், இதற்குமேல் வாங்குவது குற்றமாகுமென்றும், ராஜாங்க ஏற்பாடுகள் வழங்கின. கோட்டைமைதான மப்போது, குதிரைப் படையார்கள், காலாட்படையார்கள், ராஜபுதனப் படையார்கள் இவர்களுடைய கூடாரக் காடாயிருந்தது. இவர்களுக்கு சகாயமாய் லெப்டிணெண்ட் ஜெனரல் ஸர் ஜார்ட்டன் பரிவாரத்துடன் அமைந்திருப்பது மின்னும் சிறந்ததாக விளங்கிற்று.

விஜய காலத்தில் சென்னையில் ஆசராயிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் ஏற்கெனவே வந்து சேர்ந்து விட்டார்கள். திருவாங்கூர் மகாராஜாமட்டும் தேக அசௌக்கியத்தின் நிமித்தம் சென்னைக்குவரக் கூடாமற் போய்

விட்டது. அவர் வரக் கூடாமற் போனதைக் குறித்துச் சென்னை கவர்ன்மெண்டார் தாங்கள் வருந்துவதாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்த மகாராஜாக்களையும் ஜமீன்தார்களையுமன்றி சாதாரண ஜனங்கள் வெளி ஜில்லாக்களிலிருந்து இளவரசரையும் இளவரசியையும் பார்க்க வேண்டுமென்ற [illegible] சென்னைக்கு வந்திருந்தார்கள்.

அந்த இரண்டு வாரத்திலேயே சென்னை நகரம் மிகவும் கோலாகலமான காட்சியையுடையதாகவேயிருந்தது. இளவரசரும் இளவரசியும் தங்குமிடங்களிலும் வழியிலுள்ள கட்டடங்கள் எல்லாம் அலங்கரிக்கப்பட்டிருந்தன. எங்கே பார்த்தாலும் தோரணங்களும் வாழை மரங்களும் [illegible] கட்டப்பட்டிருந்தன. [illegible] கட்டடம் பார்த்து விடாமல் பாவட்டாக்களும் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன. அவைகள் காற்றில் பறக்கும்போது இளவரசரையும் இளவரசியையும் [illegible] யாமல் இங்குக்கு வருகை செய்யுமென்று [illegible] அழைப்பன போல காணப்பட்டன. இந்நகர அலங்காரம் புதியதோர் கோலத்தையே பூண்டிருந்தது. அன்றியும், இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாகவும், சக்கரவர்த்தி திருமகனாரும் இளவரசியும் துறைமுகத்தை விட்டிறங்கி [illegible] மாளிகைக்குச் செல்லும்போது என்ன ராஜ [illegible] போவார்களோ [illegible] அவர்களுக்குப் போலவே, அந்தந்த [illegible] அந்த தேச மன்னர்களுடனும் [illegible] வெற்றுக் கோலங்கள் விட்டுப் பார்க்கப்பட்டன. அக்காலத்தில் [illegible] ராஜமாளிகைக்குப் படைப்பயிற்சி [illegible] பவனிபோக பழகித் தயாராயிருந்தார்கள்.

24-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 4½ மணிக்கு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் சென்னை ரேவுத்துறை பீச்ரோட்டில் இறங்கி சுதேச மன்னர்களும், அநேகம் ஜமீன்தார்களும், பல பிரபுக்களும் புடைசூழ கவர்னரோடு வைபவத்துடன் மவுண்ட் ரோட்டிலிருக்கும் கவர்னர் மாளிகைக்குப் போகும் மகத்தான காட்சியைப் [illegible] வந்து [illegible] கண்டு களிப்பதற்காகப் பீச்ரோட்டிலும் ஐகோர்ட்டிற்குப் பக்கத்திலும், பிராட்வேயி



லிருந்து மவுண்ட் ரோட்டிற்குப்போகும் வரையிலும் சரியான இடங்களில் ஜனங்களுக்குக் காலரிகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஜனங்களுக்குப் பிரத்தியேகமாய்க் காலரி ஏற்பாடு செய்திருந்தது. டிக்கட்டுகளின் விலை பீச்ரோட்டிலுள்ள காலரிக்கு ரூபாய் 1, மற்ற இடங்களிலுள்ள காலரிகளுக்கு அணா 8, டிக்கட்டு உடையவர்கள் தங்கள் காலரிக்கு 1½-மணிக்குள் சேரவேண்டியது. 25-ந் தேதியாகிய வியாழக்கிழமை இரவு நடக்கும் பாணவேடிக்கைக் காட்சியைக் கிட்ட இருந்து பார்ப்பதற்காக ஜிம்கானா மைதான பூமியில் தகுந்த இடத்தில் காலரி, பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. காலரி ரூபாய் 2, பெஞ்சு ரூபாய் 1, டிக்கட்டு உடையவர்கள் தங்கள் காலரிக்கும் பெஞ்சுக்கும் இரவு 9-மணிக்குள் சேரவேண்டியது.

சென்னை ராஜதானியார் வேல்ஸ் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் வாசிக்கும் வந்தனோபசாரப் பத்திரிகையை அடக்கஞ் செய்யும் (காஸ்கெட்) பெட்டியானது சென்னைச் [illegible] கம்பெனியாரால் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பெட்டியானது [illegible] பொருந்திய [illegible] வெள்ளியால் செய்யப்பட்டு மரகதம் கோமேதகம் முதலிய நவரத்தினங்கள் பதிக்கப்பட்டு [illegible] யுடையதாய்ப் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தது. இப்பெட்டியானது ஜனங்கள் பார்க்கும்படியாகச் சென்னை மவுண்ட்ரோட் [illegible] கம்பெனி முன் முகப்புக் கண்ணாடி [illegible] ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பிரயாணமாகி வரும் "திரெனான்" என்னும் கப்பல் புதன்கிழமை பகல் 2 மணிக்குத் துறைமுகத்தைச் சேர்ந்தது. திரெனான் கப்பல் துறைமுகத்தைச் சேர்ந்து நங்கூரம் பாய்ச்சப்பட்டதும் கப்பற்பிரயாணக் களைப்பிறகு சற்று இளைப்பாறி சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு நகர்ப்பிரவேசத்திற்கு இளவரசரும் இளவரசியாரும் 4 மணிக்குத் தயாராயிருந்தார்கள்.

புதன்கிழமை 12-மணி முதலாகவே சென்னை நகர்த் தெருக்களில் எல்லாம் ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். முக்கியமாக பீச்ரோட்டிலும் அதற்கடுத்த தெருக்களிலும் ஆடம்பரமாக உடையுடுத்த ஜனங்களும், அழகிய மாதர்களும் வந்து நெருங்கி நின்றார்கள். காலரிகளில் வெயிலையும் பாராட்டாமல் ஜனங்கள் வந்து உட்கார்ந்துவிட்டார்கள். பீச்ரோட்டில் முக்கியஸ்தர்க்கு [illegible] சாலைகளிலும்

மற்ற கட்டடங்களிலும், அருமையான அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தன. மாடிகளின் மீதெல்லாம் ஜனக் கூட்டங்கள் ஆவலோடு நின்றுகொண்டிருந்தன.

துறைமுகப்பந்தல்:—வெளியே ஆரவாரங்கள் இங்ஙனமிருக்கத் துறைமுகத்தில் ராஜதம்பதிகளின் வரவின் பொருட்டாகப் போடப்பட்டிருந்த விசாலமான வெண்பந்தலிலே 2-மணி முதலாகவே சீமான்களும் சீமாட்டிகளும் வந்துகொண்டிருந்தனர். கடலோரத்திலிருந்து ரம்மியமான காற்று வீசும்படியாக இனிது அமைக்கப்பட்ட அப்பெரும்பந்தல் மிகவும்செம்மையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. நடுவே உயர்ந்த பீடத்தின்மீது ராஜதம்பதிகளின்பொருட்டு இரண்டு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. சுற்றிலும் விசேஷ அழைப்புப் பெற்றிருந்தவர்களின் பொருட்டு சாய்மானபலகைகள் தயார்செய்து வைக்கப்பட்டிருந்தன.

3 மணிஅடிக்குமுன்பாகவே, "மகுடபதிகள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், கவர்மெண்ட் அதிகாரிகள் முதலிய பிரபுக்கள் தத்தம் அதிகாரத்திற்கும் தகுதிக்கும் தக்கபடிவந்து சேர்ந்துவிட்டார்கள். ஐரோப்பிய மாதர்கள் ராஜதரிசனத்தின் பொருட்டு விநோதம் விநோதமான உடைகளுடன் வந்தபோது வழக்கப்படியே பேச்சும் சிரிப்புமாக உட்கார்ந்துகொண்டார்கள். ஜமீன்தார்களிற் சிலர்மட்டிலும் அத்தியாடம்பரமும், மிகப்புராதனமும், விநோதமுமான கோலங்கொண்டு வந்ததைச் சில ஐரோப்பியப்பெண்கள் கண்டு நகைபுரிந்தனர். ஆனால் பொதுவாகச் சென்னை மாகாணத்து அரசர்களும் ஜமீந்தார்களும் பார்ப்பதற்கு மிகச் சிறப்புடனே விளங்கினார்கள். திருவாங்கூர் மகாராஜா தேக அசௌக்கியம்பற்றி வராமலிருந்தது பந்தலுக்கு ஓர் குறைவாகவே யிருந்தது. எனினும் வந்திருந்த கொச்சிநாட்டு அரசரும், புதுக்கோட்டைத் தமிழ் மன்னனும், வாண்டேர் மைனர் ராஜாவும் வந்து சிறப்பித்துவிட்டார்கள். ராமநாதபுரம் ராஜாவும் வேறுபல தென்னாட்டு ஜமீன்தார்களும்வந்திருந்தனர். இவர்களை யெல்லாம்பற்றி விரிவான விவரங்கள் எழுதவேண்டுமென்று நமக்கு விருப்பமிருந்தபோதிலும் இடம் போதாமைபற்றி விட்டுவிட்டோம்.

கவர்னர் வரவு:—மணி $3\frac{3}{4}$ ஆனவுடனே சென்னை கவர்னரும் லேடி ஆம்ட்ஹில்லும், காவல் துருப்புக்கள் புடைசூழப் பந்தலில்



வந்துசேர்ந்தனர். சபையோரெல்லாம் எழுந்துநின்று கௌரவம் புரிந்தனர். கவர்னர் கொச்சிராஜாவுடனும், ஜஸ்டிஸ் ஸர் S. சுப்பிரமணிய அய்யருடனும் மற்றவர்களுடனும் 5 நிமிஷம் வார்த்தையாடிவிட்டு ராஜதம்பதிகளுக்கு நல்வரவு கூறும்பொருட்டாக இளவரசரின் கப்பலுக்குத் தோணியேறிச் சென்றார். கவர்னருடன் இளவரசர் கப்பலுக்கு மதராஸ் தலைமை ஜட்ஜு, லார்ட் பிஷப், மிஸ்டர் ஸ்டோக்ஸ், மிஸ்டர் போர்ப்ஸ் என்ற 4பேரும் சென்றனர்.

ராஜதம்பதிகள் பந்தலுக்கு வருதல்:—காதுகள் செவிடுபடும்படியாகவும் கடலெங்கெங்கணும் எதிரொலி செய்யும்படியாகவும் முதலில் 31 குண்டுகள் போடப்பட்டன. பிறகு 31 குண்டுகள் போடப்பட்டன. உடனே ராஜதம்பதிகள் தமது கப்பலிலிருந்து கொணர்ந்த படகிலிருந்து இறங்கி சென்னை நகரக்கரையில் இறங்கிவிட்டார்களென்ற விஷயம் நகரத்தாரெல்லாருக்கும் தெரிந்தது. இளவரசர் வெள்ளை உடுப்பு தரித்துக்கொண்டிருந்தார். நாஷனல் ஆந்தம் கீதம் பாண்டுவாத்தியக்காரரால் வாசிக்கப்பட்டது. ராஜசின்னத்துவஜமும் (Royal Standard) விரிக்கப்பட்டது. கரையேறினவுடன் ராஜதம்பதிகளுக்கு லார்ட் ஆம்ட்ஹில், லேடி ஆம்ட்ஹில் தலைமை ஜட்ஜி, கவுன்ஸில் மெம்பர்கள் ஹைகோர்ட்டின் மற்ற ஜட்ஜுகள், லார்ட் பிஷப், ரெவினியு போர்டு மெம்பர்கள் மிஸ்டர் ஹேமிக், மிஸ்டர் பியர்ஸ் (கார்பொரேஷன் தலைவர்) முதலிய உத்தியோகஸ்தர்கள் நல்வரவு கூறினர். பிறதேசஸ்தானிகர்களும் சுதேச அரசர்களும் ஜமீன்தார்கள் முதலியவர்களும் அருகிலிருந்தனர்.

நல்வரவுப் பத்திரிகை.

பிறகு சென்னைவாசிகளெல்லாரும் ராஜதம்பதிகளை நல்வரவு கூறி பந்தலுக்குள் அழைத்துவரவே வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் தங்களுக்கென்று பிரத்தியேகமாய் சித்திர விநோதங்களுடன் ஜோடித்திருந்த சிங்காரவெண்பந்தலிலுள்ள பீடத்தின்மீது அமைத்திருந்த நாற்காலிகளில் வந்து வீற்றிருந்தனர். பீடத்திற்கெதிரே கார்பொரேஷன் மெம்பர்கள்வந்து நின்றுகொண்டார்கள். அப்போது மிஸ்டர் [illegible] D. பியர்ஸ் நல்வரவுப்பத்திரிகை படித்தார்

அந்தப் பத்திரிகையின் மொழிபெயர்ப்பாவது:—

"மாட்சிமைதங்கிய ராஜதம்பதிகளே! சென்னை நகரத்தின் பொருட்டாகவும் கார்பொரேஷனின் பொருட்டாகவும் கீழே கையெழுத்திட்ட முனிசிபல் கமிஷனர்களாகிய நாங்கள் உங்களிருவருக்கும் மனப்பூர்வமாகவும் மிக்க விசுவாசத்துடனும் நல்வரவு அளிக்கின்றோம். 4 வருஷங்களுக்கு முன்பாக நீங்களிருவரும் பிரிடிஷ் இராச்சியத்தின் பல முக்கியமான இடங்களைப் பார்வையிட்டுவந்த காலத்தில் இந்தியாவைமட்டிலும் நீக்கிவைத்தபடியால் எங்களுக்கு வருத்தமுண்டாயிற்று. ஆனால் பின்னிட்டு இந்தியாவிற்கும் அவ்விதப்பேறு கிடைக்கலாமென்ற நம்பிக்கையின்பேரில் நாங்கள் ஆறுதலடைந்திருந்தோம். இன்றைய தினம் எங்கள் நல்லதிர்ஷ்டத்தால் அந்த நம்பிக்கை நிறைவேறிவிட்டது. மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியார் இத்தேசத்தின்மீது கொண்டிருக்கும் நல்லெண்ணத்திற்கு நீங்கள் வந்திருப்பதும் ஓர் திருஷ்டாந்தமாதல் பற்றி ஆனந்தமடைகிறோம். பிரிடிஷ் சிங்காதனத்தில் எங்களுக்குள்ள பக்தியையும், ராஜகுடும்பத்தாரிடம் எங்களுக்குள்ள அன்பையும், எந்நாளும் மறத்தலறிய மகாராணியாரால் தொடங்கப்பெற்று எங்கள் சக்ரவர்த்தியாரால் செலுத்திவரப்படுகிற தருமராஜாங்கத்தில் எங்களுக்குள்ள நன்றியறிவையும் தாம் சக்ரவர்த்தியிடம் தெரிவிக்கும்படியாகவும், நாமும் ஏற்றுக்கொள்ளும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்........"

மிகவும் சேர்த்தியான வெள்ளிப்பெட்டியில் அந்தப் பத்திரிகையை வைத்து அப்பெட்டியை மிஸ்டர் W.S. வெங்கடராமஜுலு நாயுடு (கமிஷனர்) இளவரசரிடம் சேர்ப்பித்தார். அந்தப்பெட்டி 10-இன்ச் உயரமும் 6½-இன்ச் நீளமும்கொண்டது. இந்தப்பெட்டியில் தென்னைகள், நாகங்கள், சிங்கங்கள், சென்னை ஹைகோர்ட், செனேட் ஹவுஸ், கவர்ன்மெண்ட் ஹவுஸ் என்பவற்றின் வடிவங்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன.

பிறகு வேல்ஸ் இளவரசர் மறுமொழி அளித்தனர். அப்பால் இளவரசரும் இளவரசியாரும் வெளியில் வந்தவுடனே ஊர்கோலம் புறப்படத்தொடங்கியது.

---



## ஊர்கோல வரிசை.

### குதிரைப்படை.

இரண்டு ஆபீசர்கள்.
30-ம் லான்ஸர் பட்டாளம்.
ராயல் ஆர்டிலரி 6-ம் பட்டாளம்
ஸெகந்திராபாத் பட்டாள வரிசைகளும் தலைவனும்.
சென்னை வாலண்டியர் பட்டாளம்.
சென்னை கவர்னரின் காவல் துருப்பு.

நம்பர் 1. 4-குதிரைபூட்டிய ராஜாங்க ரதம்.

### வேல்ஸ் இளவரசர்.

### வலது காப்புப் படை.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்.
கவர்னர் பாடிகார்டு (Body Guard)
காப்புக் கமாண்டிங்காபீஸர்.

### இடது காப்புப்படை.

வாலண்டியர் கார்டுக் கமாண்டிங்காபீசர்.
கவர்னர் பாடிகார்டு அட்ஜுடண்ட்.
கவர்னர் பாடிகார்டுக் காப்டன்.

2-வது நாலுகுதிரை பூட்டியவண்டி.

H. E. கவர்னரவர்கள்.
H. E. லேடி ஆம்பதில்.
ஏடிகாங் இருவர்.
இந்திய ஏடிகாங் ஒருவர்.
மதராஸ் பிரிகேட்கமாண்டிங்காபீஸர்.

3-வது வண்டி.

லார்ட்ஸ்பரி கெண்டெல்.
மேஜர் ஜெனரல் பீட்டஸன்.
கவர்னர் பிரைவேட் செக்ரிட்டெரி.

4-வது வண்டி.

லேடி டக்டெல்.
லெப்டினண்டு கர்னல் ஸர் பிக் (Bigge)

கவர்னர் மிலிட்டெரி செக்ரிட்டெரி.
வேல்ஸ் இளவரசரின் ஏடிகாங்.

5-வது வண்டி.

ஷாப்ட்ஸ்பரி ஏர்ல்.
மேஜர் ஜெனரல் சர் பிரதாபசிங்.
வேல்ஸ் இளவரசரின் ஏடிகாங்.
கவர்னரின் ஏடிகாங்.

6-வது வண்டி.

லெப்டினண்டு கர்னல் சார்லஸ்.
ஸர் சார்லஸ் கஸ்ட்.
வேல்ஸ் இளவரசரின் ஏடிகாங் இருவர்.

7-வது வண்டி.

ஆனரெபில் கெப்பெல்; பின்டர் டக்டேல்.
கவர்னரின் ஸர்ஜன்; கவர்னரின் ஏடிகாங்.

8-வது வண்டி.

கவர்ன்மென்டு சீப் செக்ரிட்டெரி.
ஸ்பெஷல் பொலிட்டிகல் ஆபீஸர்.
கவர்னர் பாடி கார்ட் (Body Guard)

மற்ற வண்டிகளாவன:—

1. H. H. கொச்சி ராஜா.
2. H. H. புதுக்கோட்டை ராஜா.
3. பங்கனபல்லி நவாப்.
4. சண்டூர் ராஜா.
5. சீப் ஜஸ்டிஸ், லார்ட் பிஷப்.
6. கவுன்ஸில் மெம்பர்கள்.
7. ஆர்க்காட் இளவரசர்.
8, 9, 10. ஹைகோர்ட்டு ஜட்ஜிகள். [C. I. E
11. பொப்பிலி மஹாராஜா ஸ்ரீராவ் ஸர் ரங்காராவ் பஹதூர், K
12. ஜயபுரம் ராஜா மஹாராஜா ஸ்ரீ விக்ரமதேவகரு.
13. வெங்கடகிரி ராஜா, K. C. I. E.
14. விஜயநகரம் ராஜா.
15. காளஹஸ்தி ராஜா.



16. பிட்டாபுரம் ராஜா.
17. கார்வேட்நகரம் ராஜா.
18. ராமநாதபுரம் ராஜா.
19, 20. ரிவினியூ போர்டு மெம்பர்கள்.
21. ஸர்ஜன் ஜெனரல்.
22. முதல் 29 வரையில் கவுன்ஸிலின் அடிஷனல் மெம்பர்கள்.
30. முனிசிபல் பிரஸிடெண்டு.
31. மதராஸ் ஷெரிப்.
32. சிரக்கல்வலிய ராஜா.
33. கள்ளிக்கோட்டை ஸாமொரின் ராஜா.
34. கடத்தநாடு வலிய ராஜா.
35. வள்ளுவநாடு வலியராஜா.
36. கன்னிக்கோட்டை ஜமீன்தார் ராஜாஸ்ரீ முருகராஜா தேவகாரு.
37. கொல்லங்கோடு ராஜா வாசுதேவராஜா.
38. வுய்யூர் ஜமீன்தார் ராஜா ரங்கய்யா அப்பாராவ் பஹதூர்.
39. எட்டியாபுரம் ஜமீன்தார்.
40. சிவகங்கை ஜமீன்தார்.
41. பர்லாகிமிடி ஜமீன்தார்.
42. மண்டஸா ஜமீன்தார்.
43. தாராகோட்டா ஜமீன்தார்.
44. புங்கனூர் ஜமீன்தார்.
45. கங்குந்தி ஜமீன்தார்.
46. ஆரணி ஜாகிர்தார்.
47. உடையார்பாளையம் ஜமீன்தார்.
48. தேவகோட்டை ஜமீன்தார்.
49. தென்வள்ளூர் ஜமீன்தார்.
50. பத்ராசலம் ஜமீன்தார்.
51. குருப்பம் ஜமீன்தார்.
52. [illegible] ராஜா.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் பீச்ரோட்டில் ஊர்கோலம் வருங்காலத்தில் வேகமாய் வண்டியிற் செல்லாமற் றங்களைப் பார்த்து களிக்கவேணுமென்றே அவ்வுடன் இடக்கத் [illegible] யத்து நிற்கும் ஜனங்களெல்லாம் பணங்கொடுத்து டிக்கெட்டுகளை வாங்கி

முன்னாடியே வெயிலின் தீட்சண்யத்தை யெதிர்பார்க்காமல் காலைகளில் உட்கார்ந்து எதிர்வெயிலில் அவஸ்தைப்படும் ஜனங்களும் ஸ்திரீகளும் பரஸ்பரம் சேர்ந்திராவண்ணமடையும்படி மெள்ள கடையில் சென்றார்கள். பீச்ரோட்டு கடந்து எஸ்பிளனேட்டில் வரும்போது கொஞ்சம் வேகமாய்ச் சென்றார்கள். எஸ்பிளனேட்டில் லா காலேஜ்வரை சென்று போர்ட் [illegible] ரோட்டில் திரும்பி வாலாஜா வாராவதி கடந்து, [illegible] ரோட்டில் சென்று, கவர்ன்மெண்ட் ஹவுஸுக்குச் சென்றார்கள். ஊர்கோலத்தில் பின்தொடர்ந்துவரும் கனம்பொருந்திய கவர்னராகிய லார்ட் ஆம்டில்லும், லேடி ஆம்டில்லும் அங்கு பக்கத்தவர்களுக்கு [illegible] மற்றெல்லோரும் ராஜாக்களும், ஜமீன்தார்களும், [illegible]; அது தாண்டி மவுண்ட்ரோட்டில் வாலாஜா ரோட்வரையில் சென்றார்கள்.

இளவரசரும் இளவரசியாரும் ஊர்கோலம் சென்ற தெருக்களை அலங்கரிக்கப் பட்டிருப்பதைப்பற்றி நாம் அதிகமாய்ச் சொல்ல வேண்டியதில்லை. அவ்வழி நின்றிருந்த கட்டடங்கள் அத்தனையும் பழுதுபார்க்கப்பட்டு புதுபிக்கப் பட்டிருந்தன. எங்கேபார்த்தாலும் கொடிச்சீலைகள் கட்டிப் பறக்கவிடப் பட்டிருந்தன. தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. இளவரசருக்கும் இளவரசியாருக்கும் ஸ்வாகதங் கூறும் வளைவுகள் வைத்து அங்கங்கே கட்டப்பட்டிருந்தன. கண்ணெடுத்துபார்த்தஇடமெல்லாம் பார்ப்பதற்கு ரம்யமாகவே இருந்தது. வேல்ஸ்இளவரசரின் விஜய தினத்தன்று இவ்வூர் கட்டடங்கள் அத்தனையும் அலங்கரிக்கப் பட்டிருந்ததுபோல ஒருநாளும் அலங்கரிக்கப்பட்டிருந்ததில்லை யென்று பார்த்தோர் அனைவரும் சொன்னார்கள்.

அன்றிரவு கவர்ன்மெண்ட் ஹவுஸில் ராஜாங்க விருந்து நடந்தது. அதற்கு சென்னைக் கவர்ன்மெண்ட் உயர்பதவி உத்தியோகஸ்தர்களும் சென்னை ஹைகோர்ட் ஜட்ஜிகளும் பின்னும் அதற்கு வேண்டுமென்று வரவழைக்கப் பட்டிருந்த கனதனவான்களும் வந்திருந்தார்கள். அதற்கு வந்திருந்தவர்களின் தொகையை கணக்கிட்டுச் சொல்லுதல் அநாவசியமாகும். விருந்து சாப்பிட்டு முடிந்ததும் வெளிக்கச்சேரியும் நடந்தது. அப்போது பலர் வேல்ஸ் இளவரசருக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார்கள். அன்று



தங்கள் அந்தஸ்துக்கும் குலப்பிரபுக்கும் ஏற்ப உடைகள் உடுத்திருந்தது ஒன்றே எத்தனையோ சிறந்த தோற்றத்தை யுடையதாயிருந்தது. பாங்குவெட்டிங் ஹாலுக்கு இளவரசர் ஏற்கெனவே குறித்த நேரத்தில் வருவதற்கு முன்னதாகவே அவருடைய பரிவாரங்கள் வந்துவிட்டனர். 10 மணி அடித்ததோ இல்லையோ வேல்ஸ் இளவரசர் கவர்னரோடுகூட கவர்ன்மெண்ட்டவுஸிலிருந்து பாங்குவெட்டிங் ஹாலுக்கு வந்துசேர்ந்து அங்கு அவருக்காகப் போடப்பட்டிருந்த நாற்காலியின் முன்னால் நின்றுகொண்டார். அவருக்கு ஒரு பக்கத்தில் கவர்னர் நின்றுகொண்டார். மற்றொரு பக்கத்தில் அவருடைய பரிவாரக்காரர்கள் நின்றுகொண்டார்கள். உடனே இளவரசரைப் பலர் வந்து கண்டு தங்களைக் [illegible] மரியாதை செலுத்தினார்கள். அவர்கள் செலுத்தும் மரியாதையை அங்கீகரிக்கும் பாவனையாய் இளவரசரும் சிரக்கம்பனம் செய்தார். மரியாதை செலுத்தும் காட்சி சுமார் ஒன்றரை மணி நேரம்போல் நடந்தது. அந்த லெவீ (Levee)க் கச்சேரிக்கு சென்னைப் பிரமுகர்களுள் பலர் போயிருந்தார்கள்.

24-ந்தேதி புதன்கிழமையன்று சென்னையைத் தவிர மற்ற வெளியூர்களிலும் ராஜதம்பதிகளின் வரவு மிகவும் உற்சாகமாய்க் கொண்டாடப் பட்டிருக்கின்றது. வள்ளுவநாடு என்ற பட்டணம் மிகவும் அழகா யலங்கரிக்கப்பட்டிருந்தது. சுமார் 2000-ஏழைகளுக்கும் 300-மாணவர்களுக்கும் அன்னமளிக்கப்பட்டது. ஒட்டப்பிடாரம் என்ற இடத்தில் ஏழைகளுக்கும் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கும் விருந்திடப்பட்டுக் கோவில்களில் பூஜை நைவேத்தியங்கள் நடைபெற்றதுடன் 'காரோனேஷன் ரீடிங்ரூம்' என்ற கட்டடமும் திறக்கப்பட்டது. [illegible] சமஸ்தானங்களில் கோவில்களும் கட்டடங்களும் தீபாலங்காரம் செய்யப்பட்டு பூஜை நைவேத்தியங்கள் நடைபெற்றன. எல்லூரில் மிஸ்டர் கே. வேங்கடரெட்டிநாயுடு என்பவர் 5000-ஏழைகளுக்கு அன்னமளித்தார். மிஸ்டர் அச்சுதராமய்யா என்பவர் 150-ஏழைகளுக்கு வஸ்திரமளித்தார். அனேகப்பள்ளியில் சுமார் 1000-ஏழைகளுக்கும் எல்லாப் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கும் விருந்து நடந்தது. கூண்டாம்பூர் என்ற இடத்தில் ஏழைகளுக்கு அரிசியும் பணமும் கொடுக்கப்பட்டன. பள்ளிக்கூடத்து பிள்ளைகளுக்கு மிட்டாய் வழங்

கப்பட்டது. பிறகு அந்த கொச்சியிலுள்ளவர்கள் ராஜதம்பதிகளுக்குத் தங்கள் சந்தோஷத்தைக் காட்டித் தந்தியனுப்பி, நகரத்தை தீபாலங்காரஞ் செய்தார்கள். கள்ளிக்கோட்டை ஜனங்களும் பெருத்த கூட்டங்கூடி ராஜ தம்பதிகளுக்குத் தந்தி யனுப்பினார்கள்.

வியாழக்கிழமை காலை பதினொன்றரை மணிக்கு வேல்ஸ் இளவரசியார் திருவல்லிக்கேணியிலுள்ள விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரியைப் பார்வையிட்டார்கள். இந்த ஆஸ்பத்திரிக்குத் தம்முடைய உருவப்படமொன் றனுப்புவதாகவும், வேல்ஸ் இளவரசியார் வாக்குத்தத்தஞ் செய்தார்கள்.

ஒரு விசனகரமான சம்பவம்—ராஜ மேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசர் கோஷா ஆஸ்பிட்டலுக்கு விஜயம் செய்தபோது கோர்ட்டில் நெருங்கியிருந்த ஜனத்திரளில் ஒரு பிராமண சின்னஞ் சிறுவன் சவாரிப் போலீசுக்குதிரையொன்று முகத்தில் உதைத்து காயமாய் விடக்கண்டு பரிதபித்து மேற்படி ஆஸ்பிட்டல் சூபரின்டு மிஸ் லிங்கிலேர்ஸ்கைக் கொண்டு பார்வையிட்டுத் தக்க சிகிச்சை செய்து சொஸ்தப்படுத்தி யனுப்பும்படி வியவஸ்தை ஆர்டர் செய்து விட்டதோடு விடாமல் வெகு மனவருத்தங் கொண்டவராய்ப் பலகாயமோ வென்று வெகு ஆவலோடு சூபரின்டைக் கேட்டுவிட்டு கவர்ன்மெண்டவுஸ் சேர்ந்தபின், திட்டவிருந்து பார்வையிட்ட இளவரசியாரும் துக்கங்கொண்டு லேடி ஆம்திலைக் கொண்டு கவர்னரின் ஸர்ஜனை மேற்படி ஆஸ்பிட்டலுக் கனுப்பி அப்பையனைப் பார்வையிடும்படி செய்து விசாரித்ததில் மேற்படி காயம் அபாயகரமானதல்லவென்றேற்பட்டபிறகு ஒருவாறு மனத்தேறியதாகத் தெரிகிறது. இவ்வாறு கூர்ந்த நமது ராஜக்கிருபை போற்றப்பட வேண்டியதாகியதோடு, மேற்படி சிறுவன் விபத்தடைந்தவனேனும், ராஜகிருபைக் குட்பட்டவனாகியதும், ஒரு ராஜயோகமென்றே சொல்லக்கூடியதாகும். அப்பெருமாட்டிவந்து போனபின் அந்த ஆஸ்பத்திரியிலிருந்த ரோகாளிகள் வேல்ஸ் இளவரசி ராஜவம்சத்தைச் சேர்ந்தவராயிருப்பதற்கேற்ப பெற்றதாயைப்போல் பரிவாயிருந்தார்களென்று தங்களைப் பார்த்தவர்களிடம் சொல்லிக்கொண்டார்கள்.

வியாழக்கிழமையன்று ராஜதம்பதிகளுக்கு வேலை மத்தியானமிருந்து இரவுவரை சரியாயிருந்தது. காலையில் பத்தரைமணிக்குக்



கொச்சிராஜாவும் புதுக்கோட்டைராஜாவும் தங்கள் பரிவாரத்தினர்களைக் கவர்ன்மெண்ட்ஹவுஸுக்கு அனுப்பி, ராஜதம்பதிகளின் தேக சௌக்கியத்தைப்பற்றி விசாரித்தார்கள். பின்னர் மிஸ்டர் ஏ.ஜெ..ஜி காம்பெலும் ராஜதம்பதிகளின் பரிவாரத்தினருளொருவரும் "டல்வக்ஸ்" தோட்டத்துக்குச் சென்று கொச்சிராஜாவை அழைத்துவந்தார்கள். அப்படியேபுதுக்கோட்டை ராஜாவையும் அழைத்துவந்தார்கள். கொச்சிராசரெஸிடெண்டாகிய மிஸ்டர் ஜெ. ஆண்ட்ரூஸுடனும், இவருடனும் மற்றும் பரிவாரத்தினர்களோடு புதுக்கோட்டை ராஜா, மிஸ்டர் ஆலன்பட்டர் வொர்த்தோடும், இவரோடும் பிரயாணப்பட்டுவந்து வேல்ஸ் இளவரசருடைய பேட்டிபெற்றார்கள். அப்போது குண்டுகள் போடப்பட்டன.

அப்பால் பிற்பகல் நேரத்தில் 3-15 மணிக்கு சக்கரவர்த்திகுமாரர், பொப்பிலி மகாராஜா, ஜெயபுரம் மகாராஜா, வெங்கடகிரி மகாராஜா, விஜயநகரம் மகாராஜா, காளஹஸ்தி மகாராஜா, பிட்டாபுரம் மகாராஜா, கார்வேட்நகர் ராஜா, ராமநாதபுரம் ராஜா, சிரக்கல் வலியராஜா, கள்ளிக்கோட்டை ஏர்லாபாட் ராஜா, கடத்தநாடு வலியராஜா, வள்ளுவநாடு வலியராஜா, கள்ளிக்கோட்டா ராஜா, கொல்லங்கோடு ராஜா, ஸிப்பூர் ராஜா, எட்டயாபுரம் ஜமீன்தார், சிவகங்கை ஜமீன்தார், பார்லாகிமிடி ஜமீன்தார், மண்டேசா ஜமீன்தார், தரகோட்டா ஜமீன்தார், புங்கனூர் ஜமீன்தார், கங்குந்தி ஜமீன்தார், ஆரணிஜாகீர்தார், உடையார்பாளையம் ஜமீன்தார், தேவரகோட்டா ஜமீன்தார், செற்குளனூர் ஜமீன்தார், பத்மாஜலம் ஜமீன்தார், குருப்பம் ஜமீன்தார், ஆனேகுந்திராஜா, இவர்களுக்கெல்லாம் கவர்ன்மெண்ட் ஹவுஸில் பேட்டிகொடுத்தார். சரியாய் 3-மணி அடித்து 15-நிமிஷத்துக்கெல்லாம் இளவரசர் தமது பரிவாரத்துடனும் கவர்னரோடும் பாங்குவெட்டிங் ஹாலுக்கு வந்துசேர்ந்தார். அவர் வருவதற்கு முன்னேயே அங்கு வந்து தங்கள் தங்கள் இடத்தில் உட்கார்ந்திருந்த ராஜாக்களும், ஜமீன்தார்களும் தங்களிருப்பிடத்தைவிட்டு எழுந்துநின்று மரியாதைசெய்யும்பாவனையாய் தலைவணங்கினார்கள். இளவரசர் தமக்குப்போடப்பட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து இப்போது பேட்டிகண்டுபோக வந்திருப்பவர்களைக்கு அறிமுகஞ் செய்துவைக்கப் படலாமென்று சொல்ல, மேலே சொல்லியவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே இளவரசருக்கு

கவர்னரால் அறிமுகஞ்செய்துவைக்கப்பட்டார்கள். அவர்கள் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டு முடிந்ததும் சென்னை வியாபாரஸ்தர்களின் சங்கத்தார் சக்கரவர்த்தி குமாரருக்கு நல்வரவுப்பத்திரிகை வாசித்துக்கொடுத்து உபசரித்தார்கள். அதற்கு அவர் இனிமையாக பதில் சொன்னார்.

அவர் அந்த சமயத்தில் எல்லாம் தக்கபடி பதில் சொன்னாரென்றுமட்டும் சொல்லி நிறுத்திவிடுவோமானால் அவர் தக்கபடி சொல்லியதில் யாதாகுமென்று நேயர்கள் கருதக்கூடுமல்லவா?

அவர் லிலச்சுவான்காரர்கள் சங்கத்தில் சொன்னது இது:—

உங்களுடைய சபையின் மெம்பர்களை சந்திக்கும்படியாய் இவ்வாசியாருக்கும் எனக்கும் சமயம் வாய்த்ததில் எங்களிருவருக்கும் வெகு சந்தோஷம். உங்களுடைய நல்வரவுமொழிக்கு என் மனப்பூர்வமான வந்தனத்தை யளிக்கின்றேன். சக்கரவர்த்தியாரிடம் உங்களுக்குள்ள உண்மையான ராஜபக்தி யிருக்கிறதென்பதை நான் மிகுந்த மனத் திருப்தியோடே கண்டுகொண்டேன். மற்றெல்லிடத்திலும் இதேமாதிரி ராஜபக்தி யெண்ணங்களிருக்கக் கண்டேன். ஆனால் அது இவ்வூரில் எவ்வளவு சொல்வன்மையோடு வெளியிடப்பட்டதோ அவ்வளவு சொல்வன்மையோடு பிற இடங்களில் வெளியிடப்படவில்லை. மஹாராஜா சக்கரவர்த்திக்கு உங்களுடைய வாழ்த்துமொழிகளை வெகு சந்தோஷத்துடன் தெரியப்படுத்தி அவருக்கு நாங்கள் சென்னை போனசமயத்தில் அந்நகர் வெகு சௌஜன்யத்தை உடையதாயிருந்ததென்று தெரிவிக்கச் சித்தமாயிருக்கிறேன். நீங்கள் எண்ணுவதுபோலவே நாங்களிருவரும் இந்தியாவுக்கு வந்ததனால் பிரயோசனமிருக்குமென்று நான் நினைப்பதோடு அப்படி பிரயோசனமிருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். எங்களுக்கே இலகுவாகவும் நாங்கள் இந்த பாகத்திலிருந்தாலும் எங்கள் சொந்தவீட்டில் எப்படியிருப்போமோ அப்படியே இந்தியாவிலிருக்கிறதாக நினைக்கத் தலைப்பட்டுவிட்டோம். விசேஷப்படிப்புமூலமாயும் புஸ்தகங்கள் மூலமாயும் அறிந்துகொள்ள முடியாத விஷயங்களை அறிந்துகொண்டுவிட்டோம். நாங்கள் இந்தியாவுக்குச் சுற்றுப்பிரயாணமாய் வந்ததின்பொருட்டு மனமகிழ்ந்திருக்கிறோம். அப்பிரயாணத்தால் எங்களுக்கும் உங்களுக்கும் நன்மை விளையவேண்டுமென்று கடவுளைப்பிரார்த்திக்கிறோம்.



நீங்கள் உங்களுடைய நல்வரவுப்பத்திரிகையில் எங்களைச் சுட்டி சொல்லி யிருப்பவைகளுக்கெல்லாம் நான் உங்களை மனப்பூர்வமாய் வந்தனஞ் செய்கிறேன். நாங்களிருவரும் உங்களுடைய சபைமெம்பர்களுக்கு மிகுந்த க்ஷேமமுண்டாகவேண்டுமென்று விரும்புகிறோம்.

ராஜதம்பதிகள் கிண்டிக்குச் செல்லவில்லை. ஆனால் பாங்குவெட்டிங்க் ஹாலில் கூடிய சபை கலைந்தவுடன் அன்று மாலை ராஜதம்பதிகள் கவர்ன்மெண்ட் அவுஸிலிருந்து புறப்பட்டு மவுண்ட் ரோட் வழியாக அடையாறுக்குச்சென்று மெரீனாவழியாகத் திரும்பினார்கள். மாலை ஐந்தரைமணிக்கு ராஜபவனி புறப்பட்டது. சென்தோம் போய்ச்சேர்ந்தபோது இருட்டிவிட்டது. கடலோரம் முழுவதும் தீபமயமாய் பிரகாசித்தது. சுமார் 100 மீன் தோணிகளிலிருந்து வாணவேடிக்கைகள் நடந்தன. கடற்கரையிலுள்ள கட்டடங்கள் மிகவும் விநோதமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மவுண்ட் ரோட்டிலும் ஐலண்டிலும் செய்யப்பட்டிருந்த தீபாலங்காரம் மிகவும் சிறப்பாயிருந்தது.

அன்றிரவு கவர்ன்மெண்ட் அவுஸில் விருந்து நடந்தது. பின்னர் சென்னை ராஜதானி ஜனங்கள் ஐலண்டில் விருந்தும் கேளிக்கையும் நடத்தினார்கள். அப்போது அநேகமாயிரம் ஜனங்கள் மைதானத்தில் கூடியிருந்தார்கள். வாணவேடிக்கைகள் மிகவும் விமரிசையாக நடந்தன. கஞ்சம் ஜில்லாவிலுள்ள காண்ட்ஸ் என்னும் மலைச்சாதியார் ராஜதம்பதிகள் முன்னர் மிகவும் உற்சாகமாகஆடி வேல்ஸ் இளவரசரையும் இளவரசியாரையும் சந்தோஷிக்கச் செய்தார்கள். இந்தியன் சாண்டோவாகிய ராமமூர்த்தியும், மிஸ்டர் சாமிநாத சாஸ்திரியாகிய மந்திரவாதியும் காஞ்சீபுரம் ரங்கநாத தாதாச்சாரியாராகிய அவதானியும் தங்கள் தங்கள் வித்தைகளைக் காட்டினார்கள். ஐலண்ட் மைதானத்தில் சென்னை பொதுஜனங்கள் வேல்ஸ் இளவரசரையும் இளவரசியாரையு முத்தேசித்து நடத்திய பொழுதுபோக்குக்கச்சேரி வெகு விமரிசையாய் நடக்குஞ் சமயத்தில், பொதுஜன உபசாரணைக் கமிட்டியின் சேர்மென் ஆனரபில் ஸர் சுப்பிரமணிய அய்யரால் வேல்ஸ் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் ஒரு நல்வரவு வந்தனோபசாரப்பத்திரிகை வாசித்து கொடுக்கப்பட்டது. அப்பத்திரிகைக்கு சக்கரவர்த்தி குமாரர் பின்வருமாறு மிகவும் இனிமையாக பதில்சொன்னார்:

கனவான்களே! சென்னை மாகாணத்திற்கும் திருவாங்கூர் கொச்சி, புதுக்கோட்டை என்ற இராச்சியங்களுக்கும் பிரதிநிதிகளான உங்களை இங்கே பார்க்கலாமென்று உங்களுடைய கவர்னராகிய லார்ட் ஆம்ப்ட்ஹில் சொல்லியதைக்கேட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். இப்போது நீங்கள் வாசித்த ஆதரவுகொண்ட உபசாரனைப் பத்திரிகை சம்பந்தமாக வேல்ஸ் இளவரசியின் பொருட்டாகவும் என் பொருட்டாகவும், உங்களுக்கு மனப்பூர்வமான நன்றி அறிவிக்கின்றேன். பிரிடிஷ் குடிகளின் நன்மையைப்பற்றி எல்லா விஷயங்களிலும் நாங்களிருவரும் மிகுந்த சிரத்தையெடுத்து வருபவராக நீங்கள் கூறியது மெய்யே. பிரிடிஷ் ராச்சியத்தின் தூரமான இந்த ஸ்தலங்களையெல்லாம் பார்வையிடுவதன் பெருமையை நாங்கள் முற்றிலும் அறிந்தவர்களாக இருக்கின்றோம். தென் இந்தியா எங்களுக்கு நல்வரவு கூறியதன் பொருட்டு மிக நன்றி கொண்டிருக்கின்றோம். இம்மாகாணத்தில் புகழ்பெற்ற நகரங்களிலே மற்றவற்றைப் பார்வையிடாமலும், இந்திய சமஸ்தானங்களில் சென்று தாமதியாமலும் நாங்கள் போகநேர்ந்ததுபற்றி விசனமடைகிறோம். திருச்சிறுப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, என்ற இடங்களைப்பற்றியும், திருவாங்கூர், கொச்சி சமஸ்தானங்களின் அழகுகளைப்பற்றியும் நாங்கள் வாசித்திருக்கிறோம். ஆனால் நாங்கள் இந்தியாவில் அனேகநாள் இருக்க சாவகாசமில்லாதபடியால், உங்களையெல்லாம் இன்றுமாலை பார்த்துக்கொண்டதன்பொருட்டு நாங்கள் மகிழ்ச்சியுறுகின்றோம். இப்பெருந்தேசத்தின் விஷயத்திலும், இதன் ஜனங்களின் விஷயத்திலும் நாங்கள் மிகுந்த அன்பும் ஆதரவுங் கொண்டிருப்பதாக நீங்கள் தெரிவித்தது சிறிதேனும் உபசாரவசனமில்லை மெய்தானென்று நாங்கள் உறுதிகூறுவதை உங்கள் ஊர்களிலுள்ள மித்திரர்களிடம் அறிவிப்பீர்களாயின் மிகுந்த நன்றிக்கிடமாவீர்கள்.

இளவரசர் என்றிவ்விதமாக உபசாரனைக் கமிட்டியார் வாசித்துக் கொடுத்த நல்வரவுபத்திரிகைக்கு பதிலுத்தரஞ் சொல்லிமுடித்தார்.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் மறுநாள் காலமே II மணிக்கு லார்ட் ஆம்திலுடனும், லேடி ஆம்திலுடனும் சென்னை காட்சிப்பங்களாவையும் கானிமேரா புஸ்தகசாலையையும் போய்ப் பார்த்தார்கள். பங்களா சூபரின்டெண்டெண்ட் மிஸ்டர் தர்ஸ்டன் சக்கரவர்த்தி குமாரருக்கும் இளவரசியாருக்கும் ஒரிடம் பாக்கியில்



லாமல் காட்டி, மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கும் காட்சிப்பொருள்களைப்பற்றி அவர்களுக்கு என்னசொல்லவேண்டியது அவசியமென்று தோற்றிற்றோ அதனைச்சொன்னார். அவ்விடத்தில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் சுமார்முக்கால்மணிநேரம் போலவிருந்துவிட்டு கவர்ன்மெண்ட் ஹவுசுக்குத் திரும்பினார்கள்.

அப்புறம் பிற்பகல் I-30-மணிக்குச் சக்கரவர்த்தி குமாரர், ஸர் வால்டர் லாரென்ஸும் ஆனரெயில் மிஸ்டர் ஹாமிக்கும் பின்தொடரச்சென்று கொச்சிராஜாவை அவர் இறங்கியிருந்தவிடத்திலேயே போய்ப்பார்த்தார். ஒரு சிறு தர்பார் நடத்தப்பட்டது. அப்போது கொச்சி ரெஸிடெண்ட் மிஸ்டர் ஆண்டிரு, சக்கிரவர்த்தி குமாரருக்கு கொச்சி சமஸ்தான உத்தியோகஸ்தர்களை அறிமுகஞ்செய்துவைத்தார். பிறகு கொச்சிராஜா தமக்கும், ஸர் வால்டர் லாரன்ஸுக்கும் மாலையிட்டு வழியனுப்ப இளவரசர் கவர்ன்மெண்ட் ஹவுஸ் வந்து சேர்ந்தார்.

அப்பால் இளவரசர் பங்கனப்பள்ளி நவாப்புக்கும், ஷாண்ராஜாவுக்கும், ஆற்காட் பிரின்சுக்கும், பொப்பிலிமகாராஜாவுக்கும், ஜஸ்டிஸ் ஸர் சுப்பிரமணிய ஐயருக்கும், ஸர் வி. பாஷியம் ஐயங்காருக்கும், ராஜா சர் சவலை ராமசாமி முதலியாருக்கும் பேட்டிகொடுத்தார். அப்போது அவர்களிடம் இளவரசர் பல விஷயங்களையும் குறித்துப் பேசியிருக்கவேண்டுமானாலும் அவர்களோடு பேசியதானது பொது ஜனங்களுக்கு நன்மைசெய்யப்படவேண்டியது சம்பந்தமாய் ஒரு பேச்சும் நடந்திராது. பம்பாயில் ஸர்மேடாவுக்கு அந்தரங்க பேட்டி கொடுத்த இளவரசர் இவ்வூரில் ராயபகதூர் அனந்தாச் சார்லுவுக்கு அந்தரங்கப்பேட்டிகொடுத்து ஏன் அவர் வாய்பட இம்மாகாணப் பொது ஜனங்களின் உண்மை நிலையை அறிந்துகொள்ளக் கூடவில்லையோ நாம் அறியோம். இதுவும் நம்முடைய அதிருஷ்டந்தான்.

28-ந் தேதி காலமே II மணிக்கு வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் அன்றையதினம் ஓய்வு நாளானபடியால் தொழுகைக்காக கோட்டையிலுள்ள செயிண்டு மேரிச்சர்ச்சுக்கு சென்றார்கள். செல்லும்வழியில் கவர்ன்மெண்ட் ஹவுஸ் வாராவதி முதல் வாலாஜா வாராவதிவரையில் பெரும் ஜனத்திரள் கூடியிருந்து

கொக்கரித்தார்கள். வெனெரெபில் ஆர்ச்டீக்கன், இங்கிலீஷ் சர்ச்சை சேர்ந்த எல்லா பாஸ்டர்களோடும் ஹாஜராயிருந்த, சர்ச்சை சூழ்ந்திருந்த வாலண்டியர் கார்டுகளில் ஒருவராக வால்டேரி விருந்து வரவழைக்கப்பட்டிருந்த ஸ்டாவ்ஸார் ஜண்டாகிய குலாம்யர் என்பவரை நமது வேல்ஸ் இளவரசர் கண்டு பேசியபிறகு, சர்ச்சுள் நுழைந்த காரணமாவது இந்தியாவிலே பெருங் கலகமுண்டான 1857-ம் வருஷத்திலே யேற்பட்ட வாலண்டியர் சைனியத் துவக்கத்திலிருந்து வருபவராயிருப்பதுவே.

ராஜ தம்பதிகளிருவரும் லார்ட் ஆம்திலோடும், லேடி ஆம்திலோடும் சர்ச்சுக்குள் நுழைந்து ரெவரெண்டு மாக்டனால் உபசரிக்கப்பெற்று ஆங்குள்ள பழைய மதராஸ் ரிக்கார்டு ரூமைப் பார்வையிட்டுக்கொண்டு வெளிவந்து காரன்வாலிஸ் பிரதிமையை பார்வையிட்டபிறகு கவுன்ஸில் சேம்பரில் சற்றுநேரமிருந்து ஆனையில் மிஸ்டர் ஹாமிக் காண்பித்த ரிகார்டுரூமைப் பார்த்துவிட்டு கவர்ன்மெண்ட ஹவுஸுக்குத் திரும்பவுஞ் சென்றார்கள்.

ராஜ மேன்மைதங்கின இளவரசர் அவர்கள் பிற்பகலில் போலீஸ் கமிஷனர் மிஸ்டர் ஜோன்ஸை வரவழைத்து, ராஜவிஜயார்த்தமாய் அவருடைய போலீசேற்பாட்டுத் திறமை விசேஷத்துக்காக ஒரு மதிப்புள்ள பரிசும் கமிஷனர் சிவாரிசின்பேரில் சீவ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பவானந்தம்பிள்ளைக்கு ஒரு மெடலும், கவர்ன்மெண்டவுஸ் கார்டிலிருந்த இன்ஸ்பெக்டர் நார்த்துக்கு ஒரு கைகடியாரமும் அளித்தார்கள்.

சென்னையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை யன்று வேல்ஸ் இளவரசர் புறப்படு முன்னதாகச் சென்னைக் கவர்னருக்குப் பின்வருமாறு ஒரு கடிதமனுப்பினார்:—

" எனது அன்புள்ள லார்டு ஆம்ப்ட்ஹிலுக்கு,—

சென்னைக்கு வந்திருந்ததில் வேல்ஸ் இளவரசியும் நானும் மிகவும் திருப்தியடைந்தோம்.

நாங்கள் இங்கே வந்ததினத்தன்றும், அதற்கப்பால் நாங்கள் ஜனங்களினிடையே காணப்பட்ட சமயங்களிலும், ஜனங்கள் எங்களுக்கு ஆசையுடன் நல்வரவு கூறியதுபற்றி மிகவும் நன்றி பாராட்டுகிறேமென்பதை தாம் ஜனங்களிடம் அறிவிக்க வேண்டு



மென்று விரும்புகிறேன். எங்களை வரவேற்றல், உபசரித்தல், என்ற விஷயங்களின் பொருட்டுச் சென்னைவாசிகள் மிகவும் ஆலோசனையுடனும் சிரத்தையுடனும் ஏற்பாடுகள் செய்து வைத்திருந்தமை எங்களுக்கு மகிழ்ச்சி யுண்டாக்கின தென்பதையும் தாம் அவர்களுக்குக் கூறவேண்டும். தென்னிந்தியாவில் இந்திய ஜனத்தலைவர்களை நான் கண்டு பேசும்படியான சௌகரியம் எனக்கு ஏற்படுத்தியதன் பொருட்டுத் தமக்கு நன்றி செலுத்துகிறேன்.........நாங்கள் சென்னையையும் அதன் ஜனங்களையும்பற்றிச் சிறந்த ஞாபகம்வைத்திருப்போம்."

(Sd.) ஜார்ஜ், P.

அன்றிரவு 9¾ மணிக்கு, லார்டு, லேடி ஆம்திலுக்கு வந்தனோபசாரங் கூறி யனுப்பிவிட்டு, வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் கவர்ன்மெண்டு ஹவுஸ் விட்டு விளக்கு தொங்கலினாலும், இளவரசரின் விஜய விஷயமாய் தீபாலங்காரஞ் செய்து ஜகஜ்ஜோதியாய்ப்பிரகாசிக்கும் ஸென்டரல் ஸ்டேஷனை சேர்ந்து ஸ்பெஷல் ஸெலூனில் பெங்களூருக்குப் பிரயாணமானார்கள்.

## ஜியார்ஜ் டவுன்.

சென்னப்பட்டணத்துக்கு ஆங்கிலேயர் வைத்து வழக்கப்பட்டு வந்த "கறுத்தவர்பட்டினம்" எனப்பொருள்படும் "பிளாக் டவுன்" என்ற அவலக்ஷணப்பெயர் தொலைந்துபோய் இவ் ராஜ விஜயத்தின்போது "ஜியார்ஜ் டவுன்" என்ற பெயரே ஸ்திரப்படுத்தப்பட்டதால் இனி மேலாக சர்க்கார் ரிகார்டுகளிலும் இப்பெயரே வழங்கப்படுமாகிலும், சென்னப்பட்டணம் என்ற பெயர் நமக்குள் மாறுபடுவதில்லை.

இம்மாறுதலுக்கிணங்கி நமது ராஜ மேன்மைதங்கிய இளவரசர் தமது பெயரை எவ்வென்றும் மறவாதபடி இப்பட்டணத்துக்கிட இசைந்ததானது நம்மீது கருணை கூர்ந்திருப்பதின் அறிகுறியாமென்பதில் ஐயமில்லை. இந்தியாவிலே ஆங்கிலேய ஆட்சிக்கு அஸ்திவாரமாகிய இப்பட்டணத்துக்குத் தம் பெயரிட அவர் மகிழ்ச்சி மேலிட்டதாயறிய நாம் சந்தோஷமடையவேண்டுமாயினும் இயற்கைப் பெயரைத் தவிர்த்து சேர்க்கைப்பெயராய் நின்றதுபற்றியன்றி, தம்பெயரைப்பெறும் இப்பட்டணத்தின்றும் அவர் நுழை

ந்து பார்வையிட சாவகாசமில்லாமல் தாண்டிவிட்டதற்காக விசனிக்கிறோம்.

## ஆனரெபில் தேசிக்காசாரி ஸர் பட்டம் பெற்றார்.

இச்சென்னைச் சட்டசபையில் சென்னைக் கார்பரேஷன் மெம்பராயிருக்கும் ஆனரெபில் தேசிகாச்சாரியார் வேல்ஸ் இளவரசர் உபசரணைக் கமிட்டியில் ஒரு காரியதரிசியாயிருந்தது எல்லார்க்கும் நன்றாய்த் தெரியும். வேல்ஸ் இளவரசர் மிஸ்டர் தேசிகாச்சாரியார் உபசரணைக்கமிட்டிக் காரியதரிசிகளுள் ஒருவராயிருந்து தம்மை வரவேற்று உபசரிக்கும் விஷயத்தில் விசேஷ சிரமம் எடுத்து உழைத்திருக்கிறாரென்பதை மனதில் வைத்து அவருக்கு ஸர் பட்டங்கொடுத்திருக்கிறார். அவருக்குமட்டும் ஏகதேசத்தில் அந்த ஸர் பட்டம் கிடைத்துவிடவில்லை. அவருடன் கூட்டுக் காரியதரிசியாயிருந்த மிஸ்டர் H. C. கிங்குக்கும் ஸர் பட்டம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனரெபில் தேசிகாச்சாரியாருக்கு ஸர் பட்டங் கிடைத்தல் நமக்குச் சந்தோஷந்தான். ஆனால் அப்பட்டம் அவருக்கு இவ்வளவு சீக்கிரத்தில் கிடையாமல் இன்னும் சிறிது காலதாமதத்தின்மேல் கிடைத்திருக்குமானால் நலமாயிருக்கும். ஒரிந்தியர்க்கு ஸர் பட்டம் கிடைத்திருக்கவும் அவ்விந்தியர்க்குச் சிறிது காலதாமதத்தின் மேல் அப்பட்டம் கிடைத்திருக்கலாமென்று நாம் சொல்லுவதற்கு காரணமில்லாது போகவில்லை. பொதுவாய் ஸர் பட்டம் பெரிய உத்தியோகங்களில் அமர்ந்துவெகு வருஷ அனுபோக முடையராயிருப்போர்களுக்கும் பொதுநன்மைநாடி விசேஷமாய் உழைத்துப் பேர்வாங்கியவர்களுக்கும் கொடுக்கப்பட்டுவருகிறதே யொழிய அறிவில் மட்டும் முதிர்ந்தவர்களா யிருப்போர்களுக்கு அந்தப்பட்டம் கொடுக்கப்படுகிற வழக்கமில்லை. நாம் சொல்வதற்கு உதாரணங்கள் காட்டலாம். ஜஸ்டிஸ் ஸர் சுப்பிரமணிய ஐயர், ஸர் பிரோஸிஷா மேடா, ஸர் பாஷ்யமய்யங்கார் போன்ற பெரியோர்களுக்கு ஸர் பட்டம் வெகு வயதான பிறகு கிடைத்ததே யொழிய இப்போது மிஸ்டர் .V C. தேசிகாசாரிக்குக்கிடைத்திருப்பது போல அதி சீக்கிரத்தில் கிடைத்து விடவில்லை. வேல்ஸ் இளவரசர் புத்திக்கு ஆனரெபில் மிஸ்டர் தேசிகாச்சாரியார் நம்மிடம் ஒரு ஸர் பட்டம் பெற உரியரேயாவார் என்று தோற்றி யிருக்கக்கூடுமானாலும், ஸர்



பட்டத்தைவிட சிறிது தகுதியில் தாழ்ந்த பட்டமொன்றை மிஸ்டர் தேசிகாச்சாரியார் பெற்றிருப்பாராயின் அஃது எவ்வளவோ தகுதியுடையதா யிருந்திருக்கும். ஆயினும் மிஸ்டர் தேசிகாசாரியருக்குக் கௌரவப்பட்டங் கிடைப்பது தக்கதாயிருக்கும்போது தாழ்ந்த பட்டங் கிடைக்காமல் உயர்ந்தபட்டங்கிடைத்ததைப பற்றி நாம் சந்தோஷமே படவேண்டும்.

சென்ற ஒருமாதக்காலமாய் வேல்ஸ் இளவரசர் இளவரசியுடன் சென்னைக்கு வரப்போகிறாரென்ற பிரஸ்தாபமே யிருந்திருந்தது. 24உ யன்றே அவர் இச்சென்னை வந்து சேர்ந்தேவிட்டார். அன்று அவரை நல்வரவு கூறி யழைக்கவும், ஊர் கோலமாக அவர் சென்னைத் துறைமுகத்திலிருந்து கவர்ன்மெண்ட் ஹவுசுக்குச் சென்ற காட்சியைப் பார்க்கவும், அவர் செல்லும்வழி நீள வந்து கூடியிருந்த ஜனங்களது மனம் அவரும் இளவரசியாரும் அன்னார் கண்ணுக்குத் தென்படும்வரை யிருந்த நிலையும் அவர்களிருவரையும் பார்த்த சமயத்தில் அன்னார் காட்டிய குதூகலமும் இத்தன்மையவா யிருந்தன வென்று நம்மால் சொல்ல இசையாது. அன்று இச்சென்னை நகரவாசிகள் கண்டதோர் காட்சிக்குச் சமானமான காட்சி அந்த காட்சி தான் என்றே சொல்லவேண்டும். இங்கு வருவதற்குமுன் பம்பாய்க்கும் லாஹூருக்கும், கல்கட்டாவுக்கும், ரங்கூனுக்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் வேல்ஸ் இளவரசர் போய் வந்தாரானாலும் அவரையும் இளவரசியையும் வரவேற்ற சமயத்தில் அந்நகரங்கள் எந்த தோற்றத்தை யுடையனவா யிருந்தனவோ அத்தோற்றத்துக்கும் இச்சென்னைநகர் அன்றுத் தோற்றிய தோற்றத்துக்கும் எவ்வளவோ அம்சங்களில் வித்தியாசமிருக்கவேண்டும். அந்த வித்தியாசம் இளவரசருக்கும், இளவரசிக்கும் அவரது பரிவாரக் கூட்டத்தாருக்குமட்டுந்தான் நன்றாய்ப் புலப்பட்டிருக்குமே யொழிய மற்றவர்களுக்குப் புலப்பட்டிருக்கமாட்டாது.

ஆனால் நாம் இங்கு ஒன்றுமட்டும் திட்டமாய்ச் சொல்லலாம். இளவரசரிடமும் இளவரசியிடமும் இந்நகர்வாசிகள் விசேஷ ராஜபக்தியும் ராஜவிசுவாசமும் காட்டினார்கள். சக்கிரவர்த்தி குமாரர் மாலை 4-30 மணிக்குமேல்தான் இந்நகருக்குள் விஜயஞ்செய்வார் என்று திட்டமாய்த் தெரிந்திருந்ததானாலும் அன்று காலமே 11-மணி முதலே அந்நகரத்து ஜனங்கள் வெயிலின் கொடுமையைக்

சிறிதும் லட்சியஞ் செய்யாமல் அன்னோர் ராஜச்சின்னங்களுடன் ஊர்கோலமாய்ச் செல்வதைப்பார்த்து அவர்களை நல்வரவு கூறி யழைக்கவேண்டுமென்ற ஆசையொன்றுமே மேலிட்டு தாங்கள் வசதியாய்த் தங்கியிருந்து பார்ப்பதற்குச் சௌகரியமா யிருக்கக் கூடிய இடத்தில் அமரத் தலைப்பட்டார்கள். அப்படி திரண்டு கூடிய ஜனங்களின் காட்சியே பெரியதோர் காட்சியாயிருந்தது. அத்தனை ஜனங்களும் நடுப்பகல் 12 மணி நேரம்முதல் சாயங்காலம் 5-30 மணிவரையில் தங்கள் தங்கள் இருப்பிடங்களிலும் நின்ற நிலையிலும் சித்திரங்களை யொப்ப அசைவற்றிருந்தது, அவர்களுடைய ஆழ்ந்த ராஜ விசுவாசத்தைக் குறிக்கிறதே யொழிய வேறில்லை.

இதுநிற்க, வேல்ஸ் இளவரசர் அவ்வூரில் நான்கு நாளிருக்கப் போகிறாராகையால் அன்று தம்மை நல்வரவுகூறி அழைத்த ஜனங்களின் சுபாவம் இப்படிப்பட்டதென்று அறிந்து கொள்ளக் கூடும். அவர்களுடைய மன நிலை இத்தன்மையாயிருக்கிறதென்று அறிந்து கொள்ளக் கூடும். அவர்களுடைய ராஜபக்தியும் ராஜ விசுவாசமும் இத்தன்மையனவா யிருக்கின்றனவென்றும், அறிந்து கொள்ளக்கூடும். இந்தியர்கள், அன்னோர் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, என்ன ஜாதியாராய் என்ன ஜனத்தாராய் இருந்தாலும் சரி, வடக்கே இமயமலை முதல் தெற்கே கன்னியாகுமரி வரையிலுள்ள ஜனங்கள் அத்தனை பேரும் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தினிடம் காட்டும் ராஜ விசுவாசமும் ராஜபக்தியும் எங்கே சென்றாலும் எப்போதும் ஒரே சீராய்த்தானிருக்கிறதென்று அவர்களுக்கு விளங்கவேண்டும். இவ்விஷயம் இளவரசர் மனதில் நன்றாய்ப் பட்டிருக்குமென்றே நாம் நினைக்கின்றோம். அவர் சென்றவிடமெல்லாம் அவருக்கு ஜனங்கள் செய்யும் மரியாதையும் அவரிடம் காட்டும் ராஜவிசுவாசமும், அவ்வூரார் காட்டிய ராஜவிசுவாசத்தைக் காட்டிலும் இவ்வூர்க்காரர்கள் காட்டிய ராஜவிசுவாசம் மேலாகும். இந்த ஊரைவிட்டு அடுத்த ஊருக்குப்போனால் அவ்வூரார் காட்டும் விசுவாசம் இதைவிடமேலாயிருக்கும்போலிருக்கிறது, என்று அன்னோர் நினைக்கும்படி அதிகப்பட்டுக் கொண்டே வருகிறது. அந்த விஷயமும் அவர் மனதில் பட்டிருக்க வேண்டும்.

இளவரசர் அன்றே இச்சென்னையாரைப்பற்றி ஒருவித அபிப்பிராயம் கொண்டிருக்க வேண்டும். அந்த அபிப்பிராயம் இன்னும்



நான்கு தினங்கள் அவர் அந்த ஊரில் இருப்பதற்குள்ளாக பலப்படுமேதவிர வேறுவிதமாய் மாறுவதற்கில்லை. இச்சென்னை வாசிகள் மட்டும் சக்கிரவர்த்தி குமாரனிடம் விசேஷ ராஜ பக்தியும் ராஜவிசுவாசமும் காட்ட அவர் சென்னைப் பொதுஜனங்களிடம் அன்பும் அநுதாப உணர்ச்சியும் இல்லாதவராயிருந்தால் நன்றாயிருக்க மாட்டாதல்லவா? அன்று மாலை அவர் சென்னைக் கார்ப்பரேஷன் கமிஷனர்கள் வாசித்துக் கொடுத்த நல்வரவுப் பத்திரிகையைப் பெற்றுக் கொண்டு சொல்லிய பதிலால் அவர் சென்னைப் பொது ஜனங்களிடமும் அன்னோர் விசேஷ அன்பும் அநுதாபமும் உள்ளவர்களாகவே யிருக்கிறார்களென்பது சந்தேகமற விளங்குகின்றது.

## இளவரசரும், ஏழைஜனங்களும்.

இளவரசரும் அவர் மனைவியாரும் இந்தியாவுக்கு வந்து பல இடங்களைச் சுற்றிப்பார்ப்பதில் அவர்களுக்கு இந்திய ஜனங்களது உண்மையான நிலைமை தெரிய வகையில்லாதவிதமாய் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. இரண்டுதினங்களாகச் சென்னையில் தங்கி பல இடங்களுக்குப்போய் வருவதில் அவர் கண்ணுக்கு எங்குபார்த்தாலும் அலங்காரமும் உற்சாகமும் சந்தோஷமும் தோன்றுகின்றனவேயன்றி ஜனங்களிற் பெரும்பான்மையோரான ஏழைகளின் கஷ்டமான நிலைமை கண்ணுக்குப்பட மார்க்கமில்லை. சென்னையிலுங்கூட அவர் வண்டிபோகுமிடங்கள் முக்கியமான ராஜ பாட்டைகளாயிருக்கின்றனவேயன்றி, ஜனங்கள் வசிக்கும் இடங்களாக இருக்கவில்லை அப்படிப்பட்டவிடங்கள் சிலவற்றைப்பார்க்க நேரிட்டாலும் கூட, பாதையெல்லாம் தோரணங்களாலும் பந்தல்களாலும் வளைவுகளாலும் அழகாக அலங்கரிக்கப்படுகின்றன. வெளியேவந்து பார்க்கும் ஜனங்களும் நல்ல உடைகள் உடுத்தும் ஆபரணங்கள் தரித்தும், தங்கள் உண்மையான ஏழ்மையை மறைத்துநின்று, சந்தோஷமான முகத்தையே காட்டுகிறார்கள். ஸர்க்காரால் லட்சக் கணக்காகச் செலவுசெய்து கட்டப்பட்ட பெருங்கட்டடங்களும், கச்சேரிகளும் தனவான்களது மெத்தை வீடுகளும், மற்ற சாமானிய வீடுகளுங்கூட சுண்ணாம்பால் வெள்ளையடிக்கப்பட்ட நிலைமையில் இளவரசர் பார்வையில்படுகின்றனவேயன்றி, ஜனங்களது எப்போதுமுள்ள இயல்பான ஸ்திதியை அவரறிய வகையில்லாம லிருக்கின்

கின்றது. 4-குதிரைகள் பூட்டிய இளவரசரது சாரட்டு தெருக்களில் வேகமாய்ச் செல்லும்போது, கூடியிருக்கும் ஜனங்கள் சந்தோஷத்தால் ஆரவாரம் செய்கிறதைக் கவனிக்கையில் அவர் மனதில் ஜனங்கள் காட்டும் ராஜபக்தியும் பிரிடிஷ் ஆட்சியால் அவர்களுக்குண்டாயிருக்கும் சம்பத்தும் அழுந்துகின்றனவேயன்றி, அவர்களுக்கு எப்போதுமுள்ள ஏழ்மையாவது உற்சாகமின்மையாவது அவர் மனதில் தோன்றுதல் சாத்தியமல்ல. அவரது ஜனங்களுடைய உண்மையான நிலைமையைப்பற்றி உத்தியோகஸ்தருடனாவது ஜனத்தலைவருடனாவது சாவகாசமாக ஆலோசிப்பதற்குச் சமயமாவது உண்டா? ஊர்வலம், தர்பார், தோட்டக்கச்சேரி, பெரும் ஸ்தாபனங்களுக்கு அஸ்திவாரமிடல், ஆசார்களையும் மேற்குலத்தோரையும் தருவித்து மரியாதை பெறல், இப்படிப்பட்ட காரியங்கள் செய்ய அவருக்குப் பொழுது சரியாகிவிடுகிறதேயன்றி, தேசத்தினுடைய உள்வர்த்தமானங்களைப்பற்றித் தெரிந்தவர்களுடன் பேச சமயமே கிடைப்பதில்லை. தென்னிந்தியாவானது இந்தியாவின் மற்றப் பாகங்களனைத்தையும்விடச் செல்வம், கீர்த்தி, சரித்திரம் வியாபாரம் இவைகளில் தாழ்வுபெற்றது. இங்கே இளவரசர் சிலநாளே தங்குவார். சென்னையைத்தவிர வேறெந்த இடத்தையும் அவர் பார்க்கப்போவதில்லை. வடஇந்தியாவோ அப்படிப்பட்டதல்ல. இந்தியாவில் அவர் கால்வைத்த இடம் பம்பாய். பம்பாயானது வியாபாரவனப்பத்தால் பெருஞ்செல்வம் படைத்த இடம். அங்கிருந்து வடமேற்கிந்தியாவுக்குப் போனார். அங்கே சீக்கியர்முதலான இந்தியப் போர்வீரர்களைச் சேர்த்து அணிவகுத்துப் பார்த்து பிரிடிஷ் ஆட்சியின் பெருமையை நினைத்துக் களித்தார். அங்கிருந்து கீழ்த்திசை நோக்கிவந்து மொகலாய சக்கரவர்த்திகள் ஆண்டுபோன ஸ்தலங்களையும் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு மகோன்னதமான மாளிகைகளையும் பார்த்து இந்தியாவின் பூர்வீகப்பெருமையைக்கண்டு ஆனந்தப்பட்டார். பிறகு கல்கட்டாவுக்கு வந்தார். கல்கட்டாவில் சென்னையில் நடந்ததைவிடப் பத்துபங்கு அதிகமாக அவருக்கு உபசாரங்கள் செய்யப்பட்டன. இவைகளையெல்லாம் இளவரசர் பார்த்தபிறகு இந்தியாவின்பெருமை அவர் புத்திக்குப் புலப்படுமேயன்றி, இந்தியா பிரிடிஷ் ஆட்சியின் கீழ் அனுபவிக்கும் சிறுமை புத்திக்குப் புலப்படமாட்டாது. இளவரசரது பிரயாண விஷய



மாய் ஏற்பாடுசெய்தவர்கள் அவர் பெரும்பட்டணங்களை விட்டு ஒரிடத்திலாவது குக்கிராமங்களில் பயிர்செய்தும் சிறு தொழில்கள்செய்தும் அற்ப ஜீவனம் செய்யும் ஏழைகளை அவர்கள் எப்போதும் அனுபவிக்கும் நிலைமையில் பார்க்கும்படியாக ஏற்பாடு செய்யவில்லை. ஐரோப்பிய நாடுகளில் அரசர்கள் ஏழைகளைக்கண்டு அவர்களது பரிதாபமான நிலைமையை உணர்ந்து அவர்களுக்குத் தேறுதல் சொல்லுதலும் உதவி செய்தலும் அரிதல்ல. இந்தியாவில் நமது சக்கரவர்த்தி வசிப்பாராகில், அவர் ஒரு காலமில்லாவிட்டாலும் ஒருகாலத்திலாவது ஏழைகளைக் கண்டு கருணைகொள்ள சந்தர்ப்பங்கள் கிடைக்கக்கூடும். சக்கிரவர்த்தி 6,000மைல் தூரத்தில் அன்னியதேசத்தில் இருப்பவரானதால், அவரது சார்பு தேசமாகி அவரது கருணையையும் அன்பையும் எதிர்பார்த்து நல்ல காலத்தைக் கோரியிருக்கும் கோடிக்கணக்கான ஏழைகளைக் கண்ணுற்று அவர்களது பரிதாபமான நிலைமையையறிந்து தமக்கு அறிவிக்கும்படி இளவரசருக்கு ஆக்கினைசெய்து அதற்குத் தக்க ஏற்பாடும் செய்யத் தவறினது இந்தியரது துரதிஷ்டமென்றே கருதவேண்டும்.

## இளவரசரும், இந்தியரது குறைகளும்.

சென்னை வாசிகள் இளவரசருக்கு அனேக வேடிக்கைகள் செய்து உபசாரப் பத்திரிகை படித்தபோது, அதற்கு அவர் பதில் சொன்னதில், இந்தியரின் க்ஷேமத்தில் தாமும் இளவரசியும் மிகுந்த கவலை கொண்டிருப்பதாகவும், இந்தியர் காட்டிவரும் அன்பையும் ராஜபக்தியையும் உணர்ந்து இது அன்னியதேசமென்பதையே தாம் மறந்துபோனதாகவும், இந்தியாவுக்குத் தாம் வந்தது பெரும் நோக்கத்தைக்கொண்டேயன்றி, வேறல்லவென்றும், இந்தியாவை நேராகக் கண்டுபோவதால் தமக்கும் இந்தியருக்கும் நன்மைகள் உண்டாகவேண்டுமென்று தாம் கோருவதாகவும் சொன்னார். இந்தியாவிற் பற்பல இடங்களுக்குப் போய் ஜனங்கள் அளவற்ற உற்சாகத்தைக் காட்டிக் களிகொண்டாடுவதைக் கண்டு இளவரசர் மனம்பூரிப்புகொண்டிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. இந்தியாவைப்போன்ற தேசமும் இந்தியரைப்போன்ற ஜனங்களும் வேறெங்கும் தமது ஆட்சிக்குட்பட்டிருக்கவில்லையென்ற உணர்ச்சி பிரதி பிம்பமும் அவர் மனதில் தோன்றிப் பெருமையையுண்

டாக்கி வரவேண்டும். தமது அனுபோகத்தையெல்லாம் பிரதிதினமும் தந்தி மூலமாகவும் அல்லது பிரதிவாரமும் கடிதம் மூலமாகவும் தமது தந்தைக்கு அறிவித்து வருகிறாரென்றே நம்பலாம். இளவரசர் ஜன்மதேசம் திரும்பிப்போனதும், சக்கிரவர்த்தியவர்கள் இந்திய ஜனங்கள் தமது குமாரனை யவ்வளவு பெருமைப்படுத்தி அவரிடம் அன்பும் விசுவாசமும் பாராட்டினதற்காகத் தாம் சந்தோஷப்படுவதாக வெளியிடுவார் என்பதில் சந்தேகமில்லை. வெளியிடும்போது, இங்கிலண்டிலும் இந்தியாவிலுமுள்ள பத்திரிகைகள் வரிசையாகப் புகழ்வார்த்தைகளுடன் வியாசங்கள் வரையும். அத்துடன் இளவரசர் இந்தியாவுக்கு வந்து போனதும் இந்திய ஜனங்கள் குதூகலத்துடன் அவரைக் கொண்டாடினதும் மறந்து போகுமா? அல்லது, ஜனங்கள் மனதில் இவ்வளவு ஆனந்தத்தையும் குளிர்ச்சியையும் உண்டுபண்ணின இந்த சமயம் எப்போதும் ஜனங்கள் மனதில் நன்றி உணர்ச்சி உண்டாக்கும்படியான ஏதேனும் நிலையான நன்மைகள் உண்டாகுமா? தாம் இந்தியாவுக்கு வந்துபோனதால் தமக்கும் இந்தியர்க்கும் நன்மைகள் உண்டாக வேண்டுமென்று தாம் கோருவதாகச் சொன்னார். என்ன விதமான நன்மைகள் என்ன வழியில் உண்டாகுமோ சொல்லுதல் கஷ்டம். 1875-ம் வருஷத்தில் இப்போது மகாராஜாவாயிருக்கும் எட்வர்ட்சக்கிரவர்த்தி யிளவரசராயிருந்து இந்தியாவைப் பார்த்துப் போனார். அப்போது அவர் தமது பார்வையால் இந்தியாவுக்கு நன்மை யுண்டாக வேண்டுமென்று கோரினதாகச் சொன்னாரோ சொல்லவில்லையோ நாமறியோம்.

அவர் சொல்லியிருந்தால் அவர் சொன்னபடி ஏதாவது நன்மைகள் உண்டானதாகத் தெரியவில்லை. ஆனால் அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் வித்தியாசமுண்டு. முப்பது வருஷத்துக்குள்ளாக இங்கிலண்டும் இந்தியாவும் எவ்வளவோ மாறுதல்களை யேற்றுவிட்டன. இந்தியாவுக்கு இங்கிலண்டு செய்யக்கூடிய நன்மைகளை பெற அது இப்போது அதிக யோக்கியதை கொண்டிருக்கின்றது. 1875-ம்வருஷத்தில் இந்தியாவுக்கு இங்கிலண்டானது பிரதிநிதி துரைத்தனப்பேறு அளிக்கவேண்டுமென்று விரும்பியிருக்கும் பட்சத்தில் அது அப்போது வீணாயிருந்திருக்குமாட்டாது. இப்போதோ இந்தியாவுக்கு இந்தப் பெரும் பேறு பயப்பதால் இந்



தியா மிக்க நன்மை பெற்று இங்கிலண்டுக்கும் பெருமை உண்டாக்கத்தக்கது. அன்றி, சென்ற 39-வருஷத்துக்குள்ளாக இங்கிலண்டானது பெருத்த நிதிக்குவியல்கள் சேர்த்துவிட்டது. இந்தியாவிலிருந்துமட்டும் எவ்வளவு கோடி திரவியமோ அவ்விடம் போயிருக்கின்றது. இந்தியாவிலேயும் செலவுக்கு மிஞ்சியே வரவுகிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையால், இந்தியாவின் வரிப்பளுவைக் குறைத்தல் இப்போது சாத்தியம். விவசாயிகளிடமிருந்து வசூல் செய்யப்படும் சுமார் 30 கோடி ரூபாயில் 6 கோடி குறைத்து விடலாம். குறைத்த தொகையை இந்தியாவின் அதிக வரும்படியிலிருந்து சரிப்படுத்திக் கொள்ளக்கூடும். அல்லது இங்கிலண்டே வருஷத்துக்கு 3 கோடியோ 4-கோடியோ இன்னும் 10 வருஷத்துக்கு இனமாகக் கொடுக்கக்கூடும். இந்த விதங்களாயும் இளவரசரது பார்வையால் இந்தியாவுக்கு நன்மைகள் உண்டாகக்கூடும். முதலாவது ராஜாங்க சுதந்தரப்பேறுகள் கிடைக்கக் கூடும். இரண்டாவது வரிப்பளு குறையக்கூடும். வேறு என்னவிதமாய் இளவரசர் வருகையால் நமக்கு நன்மையுண்டாகக் கூடுமோ உத்தேசிக்கக் கூடவில்லை.

## மைசூர்.

### (29உ—பிப்ரவரி 4உ.)

29உ திங்கட்கிழமை பிற்பகலில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் மைசூர் போய்ச் சேர்ந்தார்கள். சென்றவருஷம் டிசம்பர் மாதம் 25-ஆந்தேதி யன்று குவாலியர் கோட்டை விட்டுப் புறப்பட்ட பின்னர், ராஜதம்பதிகள் சுதேச மன்னர்களால் உபசரிக்கப்படவில்லை. அன்றுதான் மைசூர் மகாராஜாவால் எதிர்கொண்டழைக்கப் பெற்று உபசரிக்கப்பட்டார்கள். மைசூரானது சுதேசராஜியங்களில் மிகவும் பெரியது. இந்தியாவிலுள்ள ஹிந்து மகம்மதிய சமஸ்தானங்களில் மைசூர் முக்கியமானது. நகரமானது பார்ப்பதற்கு அழகு வாய்ந்தது. அழகும் சுத்தமும் அகலமும் பொருந்திய தெருக்களும் சந்தோஷமும் க்ஷேமமுங்கொண்ட ஜனங்களும் மிக்க நகரத்திலுண்டு. கர்ஸன்பார்க் என்ற தோட்டம் மிகவும் அழகாயிருக்கும். பற்பலவிதமான கட்டடங்களின் அழகும் பார்ப்பதற்குச்சந்தோஷத்தைக் கொடுக்கும். ஜனங்கள் பெரும்பாலும் கல்வஸ்திரியி

லேயேயிருக்கின்றார்கள். ஏகாதிபத்தியச் சேவகக் குதிரைப் படையொன்று மிந்தச் சமஸ்தானத்திலிருக்கிறது. ஹைதர் ஆலியும், டிப்புசுல்தானும் அரசாண்ட இச்சமஸ்தான மிப்போது சுதேசமன்னர்களுடைய பரம்பரையிலிருக்கிற தென்றாலும் பிரிடிஷ் நாகரீகத்துக்கிசைந்த மாறுதல்களே அநேகமாய்ப்பொருந்தியிருக்கின்றன. பிரிடிஷாரின் மேற்பார்வையின் கீழ் இச்சமஸ்தானத்தில் அநேகம் சுதேச மந்திரிகள் ராஜ நிருவாகத்தைச் செவ்வையாய் நடத்தியிருக்கின்றார்கள். ஆனால் இந்த சமஸ்தானத்துக்கு பெங்களூரே ராஜதானி பட்டணம். மைசூருக்கும் பெங்களூருக்கும் 85 மைல்தூரம். ஹைதர் ஆலியும் திப்புசுல்தானும் அரசாண்டகாலத்தில் ஸ்ரீரங்கப்பட்டணம் ராஜதானி நகரமாயிருந்தது. மைசூரில் மகாராஜாவின் அரண்மனையுண்டு. இந்த சமஸ்தானத்தின் விஸ்தீரணமும் ஜனத்தொகையும் இதர சமஸ்தானங்களது விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையையும் விட அதிகமாயிருப்பதுந்தவிர பூர்வீகசரித்திரமும் விசேஷமாயிருப்பதால் இளவரசர் பார்க்கவேண்டிய இடங்களில் இது ஒன்றாகக் குறிக்கப்பட்டது. மேலும், 1875ம் வருஷத்தில் இப்போது சக்கரவர்த்தியாயிருக்கும் எட்வார்ட் இளவரசராயிருந்து இந்தியாவைப் பார்க்க வந்தபோது மைசூரைப்பார்க்காமலே போய்விட்டார் ஆனது பற்றி இந்த முறையாவது இதை இளவரசர் வந்து பார்க்கவேண்டுமென்று மைசூர் மகாராஜா கேட்டுக்கொள்ள இளவரசர் அந்த வேண்டுகோளுக்கிணங்கினார்.

ராஜதம்பதிகள் மைசூர் போய்ச்சேர்ந்தபோது ரயில்வேஸ்டேஷனில் மைசூர் மகாராஜா, ரெஸிடெண்ட், மற்ற முக்கிய உத்தியோகஸ்தர்கள் பிரசன்னமாயிருந்து அவர்களை யெதிர்கொண்டழைத்துபசரித்தார்கள். மற்ற சுதேசராஜ்யங்களுக்கு இளவரசர் போனபோது அங்கங்கே மகாராஜாக்களால் எப்படி உபசரிக்கப்பட்டனரோ அப்படியே மைசூரிலும் உபசரிக்கப்பட்டனர். ரயில்வேஸ்டேஷனிலிருந்து கோட்டைக்கு மிகவும் அகன்ற ரஸ்தா செல்லுகின்றது. கோட்டையில் சுவர்கள் உயர்ந்து புதிதாகக் கட்டப்படும் அரண்மனையைக் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வரண்மனையானது இந்துக்களின்புராதன நாகரீகச்சிற்ப வேலைகளுடன் கட்டப்பட்டுவருகின்றது. இந்தரஸ்தாவானது சாதாரணகாலங்களில்பார்ப்பதற்கு அழகுபொருந்தியதல்ல. ரஸ்தாவெரு



ங்கச் சென்றால் தங்கஸ்தூபிகள் வைக்கப்பட்டு இரண்டு கோயில்களைப்போய்ச்சேரலாம். இளவரசர் ஸ்டேஷனிலிருந்து வண்டிகளிலேறி தங்களுக்காக ஏற்பட்டிருக்கும் ரெஸிடென்ஸிக்குச் செல்லும்போது கூறிய துனியும் பலவகை நிறங்களும் பொருந்திய சாமரங்களைப்பிடித்து ஈட்டி வீரர்கள் விரைந்து முன் சென்றார்கள். சமஸ்தானப் படையார்கள் மஞ்சள் சிவப்பு நிறமுடைய உடைதரித்துச் சென்றார்கள். செல்லும் வழியில் வீட்டு உப்பரிகைகளிலும் கூரைகளிலும் மேல்மாடிகளிலும் வெகின்னமும், விஞ்ஞசின்னமும் தரித்துச் சிவப்பும் வெள்ளையுமாகிய உடைகள் அணிந்து பல்லாயிரம் ஜனங்கள் மிகவும் சந்தோஷ ஆரவாரத்துடன் தெருக்களில் திரண்டிருந்தார்கள். குதிரைப் படையாரும், ஈட்டிப்படையாரும் முன்னணிகளிற் செல்லத் தெருக்களில் ஜனங்கள ஆரவாரித்தார்கள். வழிநெடுக 6000 சிறுவர்களும் சிறுமிகளும் கன்னடபாஷையிலும் சமஸ்கிருதத்திலும் சங்கீதங்கள் பாடினார்கள். இளவரசர் செல்லுமிடங்களிலெல்லாம் திரளான ஜனக்கூட்டங்களும் தோரணங்கள், கொடிகள், வளைவுகள், சித்திரங்கள்முதலிய அலங்காரங்களும் இரவில் ஊர் முழுமையும் தீபங்களால் அலங்கரிக்கப்படுவதும், பாணவேடிக்கைகளும், முக்கியமான ஸ்தலங்களுக்கு இளவரசரைக் கூட்டிக்கொண்டு காட்டுவதும் இவைகளே முக்கியமான உபசாரங்கள். இளவரசர் ரெஸிடென்ஸிபோய்ச் சேர்ந்தவுடன் சற்று இளைப்பாறி மாலையில் மகாராஜாவும் இளவரசரும்பரஸ்பரம் பேட்டி மாற்றிக்கொண்டார்கள். வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் மறுநாள் செவ்வாய்க்கிழமைகாலமே சாமராஜேந்திரத்தொழிற்பாடசாலையைத் திறந்தனர்கள்.

மைசூர்ச் சமஸ்தானம் கல்வி விஷயத்தில் மிகவும் விருத்திபெற்றிருக்கிறது. ஸர் சேஷாத்திரி ஐயர் திவானாயிருந்தபோது அவர் இந்தச் சமஸ்தானத்துக்காக மிகவும்பாடுபட்டார். சுமார்பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னர் மைசூரில் கைத்தொழிற் பாடசாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்தில் படமெழுதுதல், உருவம்வரைதல், தச்சவேலைசெய்தல், கருமான்வேலை செய்தல், குயத்தொழில்முதலிய வித்தைகள் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது 200-மாணவர்கள் இதிற் கல்வி பெற்று வருகின்றார்கள். இக்கலாசாலைக்கு வரும்படி இருபதினா

யிரம் ரூபாயே யென்றாலும் செலவு மட்டும் முப்பத்து மூவாயிரமாகின்றது. இதுவரை இக்கலாசாலைக்குத் தகுதியான கட்டடமில்லாமல் வாடகைக்குக் கட்டடம் வாங்கியே கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது. இதற்காக இப்போது ஒரு கட்டடம் கட்டப்படும். இக்கட்டடம், சாமராஜேந்திர டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட், என்றழைக்கப் படும். மைசூர்க் கவர்ன்மெண்ட் அச்சாபீஸும் இக்கட்டடத்திலேயே வைக்கப் பட்டு மாணவர்களுக்கு அச்சுவேலையும் கற்றுக் கொடுக்கப்படும். இக்கட்டடம் கட்டி முடிக்க லக்ஷம் ரூபாய்க்கு மேலாகு மெனமதிப்பிடப் பட்டிருக்கிறது.

என்று சவிஸ்தாரமாய் கைத்தொழிற் பாடசாலையைப்பற்றிச் சொல்லவேண்டிய விஷயங்களை யட்[illegible] திவான் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வேல்ஸ் இளவரசருக்கு ஓர் வந்தனோபசாரப் பத்திரிகை வாசித்து அதன்மூலமாய் தெரிவித்தார். பத்திரிகை வாசித்தவுடனே வேல்ஸ் இளவரசரை மைசூர் மகாராஜா அஸ்திவாரக்கல் நாட்டும்படியாகக் கேட்டுக்கொண்டார். சக்கிரவர்த்தி குமாரர் அஸ்திவாரக்கல் நாட்டுவதற்குமுன்னால் மைசூர் சமஸ்தானத்துச் சிற்பிகளையும் வேலைக்காரர்களையும் இந்தியதேசத்துத் தொழிலாளிகளின் திறமையையும்பற்றி வியந்து பேசினார். இந்தியாவில் தொழில்செய்து சீவிக்கும் வகுப்பார் வறுமையின்றிச் செழித்து வாழ்வது மகா அவசியமென்றார். இந்தியத் தொழிலாளிகள் ஆதிகாலந்தொட்டு வேலைத்திறமையில் பெயர்வாங்கினவர்களென்றார். அவர்களுடைய நிலைமையில் தம் பிதாவுக்குக் கவலை யிருப்பதுபோலத் தமக்குமிருக்கிறதென்றார். இவ்விதமாய் உபசாரமாகவும் இனிமையாகவும் பத்திரிகைக்குமறுமொழிகூறி கைத்தொழிற்பாடசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். அன்றைய தினம் டென்மார்க் தேசத்தரசர் மரித்ததின் காரணமாக வேல்ஸ் இளவரசர் துக்கக்குறியான உடைதரித்திருந்தார்,

அன்றுபிற்பகலில் 3-மணிக்கு ராஜதம்பதிகள் ஸ்ரீரங்கப்பட்டணம் கோட்டைக்குச் சென்றார்கள். மைசூரிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணஞ் செல்லும் வழிநெடுக ஆலமரங்களும் புளிய மரங்களும் மாமரங்களு மிருக்கின்றன. கோட்டையானது இப்போது மிகவும் பாழான ஸ்திதியிலிருக்கிறது. உடைந்த வளைவுகளும், சேதப்பட்ட சுவர்களும், உயிர்ப் பிராணியற்ற அறைகளும் எங்கும் பார்த்தாலும்



காணப்படுகின்றனவே யொழிய ஹைதர் காலத்திலும் திப்புசுல்தான் காலத்திலுமிருந்த சீரையும் சிறப்பையும் காணோம். காவேரிநதியினிருபிரிவின் மத்தியிலே ஸ்ரீரங்கப்பட்டணங் கோட்டையிருக்கின்றது. ஹைதர் அலியின் கல்லறையும் திப்புசுல்தானின் கல்லறையும் இக்கோட்டைக்கு வெளியேயுள்ள தோட்டமொன்றிலிருக்கின்றன. இக்கல்லறைகளை ராஜதம்பதிகள் பார்த்தார்கள். ராஜதம்பதிகளும், மைசூர் மகாராஜாவும், மைசூர் ரெஸிடெண்டும், மிஸ்டர் பிரேஸரும் மோட்டார் வண்டியேறிச் ஸ்ரீரங்கப்பட்டணம் நோக்கிச் சென்றபோது, முன்னாகச் சென்ற பரிவாரத்தைச்சேர்ந்த சிப்பாயொருவன் தன்னுடையமோடார்சைக்கிலிலிருந்து தவறிவிழுந்து சற்றுப் பலமான காயம் அடைந்தான். வேல்ஸ் இளவரசர் உடனே தம் வண்டியை விட்டுக்கீழிறங்கிக் காயம் பட்ட சிப்பாயினருகே வந்து, அவனுக்கு வேண்டிய சிகிச்சைகளெல்லாம் செய்யும்படி கட்டளையிட்ட பின்னரே அகன்று சென்றார்கள். ராஜகுமாரரின் பெருந்தன்மையையும் ஜீவகாருண்ணியத்தையும் நாம் என்னென்றுரைப்போம்.

அன்று மாலை ராஜதம்பதிகள் ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து திரும்பி மைசூர்வந்து சேர்ந்தார்கள். அன்றிரவு மைசூரில் இளவரசருக்கு மகாராஜா ஒரு ராஜாங்கவிருந்து செய்தார். இப்படிவிருந்து செய்விக்கும்போது விருந்து செய்பவர்களும் விருந்தாளிகளும் ஒருவருக்கொருவர் புகழ்ச்சிவார்த்தைகள் பேசுகிறது சாதாரண வழக்கமல்லவா? அதுபோலவே மைசூர் மகாராஜா ராஜாங்கவிருந்து நடக்கும்போது உபசாரமாக சிலவார்த்தைகள்சொல்ல, மைசூர் மகாராஜாவைப் புகழ்ந்து இளவரசரும் சிலவார்த்தைகள் சொன்னார்.

அப்படிச் சொன்னதில் சுதேசமன்னர்கள் விஷயமாய் இளவரசரது பிதாவுக்கு என்னமாதிரியான உணர்ச்சியென்பதைத் தாம் சொல்லவேண்டியதில்லையென்றும், எட்வர்ட் சக்கரவர்த்தியின் செங்கோல் விளங்குவதில் தேச மன்னர்கள் மனமொப்பி உதவி செய்து வருவதைத் தாம் அறிந்திருப்பதாகவும், அப்படி உதவி செய்யும் மன்னர்களில் மைசூர் மகாராஜா ஒருவரென்றும், சொன்னார். இதுவரையில் மைசூரானது வெகு திறமையுடன் ஆளப்பட்டு வந்திருக்கிறதென்றும், ஸர். K. சேஷாத்திரிஅய்யர் மேற்போட்டுக்

கொண்டு நடத்தின தைரியச் செயல்களைப்பற்றியும் அவர் பாசன வேலைகள் சம்பந்தமாயும் மற்றப் பொதுக்கட்டட வேலைகள் சம்பந்தமாயும் செய்த அரும் பெருங்காரியங்களைப் பற்றியும் தாம் கேள்விப்பட்டதாகச் சொன்னார். மகாராஜா மகா புத்திமானானதால், ஸர் சேஷாத்திரியய்யரைப்போன்ற மந்திரிகளை நியமித்துக்கொண்டு இனியும் ஜனோபகாரமான பெருங்காரியங்களைச் செய்யக்கூடுமென்றுஞ் சொன்னார். இதுவன்றி, இந்திய ஏகாதிபத்தியத்தின் காப்புக்காக அமைக்கப்பட்டு வரும் இம்பீரியல் ஸர்விஸ்கோர் என்ற சைனியத்தில் மைசூர் மகாராஜாவின் குதிரைப்படையைப்பற்றி இளவரசர் புகழ்ந்து பேசினார்.

இவ்வாறு மைசூர் சமஸ்தானத்தை இளவரசர் மெச்சிப்பேசினது இந்தியர் எல்லோர்க்கும் சந்தோஷத்தைக்கொடுக்கக்கூடியது. மைசூர்மாத்திரமல்ல,மற்றெல்லா தேசராச்சியங்களும் திறமையாக ஆளப்பட்டுவந்து ஜனங்கள் நல்ல நிலைமையிலே இருக்கிறதாக இளவரசர் சொன்னது இந்தியர்களுடைய ஆட்சித்திறமையை ஒப்புக்கொண்டதாக ஆகிறதல்லவா? மைசூர் சமஸ்தானத்தை ஸர். K. சேஷாத்திரியய்யர் உலகம் வியக்கும்படி ஆளக்கூடுமானால், பிரிடிஷ் இந்தியாவிலும் இந்தியர் உலகத்தார் மகிழும்படியான பெருஞ்செய்கைகள் செய்ய வல்லோராகமாட்டார்களா? மைசூர் சமஸ்தானத்தை சுமார் 18 வருஷமாண்ட சேஷாத்திரியய்யர் சென்னை ராஜதானிக்குக் கவர்னராக நியமிக்கப்பட்டிருந்தால் அதையும் அப்படியே நிருவகித்திருக்கமாட்டாரா? ஸர். சேஷாத்திரி ஐயர் ஒருவர் தானா? அவரைப்போல நூறுசேஷாத்திரி ஐயர் அங்கங்கே தலையெடுக்கக்கூடுமே! ஆனால், மைசூரில் ஸர். சேஷாத்திரி ஐயருக்கு உண்டாயிருந்த சுதந்திரமும் தருணங்களும பிரிடிஷ் இந்தியாவில் இந்திய உத்தியோகஸ்தர்களுக் குண்டாவதில்லை. சகல சுதந்தரங்களையும் தருணங்களையும் வெள்ளையரே வைத்துக்கொண்டு இந்தியருக்கு இடமுண்டாகுமானால் பொறாமையை யடைகிறார்கள். இந்தியர்களை யெப்போதும் கீழ்ப்படியிலேயே இருத்தி அவர்களது சக்தியும் விருப்பமும் வெளிக்கிளம்பி பிரகாசிக்காமலிருக்கும்படி அமுக்கிவிடுகிறார்கள். இதுதான் சுதேச ராச்சியங்களுக்கும் பிரிடிஷ் இந்தியாவுக்கும் வித்தியாசம். ஸர் சேஷாத்திரியய்யரைப்



போன்ற கீர்த்திமான்கள் பிரிடிஷ் இந்தியாவில் தோன்றுவது அரிது.

அன்றைய தினம் ராஜ விருந்து முடிந்தவுடன் மிகவும் விமரிசையாக வாணவேடிக்கைகள் நடைபெற்றன. தீபங்கள் எங்குபார்த்தாலும் பிரகாசித்தன. சுமார் ஒருமணிநேரம் ஆலயம் முழுவதும் வெளிச்சமயமாயிருந்தது. அடுத்தநாள் புதன்கிழமையன்று காலை ராஜதம்பதிகள் மைசூர் ஏகாதிபத்தியச் சேவகாட்டிப்படையாரைப் பார்வையிட்டார்கள். இப்படையாரே ஐதர் அலிகாலத்திலும் திப்புசுல்தான் காலத்திலும் திக்குவிஜயஞ்செய்த பேர்பெற்ற குதிரைப் படையார்களின் சந்ததியார்கள். உயர்ந்த உருவமும் ஒல்லிய உடலும் அபரிமிதமான சுருசுருப்பும் குதிரையேறுவதில் வல்லமையு முடையவர்கள். இப்படைகளை நோக்கி ராஜதம்பதிகள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பின்னர் ராஜதம்பதிகள் வேட்டையாடப் புறப்பட்டார்கள்.

புதன்கிழமையும் மறுதினமும் வனவேட்டையாடி வந்தார்கள். திரும்பவும், யானைவேட்டை யாடும்பொருட்டு ராஜதம்பதிகள் வெள்ளிக்கிழமையன்று மைசூரிலுள்ள வேட்டைக்களத்துக்குச் சென்றார்கள். இவ்வேட்டைக் களத்துக்கு 'கெட்டா' என்று பேர். மைசூர்க்காடுகளிலுள்ள அநேகம் யானைகள் திரட்டப்பட்டிருந்தன. மிஸ்டர் ஸ்பார்க்ஸ், மிஸ்டர் ஒக்லி, மிஸ்டர் மட்டன் ஆகிய மூவரும் வேட்டைக்களத்தில் பிரசன்னமாயிருந்தார்கள். சுமார் 8-மணிநேரம் ராஜதம்பதிகள் வேட்டைக்களத்தில் தங்கியிருந்தார்கள். சனிக்கிழமையன்று புலிவேட்டை நடந்தது.

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் புலி, யானை வேட்டையாடி ஞாயிற்றுக்கிழமை காலமே திரும்பவும் மைசூர் வந்து சேர்ந்தார்கள். அன்று இளவரசியார் மைசூர் மகாராணி கோஷாவில் வாசிக்கும் மாதர்களை வரவேற்று அவர்களிடம் சற்று நேரம் சந்தோஷமாக வார்த்தையாடி. பிறகு ராஜதம்பதிகள் அரண்மனையிலுள்ள ஆபரணாதிகளைப் பார்வையிட்டார்கள். அன்று தினந்தான் இளவரசர் மைசூரில் தாமதிக்கும் கடைசிதினமாதலால் அன்றிரவும் வாணவேடிக்கைகள் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டன. நகர் முழுதும் தீபாலங்காரங்களினால் ஜோதிமயமாய்ப் பிரகாசித்தன.

அன்றிரவே இளவரசரும் இளவரசியாரும் அவ்வூரை விட்டுப் பெங்களூருக்குப் பிரயாணமானார்கள். போகிறதற்கு முன்னால் மிஸ்டர் மத்தண்ணாவுக்கு யானை வேட்டையில் அதிக சிரமும் பிரீதியுங் காட்டியதற்கு இளவரசர் கைக்கடியார மொன்றை யினாமாகக் கொடுத்தார்.

## பெங்களூர்.

(5உ—7உ)

ராஜதம்பதிகளிருவரும் 5-ந்தேதி திங்கட்கிழமைகாலை 8 மணிக்கு பெங்களூர் போய்ச் சேர்ந்தார்கள். ரயில்வேஸ்டேஷன் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஏராளமான படையார்களும் ராணுவ உத்தியோகஸ்தர்களும் ரயில்வேஸ்டேஷனில் பிரசன்னமாயிருந்தார்கள். இவர்களோடு முனிசிபல் கமிஷனர்களும் ராஜதம்பதிகளை சகல மரியாதையோடும் வெகு பிரியமாய் வரவேற்று உபசரிப்பதற்காக வமைக்கப்பட்டிருக்கும் சிங்காரப் பந்தலில் அழைத்துக்கொண்டுபோனார்கள்.

அப்பந்தலின்கண் பெங்களூர் முனிசிபாலிட்டியார் ஒரு வந்தனோபசாரப்பத்திரிகை வாசித்துக் கொடுத்தார், அதனைப்பெற்றுக் கொண்டு இளவரசர் வெகு இனிமையாகவும் உபசாரமாகவும் பதில் சொன்னார். அப்போது அவர் பெங்களூரின் சீதோஷ்ண நிலையானது தேக ஆரோக்கியத்திற்குற்றதாயிருப்பதைச் சுட்டிப் பேசியதுமன்றி பிளேக் நோயால் அந்நகருக்கு இதுவரை சேர்ந்துள்ள கெடுதிகள் இனிமேலாவது நேராதிருக்கவேண்டுமென்றும், அவ்வூர் தேக சௌக்கியத்துக்குற்ற நிலைமைக்கு மறுபடியும் வரவேண்டுமென்றும் தாம் விரும்புவதாய்ச் சொன்னார். அதற்குமேல் ராஜதம்பதிகள் ரெஸிடென்ஸிக்குப் போய்ச்சேரப் புறப்பட்டார்கள். ராஜபவனிகோலம் புறப்பட்டபோது ராஜதம்பதிகளும் ஸர் வால்டர் லாரன்ஸும் முதல்வண்டியிலிருந்தார்கள். மற்றப்பரிவாரத்தினர்கள் அடுத்த நான்குவண்டிகளிலிருந்தார்கள். பின்னும் முன்னும் படையார்கள் அணிவகுத்துச் சென்றார்கள். மகாராஜாவினுடைய படையார்களும் திரண்டு பிரசன்னமா யிருந்தார்கள். செல்லும் வழி தோரணங்களாலும், பந்தல்களாலும், வளைவுகளாலும் விமானங்களாலும் வெகுவிமரிசையாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இதுவன்றி



போகும் ரஸ்தாக்களின் இருபக்கங்களிலும் ஜனங்கள் திரள்திரளாய் வந்து கூடியிருந்தார்கள். ராஜதம்பதிகள் ரெஸிடென்ஸியைப் போய்ச்சேர்ந்தபோது பீரங்கிகள் போடப்பட்டன.

அன்று பிற்பகல் இளவரசர் பெங்களூர்வாசிகள் விக்டோரியா ஞாபகச் சின்னத்தைத் திறந்துவைத்தார். மைசூர்ப் பெங்களூரார் காலஞ்சென்றுவிட்ட விக்டோரியா மகாராணியின் ஞாபகச் சின்னமாக அப்பெருமாட்டியின் உருவச்சிலையொன்றை 25000 ரூபாய்ச் செலவில் மிஸ்டர் பிராக் என்ற மேல்நாட்டுச் சிற்பி யொருவரைக்கொண்டு செய்துவைத்துக்கொண்டிருந்தார்களென்பது தெரிந்தவிஷயமாயிற்றே. அந்த உருவச்சிலையை கப்பான்தோட்டத்தின் கிழக்கு மூலையில் நான்கு ரஸ்தாக்கள் சந்திக்குமிடத்தில் நட்டுத்திரை போட்டு வைத்திருந்தார்கள். அப்படி திரைசீலைபோட்டு மூடிவைக்கப்பட்டிருந்த உருவச்சிலையை வேல்ஸ் இளவரசர் அன்று சாயங்காலம் திறந்துவைத்தார். அதனைச்சக்கரவர்த்தி குமாரர் திறந்து வைப்பதற்கு முன்னே மைசூர் திவான் ஸர் கிருஷ்ணமூர்த்தி இளவரசருக்கு ஒரு உபசாரப்பத்திரிகை வாசித்துக்கொடுத்தார். அதனில் அவர் லார்ட் கர்ஸனால் ஏற்பாடுசெய்யப்பட்ட கல்கட்டா விக்டோரியா ஞாபகசின்னநிதிக்கு மைசூர்மகாராஜா பொருளுதவிசெய்யும் சுதந்தரம்பெற்றாராயினும் மைசூர் சமஸ்தான வாசிகளும் பெங்களூர் ஸ்டேஷன் வாசிகளும் ஒன்றுசேர்ந்து காலஞ்சென்றுவிட்ட மகாராணியின் ஞாபகச்சின்னம் ஒன்று மைசூர் சமஸ்தானத்தில் இருக்கவேண்டுமென்று விரும்பி அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைச் செய்தார்களென்பதாகவும் மைசூரிலே அந்த ஞாபகச்சின்ன ஸ்தாபனத்துக்கு ஒரு ஸ்தலத்தைத் தெரிந்தெடாமல் பெங்களூரைத் தெரிந்தெடுத்ததற்கு மைசூர் சமஸ்தான வாசிகளும் பெங்களூர் ஸிவில் ராணுவ ஸ்டேஷன் வாசிகளும் ஒன்று சேர்ந்து யாதொரு அபிப்பிராய பேதமுமின்றி அப்பெருங்காரியத்தை நிறைவேற்றியதற்கு அந்த ஸ்தாபனம் பெங்களூரில் அமைக்கப்படுவதே சாட்சியாயிருக்க வேண்டுமென்றநோக்கம் மகாராஜாவுக்குண்டென்பதாகவும் தெரிவித்து, தங்களுடையபாட்டியாரது ஞாபகச்சின்னத்தை திறந்து வைக்கத் தாங்கள் இசைந்ததும் அந்தச்சமயத்தில் இளவரசியார் அந்த வைபவக் காட்சியைவந்துபார்த்து மனங்களிக்க ஒப்புக்கொண்டதும் நாங்கள் செய்த அதிருஷ்டந்தான் என்று

சொன்னதுமன்றி இந்த ஞாபகச் சின்னத்தைத் திறந்துவைத்து மைசூர் சமஸ்தான வாசிகளின் மனதைத் தாங்கள் களிக்கச் செய்ய வேண்டுமென்றார். மைசூர் சமஸ்தானஜனங்கள் கடவுளைவேண்டிக் கொள்வதெல்லாம் விக்டோரியா மகாராணியின் வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தை அந்தப் பெருமாட்டி எவ்வளவு சீரும் சிறப்புமாய்க் கட்டி ஆண்டார்களோ அப்படியே கட்டி ஆளவேண்டுமென்பதே யென்றுஞ் சொன்னார்.

ஸர். கிருஷ்ணமூர்த்தியின் உபசாரப் பத்திரிகைக்கு இளவரசர் சுருக்கமாய்ப் பதில் சொன்னார். அந்த பதிலில் அவர் ஒன்றும் விசேஷமாய்ச் சொல்லிவிடவில்லை. நீங்கள் என்னை விக்டோரியாவின் உருவச்சிலையைத் திறக்கும்படி கேட்டுக்கொண்டதை நான் வெகு சந்தோஷத்தோடு ஒப்புக்கொள்ளுகிறேன். நீங்கள் ஏற்கனவே சொல்லவேண்டியதெல்லாம் சொல்லிவிட்டபடியால் அம்மகாராணியின் பேரனாயிருக்கும் நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை. நானும் இளவரசியும் இப்போது இவ்விந்தியநாட்டைச் சேர்ந்த பல இடங்களுக்குப் போய்விட்டு வந்துவிட்டோம். நாங்கள் சென்றவிடமெல்லாம் விக்டோரியாவின் ஞாபகத்துக்கு மரியாதை செய்யாதாரில்லை. இந்த ஞாபகச்சின்னத்தைப்பற்றி ஒருவிதத்தில் எனக்கு மிகுந்த சந்தோஷம். மைசூர் மகாராஜாவும் மைசூர் வாசிகளும் பெங்களூர்வாசிகளோடு சேர்ந்து இதனை அமைக்க ஏற்பாடு செய்ததில் எனக்கு அளவற்ற சந்தோஷம். விக்டோரியா மகாராணியாரின் நோக்கம் இம்மாதிரி ஒற்றுமையுணர்ச்சி ஒருவருக்கு ஒருவர் இருக்கவேண்டுமென்பதே. இம்மாதிரியாக பதில் சொல்லிவிட்டு இளவரசர் அந்த உருவச்சிலையைத் திறந்துவைத்தார்.

பின்னர் அன்றிரவு ராஜதம்பதிகளின் வரவைக் கருதி ஓர் ராஜவிருந்து நடந்தது. மறுநாள் காலை காராபினியர்ஸ் என்ற படையாருக்கு வேல்ஸ் இளவரசர் புதியகொடியொன் றளித்தார். மூன்றாநாள் புதன்கிழமை தினமும் பெங்களூரிலிருந்துவிட்டு அன்றையதினமே ஐதராபாக்கத்துக்குப் பிரயாணமானார்கள்.



# ஐதராபாக்கம்.

(8உ—15உ)

இளவரசர் பிப்ரவரிமாதம் 7-ந்தேதி பெங்களூரைவிட்டுப்புறப்பட்டார். பெங்களூரைவிட்டுப் புறப்பட்டவர் நிஜாமிராச்சியத்துக்குச் சென்றார். அவர் அந்த ராச்சியத்தின் தலைநகராகிய ஹைதராபாத்துக்கு 8-ந்தேதி காலையே போய்ச் சேர்ந்தார். அவரையும் இளவரசியையும் ஐதராபாத் நிஜாமும் அந்தசமஸ்தானத்துப் பிரபுக்கள் சிலரும் ரெயில்வேஸ்டேஷன் வந்து எதிர்கொண்டு வரவேற்றார்கள். அப்புறம் சிறிது நேரத்துக்கெல்லாம் நிஜாமும்ரெஸிடெண்டும் கூடவே வர இளவரசர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து 5½-மையில் தூரத்திலுள்ள பால்க்காமா அரண்மனை போய்ச் சேர்ந்தார்.

அவரை பால்க்காமா அரண்மனையில் கொண்டுபோய் இறக்கிவிட்டுத் திரும்பிய நிஜாம் அவர்கள் அப்புறம் ஒரு மணி கழித்து ராஜகோலத்துடன் சென்று இளவரசரை பேட்டி கண்டுவிட்டு வந்தார். இளவரசரும் நிஜாமை அவருடைய அரண்மனைக்கே போய் மறுபேட்டிகண்டுவிட்டு வந்தார். இளவரசர் நிஜாமை பதில் பேட்டி காணவந்த சமயத்தில் மற்ற இடங்களில் நடந்ததுபோலவே அந்த சமஸ்தானத்து பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் இளவரசருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட, அவர்கள் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி இளவரசரை காணிக்கை வைத்துக் கண்டார்கள். அவைகளை அங்கீகரிக்கும் பாவனையாய் இளவரசர் கையால் தொட்டார். பிறகு நிஜாம் இளவரசருக்கும் ரெஸிடெண்டுக்கும் ஸர்வால்டர் லாரென்ஸுக்கும் அத்தரும், தாம்பூலமும் கொடுத்தார். இளவரசரது பரிவாரங்களுக்கு சமஸ்தானத்து உத்தியோகஸ்தர்கள் மரியாதை செய்தார்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமைதினம் சிகந்தராபாத்தில் காப்புச் சேனைகள் படைப்பயிற்சிகள் செய்வதைப் பார்க்கப் போயிருந்தார். படைப்பயிற்சிகள் நன்றாய் நடந்து முடிந்ததும், மற்றப் படைகளையெல்லாம் கலைத்துவிட்டு இரண்டாவது ராசபுத்திரர்கள் என்ற கூட்டத்தாரை மட்டும் தாமதிக்கும்படிச்சொல்லி அவர்களுக்குப் புதிதாய்க் கொடிகள் கொடுத்தார். அந்தப் படைதான் இளவரசரிடம் கொடிபெற்ற முதல் இந்தியப்படையென்று மதிக்கப்படு

கிறது. அச்சமயம் அப் படையாளரைப் பார்த்துச் சிறிது புகழ்ச்சியாக சில வார்த்தைகள் சொன்னார். அன்று மாலை வேல்ஸ் இளவரசியார் விக்டோரியா ஞாபகச்சின்ன கோஷா ஆசுபத்திரிக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார்கள். இளவரசி இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்ய ஆரம்பித்த நாள் முதலாய் ஐதராபாத் விக்டோரியா ஞாபகச்சின்ன கோஷா ஆசுபத்திரிக்கு அஸ்திவாரம்போட இசைந்தது தான் இவ்விந்திய நாட்டில் அப்பெருமாட்டி வகித்த முதற்பொறுப்பாகும். ஆனால் அந்த ஞாபகச்சின்ன ஆஸ்பத்திரிக்கு அஸ்திவாரக்கல் நாட்டுஞ் சமயம் அந்தசமஸ்தானத்து நிஜாம் ஆஜராயிருக்கமுடியாமற் போய்விட்டது.

அவர் தமது மூத்த மகள் அன்று காலமே இறந்து போனமை பற்றி அந்த விசேஷத்துக்குப் போகக்கூட வில்லை. ஆயினும் அவர் அந்த சமயம் எடுத்துச் சொல்லவிருந்த விஷயங்கள் ரெஸிடெண்ட் மிஸ்டர் பெயிலியால் சொல்லப்பட்டன. அதற்குத்தக்கபடி வேல்ஸ் இளவரசியார் பதில் சொல்லிவிட்டு அந்தவைத்தியசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டி முடித்தார்கள். அன்று இரவு ரெஸிடெண்ட் பங்களாவில் வேல்ஸ் இளவரசிக்கும் இளவரசருக்கும் நடந்த விருந்துக்கும், ரிஸெப்ஷனுக்கும் மேலே சொன்ன துக்ககரமான சமாசாரம் காரணமாக நிஜாமும் போகவில்லை. அவரது உயர்பதவி உத்தியோகஸ்தர்களும் போகவில்லை. மூன்றுநாள் காலமேவேல்ஸ் இளவரசரும் ஸர் வால்டர் லாரென்ஸூம் நிஜாமைப்போய் துக்கம்விசாரித்துவிட்டு வந்தார்கள். அன்றிரவு இளவரசர் இளவரசியை மட்டும் ஐதராபாத்தில் விட்டுவிட்டு அவ்வூரிலிருந்து 100 மைலுக்கப்பாலுள்ள நார்ஸிம்பெட்டுக்கு வேட்டையாட புறப்பட்டுப்போனார் அன்று இரவு நடக்கவிருந்த ராஜாங்கவிருந்து நடக்கவில்லை.

12-ந்தேதி திங்கட்கிழமையன்று இளவரசியார் ஐதராபாத் பொருட் காட்சிக் கூடத்தைப்போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். அக்காட்சிக் கூடத்துக்கு வந்திருந்த அரிய வேலைப் பாடமைந்த சாமான்களைப் பார்த்து சந்தோஷப்பட்டதாகவுந் தெரிகிறது. மறுநாள் செவ்வாய்க்கிழமை இளவரசியார் இப்போது பாழாய்க் கிடக்கும் கோலகொண்டா நகரத்தைப் போய்ப் பார்த்தார்கள். புதன் கிழமை யன்று அம்பெருமாட்டி அந்த சமஸ்தான கோஷா ஸ்திரீ



களின் உல்லாசக் கூட்டத்துக்குச் சென்று அவர்களோடு பல விஷயங்களையும் பற்றிப் பேசி பொழுதுபோக்கினார்கள்.

சென்ற 5 தினங்களாய் நார்ஸிம் பேட்டுக்கு வேட்டையாடச் சென்றிருந்த வேல்ஸ் இளவரசர் கடைசி நாளாகிய 15உ வியாழக்கிழமையன்று திரும்பி ஐதராபாத்துக்கு வந்து அன்றிரவு இளவரசியாருடன் நோக்கிப் பிரயாணமானார்கள்.

## காசி.

## (18உ—20உ)

இளவரசரும் இளவரசியாரும் 16,17 ஆகிய இரண்டு நாட்களையும் ரயில் பிரயாணத்தில் போக்கிவிட்டு 18-ந்தேதி காசி போய்ச் சேர்ந்தார்கள்.

வேல்ஸ் இளவரசர் விஜயம்:—மாக்ஷிமை தங்கிய வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் அந்நகரத்துக்கு விஜயமாகிறதை உத்தேசித்து பட்டணத்திலுள்ள பெரிய ரதவீதிகளில் அழகான கமான் வேலைகளும் கொட்டகை வேலைகளும் பரோடா கண்டிராக்டர் குலாஉசேன் அவர்களால் போடப்பட்டிருக்கிறது. மாக்ஷிமை தங்கிய வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் ஸ்ரீகாசிக்கு விஜயமாவதற்கு முன் இரண்டு மூன்று தினங்களாக விடாமழை பெய்ததால் போட்டிருந்த அனேகசாமான்களின் செய்திருந்த பல வேலைகள் உபயோகமில்லாமல் போகவும் திரும்பி வேலைசெய்யும்படியாகவும் நேரிட்டபோதிலும், மிகவும்சுருக்கமான நேரத்திற்குள் பரோடா கண்டிராக்டர் செய்திருந்த வேலையின் நேர்த்தி மிகவும் வியக்கத்தக்கதே. முனிஸிபல் ஆபிஸிலிருந்து குதோலியாரோட்டுவரை செய்யப்பட்டிருந்த கமான் வேலைகள் ஸ்ரீகாசி நகரில் செய்யப்படும் விசேஷித்த தொழில்களின் திறத்தைக் காட்டி நின்றன. முனிஸிபல் ஆபீசுக்கு சமீபமாக நியமிக்கப்பட்டிருந்த கமானது கங்கையிலிருந்து ஜலம் கொண்டுபோய் சுத்தி செய்து காசி நகரில் வீடுகள் தெருக்கள் சந்துக்கள் முதலிய சகல இடங்களுக்கும் அனுப்புகிற ஜலயந்திர (Water Works) ஆபீசிலுள்ள பைப்கள் முதலியவற்றால் நிர்மிக்கப்பட்டு இடையிடையே அவசியமுள்ள இடங்களில் கம்பிகளால் கோர்க்கப்பட்டு நின்றது.

டவுன் ஆலுக்குச் சமீபமாய் ஒருகமானிற்செய்திருந்த அபூர்வ காக்ஷியானது மேற்படி கமானை ஒரு சிறியமலையாகத் தோன்றச் செய்து மேற்படி குன்றின்மேல் சிறிய கூடாரங்கள் அமைக்கப்பெற்றுமேற்படி குன்றுக்கு ஏறிப்போகிற வழிகளில் அநேகவிதமான செடிகளும் மரங்களும் அமைந்து அதனிடையே பலவிதமானமிருகங்களின் தோல்கள், காட்டு மாடு, கலைமான் இவைகளின் கொம்புகளும் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கமானானது வேட்டையில் கிடைக்கக்கூடிய காட்டுமிருகங்கள் அவைகளின் அங்கங்கள் முதலியவைகளைக்காட்டு கின்றபோதிலும் அதைப்பார்த்தவர்கள் வாஸ்தவமென்று சந்தேகிக்காமலிருக்க முடியாது. நீக்கிப்போகின்ற மற்றொரு இடத்தில் நியமிக்கப்பட்டிருந்த கமான் இந்த கமானானது ஸ்ரீகாசியிலுள்ள நெசவுக்காரருடைய அரியகைத்தொழில் திறமையைக் காட்டுகின்றது. மேற்படி கமானில் பட்டில் சரிகை கலந்து நெசவு செய்யப்பட்ட பட்டாடைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேற்படி பட்டாடைகளின் மதிப்பு இரண்டாயிரரூபாய்க்குமேலென்றே சொல்லலாம். ஸ்ரீ காசி ஜெனரல் போஸ்டாபீசுக்குச் சமீபத்தில் நியமிக்கப்பட்டிருந்த மற்றொருகமான் இந்தக் கமான் ஸ்ரீ காசியிலுள்ள பித்தளைப் பாத்திரங்களில் செய்யப்படும் நகாசுவேலைப்பாடுகளின் கைத்தொழில் திறமையைக் காட்டுகின்றது. அதில் பித்தளை லோகத்தில் செய்யப்பட்டுள்ள அற்புதமான நகாசுவேலைப்பாடுகளமைக்கப்பெற்ற பித்தளை பாத்திரங்கள் எண்ணிறந்தவை வெகு விநோதமாகவும் அலங்காரமாகவும் வைக்கப்பட்டிருந்தன. பெங்கால் பேங்கு சிட்டி ஆபீசுக்கு சமீபமாய் நிருமிக்கப்பட்டிருந்தது. மற்றொரு கமான் - இந்தக்கமான் ஜெர்மன்சில்வரில் வேலைசெய்யும் கைத்தொழில் சிறப்பைக்காட்டியிருக்கின்றது. அந்தக்கமான்முழுவதும் ஜெர்மன் சில்வர் சாமான்களாலே அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

சவுக் போலீஸ் ஸ்டேஷனாபீசுக்கு சமீபமாய் நியமிக்கப்பட்டிருந்தது மற்றொரு கமான். இந்தக் கமான் கிளாக்காபூ என்றஅருமையான பட்டாடைகளின் மதிப்பு ஆயிரத்துக்கு மேலாகவேயிருக்கலாம். கொதோவலியாவுக்கு சமீபத்திலுள்ளகமான்-இந்தக் கமான் ஸ்ரீ காசி மஹாராஜா அவர்களால் பிரத்தியேகமாக பினான் போடப்பட்டு மிக அற்புதமாய் நிருமிக்கப்பட்டிருந்தது. அது இந்த புரா



தனங்களிலுள்ள விக்கிரகங்களின் விபரத்தை மெய்ப்பித்துக்கொண்டிருக்கின்றது. அதில் பலவிதமான விக்கிரகங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

18-ந்தேதி காலை 9-மணிக்கு நமது மாக்ஷிமைதங்கிய வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் ஸ்ரீ காசி கண்டோன்மெண்டில் ரெயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கினார்கள். அப்போது ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் ஸ்ரீ காசி மகாராஜா அவர்கள் கனம்தங்கிய லெப்டினெண்டு கவர்னரவர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்கள், மதராஸ் கமிஷனரவர்கள், ஜில்லா கலெக்டரவர்கள், போலீஸ் டிஸ்டிரிக்ட் சூப்பிரின்டெண்டு முதலியவர்கள் எதிர்சென்று வரவேற்றார்கள். ஸ்ரீ காசியிலுள்ள மற்றப்பிரபுக்களுக்கும் இதர பொதுஜனங்களுக்கும் பிளாட்பாரத்தில் சென்று தெரிசிக்க அனுமதி கொடுக்கப்படவில்லை. ஸ்டேஷனிலிருந்து மாக்ஷிமை தங்கின இளவரசரும் இளவரசியாரும் நாலுகுதிரைபூட்டிய சாரட்டுவண்டியிலேறி கண்டோன்மெண்டு யின்றுரோட் வழியாக நடேசர் அவுஸ் என்ற (ஸ்ரீ காசிமஹாராஜாவின்) அரண்மனைக்கு சென்றார்கள். 9-30-க்கு காலை போஜனம்நடந்தது. 1-30 க்கு விருந்து நடந்தது. அன்று பிற்பகல் புறப்பட்டு ஸ்ரீ காசிக்கு வடகிழக்காக சுமார்4 மைலுக்குள்ளிருக்கும் சாரநாத் என்று சொல்லப்பட்ட புத்தர்களின் புராதனமான முக்கிய ஸ்தலத்திற்குப் போய் அங்கு தற்போதிருக்கும் புராதன விக்கிரகங்களைப் பார்வையிட்டு திரும்பினார்கள்.

18-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை யாதலால் அன்று தேவ ஆராதனை செய்வதற்காக மாலை 5-30, க்கு புறப்பட்டு வருணை நதிபாலம் வழியாக, "செண்ட் மேரி சர்ச்சுக்கு" சென்றார்கள். கனம்தங்கிய லெப்டினெண்டு கவர்னரவர்களும் கூடச்சென்றிருந்தார்கள். இரவு 8-30க்கு இராபோஜனம் நடந்தது.

19-ந்தேதி மாலை $4\frac{1}{2}$-மணிக்கு மாக்ஷிமைதங்கிய இளவரசரும் இளவரசியாரும் நடேசர் அவுஸிலிருந்து ஐந்துகாருக்கு முனிசிபாலபீஸ் ரோட் வழியாக டவுன் ஆபீசுக்குசென்றார்கள். அங்குஸ்ரீகாசி மஹாராஜா அவர்களும் முனிசிபல் போர்டு சேர்மென் முதலிய மற்ற பிரபுக்களும் நின்று மாக்ஷிமை தங்கிய இளவரசனையும் இளவரசியையும் வரவேற்றார்கள். முனிசிபல் வைஸ் சேர்மென் காளி

தாஸ்மித்தர் அவர்களால் நல்வரவு பத்திரிகைவாசிக்கப்பட்டது மாட்சிமைதங்கிய இளவரசர் மேற்படி நல்வரவு பத்திரிகையை அன்புடன் அங்கீகரித்து இனிமையான பதிலளித்தவுடனே டவுன்ஹாலை விட்டு வெளியே வரவும் ஸ்ரீகாசியிலுள்ள க்ஷேத்திரங்களின் பண்டாரங்கள் (பூசாரிகள்) ஒன்று கூடிச்சென்று மாட்சிமை தங்கிய இளவரசருக்கும் இளவரசியாருக்கும் ஆசிகூறி இந்துக்கள் வழக்கப்படி தேங்காய் பாக்கு வெற்றிலை புஷ்பம் முதலியவைகளை பிரசாதமாக அளித்தார்கள். பிறகு மிக ஆடம்பரத்துடன் வெள்ளி அம்பாரி முதலியவைகள் வைத்துக் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்த ஆனைகளின் மீது மாட்சிமைதங்கிய இளவரசரும இளவரசியாரும் மற்றும் சகலரும் ஏறி வரிசையாகப் பவனி புறப்பட்டார்கள்.

1. பேரிகை வாத்தியங்கள் கொண்டு சென்ற யானை.

2. சுதேச குதிரைப்படை.

3. இங்கிலீஷ் குதிரைப்படை.

4. மாட்சிமைதங்கிய இளவரசரும் இளவரசியாரும் ஏறிச்சென்ற யானை.

5. ஸ்ரீ காசிமஹாராஜாவும் கனம் தங்கிய லெப்டினெண்ட் கவர்னரவர்களும் ஏறிச்சென்ற யானை.

6. மாட்சிமை தங்கிய வேல்ஸ் இளவரசரின் பிரைவேட் செக்ரிட்டரியான ஸர் வட்டர் லாரென்ஸ் ஏறிச்சென்ற யானையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலவர்களும் ஸ்ரீ காசி மஹாராஜாவின் குமாரராகிய குமார ஆயத்த நாராயணஸிங் அவர்களும் ஏறிச்சென்றயானையும் ஜோடியாக.

7. மாட்சிமை தங்கிய இளவரசரைச் சார்ந்த உத்தியோகஸ்தர்கள் ஏறிச்சென்ற இரண்டு யானைகள் ஜோடியாக.

8. கனம் தங்கிய லெப்டினெண்ட் கவர்னரவர்களின் உத்தியோகஸ்தர்கள் ஏறிச்சென்ற இரண்டுயானைகள் ஜோடியாக.

9. மஹாராஜா அவர்களின் உத்தியோகஸ்தர்கள் ஏறிச்சென்ற இரண்டுயானைகள் ஜோடியாக.

10. மஹாராஜாவால் அழைக்கப்பட்டு விருந்தாளிகளாக வந்திருந்த ஐரோப்பிய துரைமார்களும் துரைசாணிகளும் ஏறிச்சென்ற 24 யானைகளும் 12 ஜோடியாக ஒன்றின்பின் ஒன்றாய்.



11. சுதேசிய குதிரைப்படை.

12. இங்கிலீஷ் குதிரைப்படை.

குதிரை வண்டியில்.

13. பாபு காளிதாஸ மித்தர் அவர்கள்.

14. கோஷாயின் ராமசரணபுரி அவர்கள்.

15. மற்றப்பிரபுக்கள் வரிசைவரிசையாக.

இவ்விதமாக டவுன் ஹாலிலிருந்து புறப்பட்டு பிரதானராஜ்தா வாஜிய சவுக் (ஸ்ரீ அரிச்சந்திர மஹாராஜனை விலை கூறினதாக சொல்லப்படுகிற) ரோட்டுவழியாக குதோகலியாவரை பவனி வந்தார்கள். டவுனுவிலிருந்து குத்தாவலியாவரை ரோட்டின் இருபக்கங்களிலுமுள்ள நடைபாதைகளிலும் ஒவ்வொருவீட்டின் மேல்மாடிகளிலும் சாளரங்களிலும் ஏராளமான ஜனங்கள் கும்பல் கும்பலாக நின்று மாட்சிமைதங்கிய இளவரசரையும் இளவரசியாரையும் கண்டவுடன் மெத்த குதூகலமாக ஆரவாரம் செய்தார்கள் மேற்படி குதோகலியாவந்தவுடன் யானைகளை விட்டிறங்கி அங்கு தயாராக நின்ற குதிரைவண்டிகளின்மீது ஏறி ஜெகதவுஞ்ச், சேதுகஞ்ச வழியாக நடேசர் அவுசு என்ற அரண்மனைக்கு மாலை 6-30 மணிக்கு சென்றார்கள் இரவு 9-மணிக்குக் கூட்டவிருந்து நடந்தது.

20-ந்தேதி காலை 6-30 மணிக்கு மாட்சிமை தங்கிய இளவரசரும் இளவரசியாரும் தற்போக்கு (Motor Cor) வண்டியில் நடேசர் அவுஸிலிருந்து புறப்பட்டு கண்டோன்மெண்டு வழியாக அசிகட்டத்துக்கு சென்றார்கள். அசிகட்டத்திலிருந்து போட்டிலேறி கங்கை நதியின் வழியாக பஞ்சகங்கா கட்டம்வரை போய் திரும்பிவந்து தசாதவிமேத கட்டத்திலிறங்கி அவ்விடமிருந்து மோட்டார்காரில் நடேசர் அவுசுக்குச்சென்றார்கள். 11.30-க்குநடேசர் அவுஸில் வைத்திருந்த ஸ்ரீ காசியிலுள்ள விசேஷ கைத்தொழில் சாமான்களைப் பார்வையிட்டார்கள். மாலை 5-மணிக்கு மோட்டார் காரில் சென்று இந்துகாலேஜுக்குப் போனார்கள். அங்கு மாட்சிமை தங்கிய இளவரசருக்கும் இளவரசியாருக்கும் நல்வரவு கூறி உபசாரப்பத்திரிகை சரஸ்வதி ஆலயம்போன்ற அபூர்வவேலைப் பாடுகளமைந்த ஒரு வெள்ளிபெட்டியில் வைத்து கொடுக்கப்பட்டது. மேற்படி நல்வரவு பத்திரிகையை அன்போடு அங்கீகரித்ததை தவிர, அதற்கு யாதொரு மறுமொழியும் மாட்சிமைதங்கிய இளவரசர்

சொல்லவில்லை. அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு அஸிகட்டத்துக்குச் சமீபத்திலுள்ள நடுவுரகட்டத்துக்கு சென்று அங்கிருந்து லெப்டினென்ட் கவர்னவர்கள் சகிதமாக ஸ்ரீகாசி மஹாராஜாவின் அலங்கிருதமான குதிரைமுக படகிலேறிக் கங்கையின் கீழ்க்கரையிலுள்ள ராமநகரில் ஸ்ரீ காசி மகாராஜாவின் அரண்மனைக்குச்சென்றார்கள். இராமநகர் கட்டத்தில் மகாராஜா அவர்கள் வந்து மாக்ஷிமைதங்கிய இளவரசரையும் இளவரசியாரையும் வரவேற்று அரண்மனைக்கு இட்டுச்சென்றார்கள். அங்கு சற்றுத் தங்கி தேத்தண்ணீர் பானம் செய்துகொண்டு திரும்ப இரவு 7-மணிக்கு அதேபடகிலேறி கங்கையின் கீழ்க்கரையில் நடந்த அற்புதமான வாணவேடிக்கைகளையும் மேல் கரையிலுள்ள தீப காக்ஷிகளையும் கங்கைநதியில் மிக அலங்காரத்தோடும் பாத மேளவாத்தியக் கோஷங்களுடனும் தீபக்காக்ஷியுடனும் அங்குமிங்கும் உல்லாசமாய்ப் பார்த்தவர்கள் கண்ணைக் கவரத்தக்க விதத்தில் உலாவிக்கொண்டிருந்த நூற்றுக்கு அதிகமான போட் (Boat) வேடிக்கைகளையும் பார்த்துக்கொண்டு தசாசுவமேத கட்டத்தில் வந்திறங்கினார்கள். காசிமஹாராஜா அவர்களும் அதேபோட்டில் கூடவே வந்திருந்தார்கள். இந்த அற்புதக் காக்ஷியைத் தரிசித்து ஆனந்திக்கவந்திருந்த கணக்கில்லாத ஜனங்கள் திரள்திரளாகக்கூடி அஸிகட்டம் முதல் இராஜகாட்வரை உத்தேசம்மூன்று மைல்தூரம் நிறைந்து நின்றுவேடிக்கைப் பார்த்தார்கள். அன்று பட்டண முழுதும் தீபத்தால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தசாசுவமேத கட்டத்திலிருந்து மாக்ஷிமைதங்கிய இளவரசரும் இளவரசியாரும் மோட்டார்காரில் புறப்பட்டு நடேசர் அவுஸுக்குச் சென்றார்கள்.

20-ந் தேதி இரவு 9-30 க்கு மாக்ஷிமைதங்கிய இளவரசர் நேப்பாளத்துக்கும் இளவரசியார் லக்நோவுக்கும் போகிறதாகப்புரோகிராம் போடப்பட்டிருந்தது. ஆனால், நேபால தேசத்தில் வாந்திபேதி நடக்கிறதாகத் தந்தி வந்ததால் மேற்படிபுரோகிராம் மாற்றப்பட்டு அன்று இரவும் மாக்ஷிமைதங்கிய இளவரசரும் இளவரசியாரும் நடேசர் அவுஸிலேயே தங்கியிருந்தார்கள்.



## மிஸஸ் அன்னிபெஸாண்டும் வேல்ஸ் இளவரசியும்.

ராஜ தம்பதிகள் காசி ஹிந்து காலேஜைப் பார்வையிட்டதின் மறுநாள் இளவரசி மிஸஸ் பெஸாண்டை அழைப்பித்து பேட்டியளித்தனர். காசி ஹிந்து காலேஜைப் பார்வையிட்டதிலிருந்து ராஜதம்பதிகள் பெருங் களிப்படைந்தனர். இளவரசியின் குறிப்புப் புத்தகத்திலே மிஸஸ் பெஸாண்ட் கையெழுத்துப் போடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். பிப்ரவரிமாதம் 21 தேதி மாலை ராஜதம்பதிகள் முற்பட்ட ஏற்பாடுகள் ஒன்றுமின்றி திடீரென்று "குரங்குக் கோயிலை"ப் போய்ப் பார்வையிட்டார்கள். [காசியிலே தென் பகுதியில் ஓர் அழகிய துர்க்காதேவி ஆலயம் இருக்கின்றது. இதுகாசிக் கோயில்களிலே மிகவும் சிறப்பும் மகிமையும், செல்வமும் பொருந்தியவற்றுள் ஒன்று. இங்கே எண்ணிறந்த குரங்குகள் கூடியிருக்கும். யாத்திரைக்காரர் இக்குரங்குகளுக்கு பொரி, பழம், மிட்டாய், முதலிய தின்பண்டங்கள் வாங்கிப் போடுவதுண்டு. இக்காரணம்பற்றி அதை அந்நியர்கள் சாதாரணமாக குரங்குக்கோயில் (Monkey Temple) என வழங்கிவருகிறார்கள்.] குரங்குகளுக்கு உணவு கொடுத்து அவை தின்பதைப் பார்ப்பதில் இளவரசி மிகவும் மகிழ்ச்சி பாராட்டினார்.

செவ்வாய்க்கிழமையன்று ராஜதம்பதிகள் கங்கைநதியில் தோணியேறிச் சென்று நதியினிருபுறத்திலுமுள்ள காட்சிகளைப் பார்த்தார்கள். லார்ட் கார்ன்வாலிஸால் கட்டப்பட்ட குயின்ஸ் காலேஜையும் பார்வையிட்டார்கள்.

வேல்ஸ் இளவரசியார் பெனாரிஸில் தங்கியிருந்தபோது, ஸர் வால்டர் லாரன்ஸுடன் சுற்றியுள்ள கிராமமொன்றுக்குச் சென்று தம்மை யின்னாரென அறிவியாமல் தெருக்களில் நடந்து சென்றபோது, கிராமவாசிகள் எப்படியோ இவர்களை வேல்ஸ் இளவரசியாரென அறிந்துகொண்டு பாதத்தில்வீழ்ந்து வணங்கினார்களாம். ஒரு கிழவி இளவரசியாரின் காலில்வீழ்ந்து 'ராணியே என்மகன் கொலை செய்த குற்றத்திற்காக அண்டமான் தீவிலிருக்கின்றான். அவனை யெப்படியாவது மீட்டுக் கொடுக்கவேண்டும்' என அழுதாள். அதைக்கேட்ட இளவரசியார் தம்மாலிக்காரியம் செய்யமுடியாதென்றும், நியாயக் கோர்ட்டார் செய்யவேண்டிய வேலையென்றும் பதில் சொன்னார்கள்.

21-ந் தேதி புதன்கிழமை மாலை வேல்ஸ் இளவரசர் குவாலியர் நோக்கிப் பிரயாணமாயினார். வேல்ஸ் இளவரசியார் லக்நோ, டேராடூன் முதலிய இடங்கள் நோக்கிப் பிரயாணமானார்கள்.

## குவாலியர்.

தற்போது குவாலியரில் பஞ்சம் தோன்றி ஜனங்கள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். வேல்ஸ் இளவரசர் இவ்விடத்தில் வேட்டையாடியபோது மார்வார் டிஸ்டிரிக்டில் பஞ்ச நிவிருத்திச் சாலைகளை நேராகப்போய்ப் பார்த்தார். ஆங்கு வேலை செய்தவர்களுக்கெல்லாம் தம்முடைய சொந்தப்பணத்திலிருந்து ஒருநாட் சம்பளம் அதிகமாகக் கொடுத்தார்.

## அலிகாரில் வேல்ஸ் இளவரசர்.

2 வாரம் பிரிந்திருந்ததிற் கப்பால் இளவரசியும் இளவரசரும் மறுபடியும் சந்தித்துக்கொண்டார்கள். வேட்டையிலிருந்துமீண்ட இளவரசரும் லக்நௌ டேராடூன் மஸ்ஸூரி முதலிய இடங்களையெல்லாம் பார்வையிட்டு ஹரி துவார க்ஷேத்திரத்திற்குச் சென்று மீண்ட இளவரசியும், ஹாட்ராஸ் என்ற ஜங்ஷனில் சந்தித்து அங்கிருந்து அலிகாருக்கு வந்துசேர்ந்தார்கள் அங்கே 6 மணிநேரம் தாமதித்தனர். அங்குமகமதியக் காலேஜைச்சென்றுபார்வையிட்டுமகிழ்ந்தார்கள். இந்தப் புகழ்பெற்ற காலேஜ் ஸர் ஸய்யது அஹமத் என்ற மகமதியத்தலைவரால் ஸ்தாபிக்கப்பட்டது. மிஸ்டர் தியடோர் பெக் மிஸ்டர் தியடோர் மாரிஸன் என்ற ஐரோப்பியப் பிரின்ஸ்பால்கள் இதன் அபிவிருத்தியின்பொருட்டு மிகவும் பாடுபட்டிருக்கிறார்கள். அங்கிருந்து ராஜதம்பதிகள் க்வெட்டாவிற்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

## குவட்டா.

சனிக்கிழமையன்று வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் குவட்டா போய்ச்சேர்ந்தார்கள். மழை மிகவும் அதிகமாகப் பெய்தபடியால் ராஜ தம்பதிகள் வரவு பப்ளிக்காகக் கொண்டாடப் படவில்லை. மழை பெய்வதை அறிந்து தம்மைப் பப்ளிக்காக வரவேற்க வேண்டியதில்லையென வேல்ஸ் இளவரசர் முன்னதாகவே தந்தியனுப்பி யிருந்தார். சென்ற திங்கட்கிழமையன்று குவட்டா முனிஸிபாலிட்டியார்வந்தனோபசாரப்பத்திரம்வாசிக்க அதற்கு வேல்ஸ் இளவரசர் பதில் சொன்னார்கள் கிலேட்கானும், லாஸ் பெய்லா ஜாமும் வேல்ஸ் இளவரசருடையபேட்டி பெற்றார்கள். பின்னர்ப் பல ஸர்தார்களும் பேட்டிபெற்றார்கள்.



## இராஜகுமாரரின் சுற்றுப்பிரயாணம்.

சனிக்கிழமை அதிகாலையில் வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் கராச்சித் துறைமுகம் போய்ச்சேர்ந்தார்கள்.

## இளவரசரின் பிரிவுப்பேச்சு.

இளவரசர் தமது மனைவியுடன் சுமார் 6 மாதங்களாக இந்தியாவில் யாத்திரைசெய்து பல இடங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியாக கராச்சித் துறைமுகத்தில் கப்பலேறித் தம்தேசத்துக்குப்பிரயாணமானார். கராச்சி யென்பது பம்பாய் ராஜதானியைச் சேர்ந்த ஸிந்து மாகாணத்தின் தலை நகர். அதுசமீபத்தில் பெரிய வர்த்தகச்சாலையாகி பம்பாய்க்கு இரண்டாவதாகச் செழித்து வருகின்றது. மற்ற இடங்களில் இளவரசருக்கும் மனைவிக்கும் உபசாரணைகள் நடந்ததைப்போல கராச்சியிலும் நடந்தன. வழக்கம்போல முனிஸிபாலிடியாரும் நகரத்தாரும் பத்திரிகைகள் படித்து உபசாரவார்த்தைகள் சொன்னார்கள்; அங்கே இறந்துபோன மகாராணி சக்கிரவர்த்தினியின் ஞாபகச்சின்னமாக ஒரு சிற்சிலை செய்து ஸ்தாபித்தார்கள். அந்த சமயத்தில் இளவரசர் சிலையைத் திறந்து தமது பாட்டியாரிடத்திலும் தம் பிதாவிடத்திலும் கராச்சி ஜனங்கள் பாராட்டும் விசுவாசத்தைப் புகழ்ந்துபேசினார். இளவரசர் இந்தியா முழுமையும் யாத்திரை செய்து பல இடங்களில் பலகாரியங்கள் செய்ததில், எத்தனை முறையோ தமது புத்தி கூர்மையையும், பெருந்தன்மையையும், ஜனங்களிடத்தில் விசுவாசத்தையும்காட்டி, எல்லோர்க்கும் சந்தோஷமுண்டாகும்படியாகப் பேசியிருக்கிறார். பேசியிருந்தாலும், கராச்சி நகரத்தில் இந்தியாவிடம் விடைபெற்றுச் செல்லுவதாயிருந்த சமயத்தில் அவர்பேசின பேச்சானது எல்லாவற்றிலும் மேன்மையானது. கராச்சி துறைமுகமானது சமீபத்தில் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திலேயே சிறந்த உயர்நிலையையடையப் போகிறதென்று சொல்லிவிட்டு, அந்த நகரத்தார்தாம் இந்தியாவை விட்டு நீங்கும் தருணத்தில் தமக்குபசாரமாகச் சொன்ன வார்த்தைகள் தம் மனதில் அழுப்பதிந்து தம்மனதைஉருக்குவதாக சொன்னார். "இந்த விசாலமாகிய அதிசய பூமியில் எல்லாப்பாகங்களிலும் முன்னே செயர்கள்பலரும் நாங்கள் இந்தியாவைவிட்டுஅன்பும் நன்றியும்மேலிட்டவர்களாகப் பிரிகிறோமென்பதை உறுதியாய் நம்பக்க

டவர்கள் என்று சொன்னார். இந்தியாவில் எவ்வளவோ பார்த்தோம், எவ்வளவோ தெரிந்து கொண்டோம், இந்தியா எங்கள் மனதில் எப்போதும் மறையாமல் எதிர்நிற்கும். எங்கள் உடன்பிரஜைகளான இந்தியரில் எவ்வகுப்பார், எம்மதத்தாராயினும், அவர்கள் சம்பந்தமான எல்லாவிஷயங்களிலும் எங்களுக்கு ஒற்றுணர்ச்சியும் அக்கறையு முண்டாகும். போன இடங்களிலெல்லாம் ஜனங்கள் உற்சாகத்துடன் சந்தோஷமாய்த் தெருக்களில் திரண்டு நின்று எங்கள் பவனியைப் பார்த்தார்கள். போன இடங்களெல்லாம் சோர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. இருந்தாலென்ன! உள்நாடுகளின் கிராமங்களில் வசிக்கும் கோடிக்கணக்கான பிரஜைகள் காலமழைக்குறைவினால் படும்கஷ்டத்தை நாங்களறியாமலிருக்க வில்லை; இந்த உஷ்ணபூமியில் தேகசிரமத்தைப் பாராமல் நெடுநேரம் பொறுமையுடன் உழைத்துக் கஷ்டப்படும் ஏழைகளின் உபாய சீவனத்தையும் நாங்களறியாதவர்களல்ல. இந்தியாவை நேரிற் பார்த்து அநுபோகம் பெறும்படியான பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தபடியால், நாங்கள் இங்கே பெற்ற அநுபோகமும் அறிவும் பிற்காலத்தில், இதர அநுபோகமும் அறிவும் உண்டாகும்போது பிரிடிஷ் ஆட்சி சம்பந்தமான பிரஸ்னைகளைச் சிந்திப்பதில் உபயோகப்படும்." இப்படிச்சொல்லி, மகாராஜா சக்கிரவர்த்தியிடம் பிரஜைகள் எல்லாவிடங்களிலும் உற்சாகத்துடன் காட்டின பக்தியையும் விசுவாசத்தையும் புகழ்ந்து பேசி சந்தோஷப்பட்டார். இப்படி இளவரசர் புகழ்ந்து பேசினது பெரிதல்ல. இந்தியர்களுக்கு ராஜபக்தியிருப்பதும் பிரிடிஷ் அரசரும் அரசியல்வல்லோரும் அவர்களது ராஜ பக்தியைப் புகழ்வதும் அரிதல்ல. இப்போது இளவரசர் இந்திய ஜனங்களில் மகா ஏழைகள் கோடிக்கணக்காக இருக்கிறார்களென்றும், அவர்கள் மகா கஷ்ட ஜீவனம் செய்கிறவர்களென்றும், தமக்கு இப்போது உண்டான அநுபோகத்தையும் அறிவையும் அந்த ஏழைகளின் நன்மையின் பொருட்டுப் பிரயோசனப்படுத்தப் பிற்காலம் தருணங்கள் வாய்க்குமென்றும் சொன்னதே பெரியது. இளவரசரின் யாத்திரை நடந்துகொண்டிருந்த காலத்தில் பட்டணங்களை அபூர்வமாக அலங்காரஞ் செய்யப்பட்டிருக்கும் நிலைமையில் பார்க்கிறாரேயன்றி, ஏழைகள் வசிக்கும் அழுக்கும் அசுத்தமும் சூழ்ந்த சந்துபொந்துக்களைப் பார்த்தாரில்லையே யென்று நாம் விசனப்பட்டோம். பெரிய மனுஷரை



யும், உத்தியோகஸ்தரையும், குறுநிலமன்னர்களையுமே கண்டுபேசி அவர்களுடைய பெருமையைச் சொல்லக் கேட்கிறாரேயன்றி, ஏழைகளைக் கண்டு அவர்கள் தங்கள் சிறுமைகளையும் கஷ்டங்களையுஞ் சொல்லக்கேட்கவில்லையே யென்று கவலைப் பட்டோம். இப்படி நாமே யல்லாமல் இந்தியாவிலுள்ள எல்லா பத்திரிகைகளும் விசனத்தையும் கவலையையுந் தெரிவித்தன. இவைகளைப்பார்த்தோ அல்லது இளவரசரின் இயல்பான பெருந்தன்மை ஜீவகாருண்யம் இவைகளாலோ ஏழைகளின் மகா கேவலமான நிலைமையைத் தாம் உணராதவரல்ல வென்று நமக்குச் சொல்லவேண்டியது அவசியமென்று அவருக்குத் தோன்றினது இந்திய ரெல்லோருக்கும் திருப்தியைக் கொடுக்கும்.

## ராஜதம்பதிகளின் பிரயாணம்.

சென்ற திங்கட்கிழமையன்று மாலை வேல்ஸ் இளவரசரும் இளவரசியாருங்காராச்சித் துறைமுகத்தில் "ரினௌன்" என்ற தங்கள் கப்பலிலேறி இங்கிலண்டு நோக்கிப்பிரயாணமானார். சென்ற வருஷம் நவம்பர் மாதம் 9-ஆந்தேதி முதல் மார்ச்மாதம் 19-ஆந் தேதிவரை ராஜதம்பதிகள் இந்தியா முழுவதிலும் சுற்றுப்பிரயாணஞ் செய்து பர்மாவுக்குச் சென்றார்கள். இந்தியாவில் திருவாங்கூர் கொச்சி முதலிய சில இடங்களைத் தவிர அநேகமாய் மற்றெல்லா விடங்களுக்கும் சென்றிருக்கின்றார்கள். நேபாள தேசத்தில் விஷபேதி தோன்றியபடியினாலேயே இவர்கள் ஆங்குச் செல்லவில்லை. மேற்கே பம்பாயிலிருந்து கிழக்கே மாண்டலே வரையிலும், தெற்கே சென்னையிலிருந்து வடக்கே 'கைபர்க் கணவாய்' வரையிலும் ராஜதம்பதிகள் சுற்றுப்பிரயாணஞ் செய்து, விருந்துண்டும் வேட்டையாடியும், வேடிக்கைகள் பார்த்தும், ஜனங்களை நோக்கி மனம் பூரித்தும் வாசிக்கப்பட்ட வந்தனோபசாரப் பத்திரங்களுக்கு இனிமையோடும், அன்போடும் பதில் சொல்லியும், யாவர்மனதையும் ராஜ விசுவாசத்தாலும் அன்பாலும் உருகிக் கசிந்தோடச் செய்தும் கொஞ்சமேனும் ஜனங்கள் அதிருப்திப்படவேனும் குறைகூறவேனு மிடமில்லாத படி நடந்துகொண்டார்கள். இந்தியர்களைப்போல் ராஜவிசுவாசிகளுலகத்தில் வேறெங்கேனுமுண்டோ? ராஜதம்பதிகளை நாம் வரவேற்ற உற்சாகமும் அவர்கள் சென்றவிடமெல்லாம் நாம் காட்டிய அன

வில்லாஊக்கமும் நம்முடைய ராஜவிசுவாசத்தை மிகவும் விளக்கமாயெடுத்துக்காட்டும். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தெருக்களில் திரண்டு ஆரவாரித்தார்கள்; வாழ்த்தினார்கள் மலர்மாரி பெய்தார்கள்; உள்ளன்போடு வணங்கினார்கள். பறையர் முதல்பாப்பனர் ஈறாகப் பேதமில்லாது ராஜவிசுவாசங் காட்டினார்கள். பிராமணக்குருக்களும் பௌத்தத் தலைவர்களும் திபேத்தியச் சந்நியாசிகளும் சுதேசத்திலுள்ள கிருஷிகர்களும் சுதேசமன்னர்களும் மலைவாசிகளும் ஆயிரக்கணக்காய் ராஜதம்பதிகளைச் சூழ்ந்து சந்தோஷத்தா லாரவாரித்தார்கள். நகரங்கள் அலங்கரிக்கப்பட்டன. பலவகைத்தாய வேடிக்கைகள் நடைபெற்றன. ராஜதம்பதிகளை யெம்மாதிரியெல்லாம் சந்தோஷப்படுத்தலாமோ அம்மாதிரிதாம் செய்தோம். நம் நாட்டிலுள்ள பெண்கள் வேல்ஸ் இளவரசியாரைப் பற்பலமாதிரி உபசரித்தார்கள். ராஜதம்பதிகள் தங்கள் குடிப்பிறப்பிற்கும் உயர்ந்த அந்தஸ்திற்கும் உள்ள பெருமையொன்றையும் காட்டாது மிகவும் பக்ஷமாகவும் மிகவும் பிரியமாகவும் ஜனங்களிடம் நடந்துகொண்டார்கள். யாவருக்கெல்லாம் உதவிசெய்யமுடியுமோ அவர்களுக்கெல்லா முதவிசெய்தார்கள். சென்னையில் குதிரையொன்றால் காயப்பட்ட பிராமண வாலிபனிடத்து வேல்ஸ் இளவரசியார் காட்டியகருணையை யாவரே புகழில்லார். ஸ்ரீ காசியையடுத்த கிராமமொன்றில் வேல்ஸ் இளவரசியார் தன்னந்தனியாய்த்தமது தளிர்போன்ற பாதங்கள் நோவ நடந்துசென்று ஜனங்கள் மத்தியில் பழகிய அருமையினைத் துதிக்கவல்லார் யாவர்? இம்மாதிரி வேல்ஸ் இளவரசரும் சிற்சில சமயங்களில் காட்டிய கருணைப் பொலிவையும் மகோன்னத அன்பையும் இந்தியர்கள் தங்களுயிருள்ளளவும்மறக்கமாட்டார்கள். ஐதராபாத்தில் ராஜதம்பதிகள் சுற்றுப்பிரயாணஞ் செய்தபோது நிஜாமின் ஏக்குமாரத்தி மரித்துப்போக அப்போது நமதிளவரசர் காட்டிய துக்கத்தை யாவரே எடுத்துரைக்கவல்லார்? ஏழைகளிடம் அவர்காட்டிய பக்ஷமும் பிரியமும் என்றும் மறக்கத்தக்கவையோ? ராஜதம்பதிகள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்தகாலத்தில் அபரிமிதமான வேலை செய்திருக்கிறார்கள். வேல்ஸ் இளவரசர் சற்றேனும் ஓய்வில்லாமல் வேந்தர்களுக்கும் மற்றும்பெரிய மனிதர்களுக்கும் பேட்டி கொடுப்பதும் விருந்துண்பதும் குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்டவேலைகளைச்செய்வதுமா யெவ்வளவோ பாடுபட்டிருக்கிறார். அதே



விடங்களில்விக்டோரியா ஞாபகச் சின்னங்களைத்திறந்திருக்கிறார். சென்னையிலும் மைசூரிலும் "டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்" (கைத்தொழில் வித்தியாசாலை) கள் திறக்கப்பட்டன. பம்பாயில் புதிய துறைமுகமும், கல்கட்டாவில் விக்டோரியா ஞாபகச்சின்னமண்டபமும், அந்தூரில் எட்வர்ட், விக்ரஹமும் ரெங்கூனில் பார்க்கும், லாஹூரில் ஒரு மார்க்கட்டும், லக்னோவில் மெடிக்கல் காலேஜும், ஐதராபாத்தில் கோஷாஆஸ்பத்திரியும், இன்னும் பலகட்டிடங்களும் ஞாபகச்சின்னங்களும் திறக்கப்பட்டிருப்பதுடன், எத்தனையோ படைகளுக்குப்புதுக்கொடிகள் அளித்து எத்தனையோ பேச்சுக்கள் பேசி வேல்ஸ் இளவரசர் தளராமல் வேலைசெய்திருக்கிறார். ராஜதம்பதிகளுடைய சுற்றுப்பிரயாணத்தால் இந்தியர்களுடைய ராஜவிசுவாசம் பலப்பட்டிருக்கின்றதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தியர்கள் பரம ஏழைகளென்பதும், அவர்கள் தரித்திரத்தாலும் பிளேக் முதலிய நோயாலும் மெலிந்து நைந்து வருகின்றார்களென்பதும் இந்தியா ராஜாங்க முறைமைகளிற் சில அநீதியானவை உளவென்பதும் ராஜதம்பதிகளுக்குத் தெரியுமோ? இதைப்பற்றி இனியிப்போது கூறவேண்டுவதில்லை. ராஜதம்பதிகள் சுகமாக இங்கிலாண்டுபோய்ச்சேர்வார்களாக; கடவுள் அவர்களையும் அவர்களுடைய மக்களையும் ஆசீர்வதிப்பாராக, இந்திய யேகாதிபத்தியம் பிரிடிஷாரின் செங்கோலின் கீழடங்கி க்ஷேமத்திலும்சிறப்பிலும் விருத்தியடைவதாக !

சென்னைக் கவர்னர், பிரயாணோபசாரம் கூறி ராஜதம்பதிகளுக்குத் தந்தியனுப்பிச் சென்னை ஜனங்களுக்கு மிகவும் நன்றியறிதல் கூறி ராஜதம்பதிகள் சென்னைக் கவர்னருக்குப்பதில் தந்தியனுப்பியிருக்கிறார்கள்.

பம்பாய்க் கவர்னரும் ஸர் பிரதாப்ஸிங்கும் ராஜதம்பதிகளை வழியனுப்பும்படியாக காராச்சித் துறைமுகத்துக்குச் சென்றிருந்தார்கள்.

## இந்தியா வைசிராயும் எட்வர்டு சக்ரவர்த்தியும்.

லார்டு மின்டோவுக்கும் சக்ரவர்த்திக்கும் பின்வரும் தந்திப் போக்குவரவு நடந்திருக்கிறது.

வைஸிராயிடமிருந்து சக்கரவர்த்திக்கு (1906 மார்ச் 18) "ராஜதம்பதிகள் இந்தியாவிலிருந்து புறப்பட்டுவிட்டனர். அவர்களின் யாத்திரை வெகு வைபவமாக முடிவு பெற்றது. அதிலிருந்து சமுகத்திய இந்திய குடிகள் மிகவும் அளவற்ற சந்தோஷமடைந்திருக்கிறார்கள்.

சக்ரவர்த்தியிடமிருந்து வைஸிராய்க்கு (1906 மார்ச் 19-ம் தேதி:—"தமது இனியவார்த்தைகளால், மிகவும் திருப்தியடைந்தேன். இளவரசர், இளவரசியார் இவர்களின் யாத்திரை அத்தனை வைபவமாக முடிந்ததைப் பற்றி ஆனந்தமடைகிறேன். அவர்களுக்கு இத்தனை சிறப்பாக உபசரணைபுரிந்தமைபற்றி தமக்கும், தமது உத்தியோகஸ்தர்களுக்கும், ஜனங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி பாராட்டுகிறேன்."

### வேல்ஸ் இளவரசர் ராஜப்பிரதிநிதிக்கு அனுப்பிய கடிதம்.

வேல்ஸ் இளவரசர் இளவரசியாருடன் கராச்சி துறைமுகத்தில் கப்பலேறி இந்தியாவை விட்டுப் பிரயாணமாயினரென்பதை நேயர்கள் அறிவார்கள். அவர் தாம் இந்தியாவை விட்டு நீங்கும் சமயத்தில் ராஜப்பிரதிநிதி லார்ட் மிண்டோவுக்கு நீண்டதோர் கடிதம் அனுப்பியிருக்கிறார். அக்கடிதத்தில் அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ என்று இதைவாசிப்போர் நினைக்கக் கூடுமாதலால், அந்தக் கடிதத்தை மொழிபெயர்த்து எழுதுகிறோம்.

இளவரசியாரும் நானும் விசனத்தோடு தான் இன்று இந்தியாவைவிட்டு நீங்குகின்றோம். அப்போதப்போது என்னுடைய பிரசங்கங்களிலும், அல்லது அங்கங்கேயுள்ள ஸ்தல அதிகாரிகளுக்கு நான் எழுதிய கடிதங்களிலும் இந்தியாவிலுள்ள சகல வகுப்புஜனங்களாலும் எங்கள்மீது சுமத்தப்பட்ட பிரியத்தோடுகூடிய உள்ளன்புக்காகவும், அவர்கள் எங்களை வரவேற்றுபசரிப்பதைக் கருதி உழைத்திருப்பதற்காகவும், எங்களுடைய மனப்பூர்வமான நன்றியறிதலை வெளியிட நான் பிரயாசைப்பட்டதுண்டு. அப்படி நான் எங்களுடைய மனப்பூர்வமான நன்கு மதிப்பை அந்தந்த சமயங்களில் விட்டு வந்தது இவ்விந்தியாவின் பல பாகங்களிலும் எங்களை வரவேற்று உபசரித்த இந்திய ஜனங்களின் மனதில் நாங்கள் அன்னா-



ருடைய வரவேற்பையும் உபசரிப்பையுங்கண்டு விசேஷதிருப்தியும், சந்தோஷமும் கொண்டோமென நன்றாய்ப் பட்டிருக்கக் கூடும். ஆயினும், இப்போது நாங்கள் இவ்விந்தியா ராச்சியத்தை விட்டு போகிறோமாதலால், நாங்கள் சுற்றுப்பிரயாணமாயிருந்த காலத்தில் அங்கங்கே கவர்ன்மெண்ட் இலாகாதார்களாலும் உள்நாட்டு ஸ்தல அதிகாரிகளாலும் எங்களை வரவேற்றுபசரிப்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகள் விமரிசையாய் செய்யப்பட்டு வெகு கிரமமாய் நடத்தி முடிக்கப்பட்டனவென்று நான் உமக்கு உறுதியாய்ச் சொல்ல விரும்புகிறேன். முதலாக இந்தியாவில் நாங்கள் சௌகரியமாய்ச் சுற்றுப் பிரயாணம் செய்யும்படி ஓர் சுற்றுப் பிரயாணப்பட்டி வெகு சிரமமெடுத்துத் தயாரிக்கப் பட்டதற்காக நான் நன்றிசெலுத்த விரும்புகிறேன். இந்திய தேசமன்னர்களனைவரையும் அவர்களுடைய சமஸ்தானங்களுக்கே சென்று பார்க்கும்படியாயும் வேறு சில தேசமன்னர்களை அவர்கள் சமஸ்தானங்களிலேயே போய் பாராவிட்டாலும் வேற்றிடங்களில் பார்த்து அவர்களை நெருக்கு நேரே பார்த்தமட்டில் அன்னார் சமஸ்தானங்களில் போய்ப்பார்த்தால் எவ்வளவு நெருங்கிய பழக்க முண்டாகுமோ, அவ்வளவு நெருங்கி அவர்களோடு பழகும்படியாகவும் சமயம் வாய்த்தது பற்றி நான் விசேஷமாய்ச் சந்தோஷப்படுகிறேன். அப்படி தேசமன்னர்களை அன்னாருடைய சமஸ்தானங்களுக்கே சென்றும், சமஸ்தானங்களுக்குச் செல்லாமல் நேரில் பார்த்தும் நான் அறிமுகஞ் செய்து கொண்டதுபற்றி அவர்களுடைய சமஸ்தான நிர்வாக முறைகளில் எல்லாவற்றை அறிந்துகொள்ளலானேன். அத்தேசமன்னர்கள் இளவரசியையும் என்னையும் வெகு தாராளமாய் உபசரித்ததற்காகவும் எங்களிடம் விசேஷமரியாதை காட்டியதற்காகவும் நான் மிக நன்றியுள்ளவனாயிருக்கிறேன். அதிலும் அவர்கள் அந்தரங்க ராஜபக்தியும் எட்வர்ட் சக்கிரவர்த்தியிடம்பிரியமும் காட்டியது என்மனதில் அழுந்திவிட்டது எங்களுடையவரவு எவ்வளவாக கவர்னர்கள், இவர்களுக்கும், மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் அதிக வேலைவைத்ததோடு கவலையையுமுண்டாக்கி இருக்கும் என்பதை நான் அறிய மாட்டுவேன். ஒவ்வொரு கவர்ன்மெண்ட் ஹவுஸிலும் நாங்கள் நல்வரவு கூறிப்பிரியமாய் வரவேற்கப்பட்டதற்கு நாங்கள் அதிக நன்றியுள்ளவர்களாகவேயிருக்கிறோம்

ஆனால் அதிகாரிகள் எங்கள் வரவைக் கருதியும் எங்கள் சுற்றுப் பிரயாணத்தைக் கருதியும் செய்த ஏற்பாடுகளை விடஜனங்கள் ஆயிரக்கணக்காயும் லக்ஷக் கணக்காயும் திரண்டு கூடி உற்சாகங் காட்டி எங்களைவரவேற்றதையும் நாங்களிருவரும் இங்கிலண்டி லிருப்பதற்கும் இந்தியாவி லிருப்பதற்கும் யாதொரு வித்தியாசத்தைக் காண வில்லையே யென்று நினைக்கும்படியாய் எங்கள் மனதைக்கவர்ந்ததையும் நாங்கள் மறக்கவே போகிறதில்லை. எங்கள் சுற்றுப் பிரயாணம் காரணமாக பல இலாகாக்களுக்கும் அதிக வேலை ஏற்பட்டது. சுகாதார இலாகாக்காரர்கள் நாங்கள் யாதொரு சுகக்குறைவும் ம்தக சௌக்கியக்குறைவுமின்றி சுற்றுப் பிரயாணஞ் செய்யும்படியான ஏற்பாடுகளைச் செய்திருந்ததற்காக நான் நன்றி பாராட்டுகிறேன். தொத்து நோய்கள் பரவியிருந்த பிரதேசங்களை நாங்கள் கடந்து சென்றோமாயினும்எங்களை யாதொரு நோயும் அணுகவில்லை.

ரெயில்வே அதிகாரிகளைப்பற்றி நான் எவ்வளவு சிலாகித்துப் பேசினாலும் அஃது அதிகமாகமாட்டாது. எங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச்செய்து சுகத்தைத்தேடுவது அவர்களைப் பொறுத்திருந்தது. எங்களுடைய சுகத்தில் பெரும்பாகம் அவர்கள் கையில் அகப்பட்டிருந்தது. எல்லா இருப்புப்பாதைக் காரர்களும் போட்டி போட்டுக்கொண்டு எங்களுக்குப்பலவிதமான சௌகரியங்களையுஞ் செய்திருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்குவிசேஷசௌகரியங்களைத் தேடினது மட்டுமேயன்று, சுற்றுப் பிரயாணப் பட்டியில் ஏற்படுத்தப்பட்ட மணிக்கணக்குத் தவறாமல் நாங்கள் ஓரிடம் விட்டு மற்றோரிடத்துக்குப் பிரயாணஞ்செய்வது சாத்தியமாகும்படி ஓரிடத்தை விட்டுப் புறப்பட்டு மற்றோரிடம் போயிறங்குவது சாத்தியமாகும்படியும் வண்டியை விட்டிருக்கிறார்கள். இருப்புப்பாதை மார்க்கமாய் மட்டும் நாங்கள் 8800 மைல் பிரயாணஞ் செய்திருக்கிறோம். போலீஸ்காரர்கள், சுற்றுப்பிரயாணகாலத்தில் எவ்வளவோ நிதானமாய் நடந்துகொண்டதிலும் எனக்கு திருப்திதான். அவர்கள் எங்களிருவரையும் பார்க்கவேண்டுமென்ற ஆசை மேலிட்டு நாங்கள் செல்லும் வழியில் வந்து கூடிய ஜனங்களை அநாவசியமாய் வெருட்டி யடியாமல் வீண்சந்தடி யில்லாமலிருக்கும்படி பார்த்துக்கொண்டதிலும் எனக்குச்சந்தோஷந்தான். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அபா



யங்கள் நேரிடாமலும் உயிர்ச்சேதங்கள் நேரிடாமலும் இருந்ததேயென்று இளவரசியும் நானும் மிகவும் சந்தோஷப்படுகிறோம். பஞ்சநிவர்த்திக்கொட்டகை யொன்றை எங்களுடையசுற்றுப்பிரயாணகாலத்தில் பார்க்கும்படியான சமயம் ஒன்று எனக்கு நேர்ந்தது. அக்கொட்டகை யொன்றைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை யெனக்கு மிகுதியாயிருந்தது. நான் அக்கொட்டகையைப் போய்ப் பார்த்தமட்டில் அங்கு பஞ்சநிவர்த்தியை எதிர்பார்த்து வந்திருக்கும் ஜனங்களின் கஷ்டத்தை நீக்கவும், பட்டினிபசியால் ஜனங்கள் இறந்து போவதைத் தடுக்கவும், வெகு பாடுபடுகிறார்களென்று நான் நன்றாய் அறிந்து கொண்டேன். இந்தியச்சேனாதிபதி லார்ட் கிச்சனரோடு இந்த மாதிரி சமாதான காலங்களிலே ஏராளமாய்க் கூடியறியாத படைகள் ராணுவப் பயிற்சிகள் செய்வதைப் பார்த்து சந்தோஷிக்கும்படியான பாக்கியத்தைப் பெற்றதற்காகவும் சந்தோஷப் படுகிறேன். ராவல்பிண்டியிலும் சிகந்திராபாத்திலும் மற்றுமுள்ள விடங்களிலும் நடந்த ராணுவப்பயிற்சி காலங்களில் இவ்விந்தியாவிலுள்ள ராணுவப் படைகளின் ஒவ்வொரு படையையும் பார்க்கும்படியான பாக்கியத்தை நான் பெற்றதற்காகவும் சந்தோஷப் படுகிறேன். பிரிடிஷ்போர்வீரர்களென்ன, இந்தியப் போர்வீரர்களென்ன, இவர்களுடைய பார்ப்பதற்கு நேர்த்தியாயுள்ள திடசரீரத்தையும், நல்ல ராணுவப் பயிற்சியையும், ராணுவத்தில் வேலை செய்வதற்கு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தகுதியையும் பார்ப்பதும் கவனிப்பதும் எனக்கு மிகுந்த இன்பத்தை விளைவித்தது. இந்தியச் சைனியத்தில் 9-ரெஜிமெண்டுக்கு சக்கிரவர்த்தி அவர்கள் என்னை முக்கியகர்னலாக நியமித்து என்னைக்கௌரவப் படுத்தி யிருக்கிறார். லாகூரிலும் நாங்கள் போயப்பார்த்து தேசமன்னர்களது சமஸ்தானங்களிலும் தேச மன்னர்களது ஏகாதிபத்திய ஊழியப் படைகளைப் பார்க்கும்படியான சந்தர்ப்பங்கள் நேரிட்டன. அச்சமயங்களில் அவர்கள் ராணுவப் பயிற்சியில் காட்டிய சுறுசுறுப்பும் அன்றாது கம்பீரத் தோற்றமும் ஆச்சரியத்தையேயுண்டாக்கிற்று. சில தேசமன்னர்கள் இந்தியா நாட்டின் காப்பைக்கருதி இப்போதைவிட அதிகப் போர்வன்மையையும், போர்த்தொழிலுக்குரிய யுத்தசாமான்களையும் உடைய படையை உதவுவதற்காக தங்கள் ராச்சியக் காப்புக்கு வேண்டிய படையைக் குற்ற

த்துக்கொள்ள உடன்பட்டிருக்கிற தேசமன்னர்களது செய்கையை நீர் சிலாகிப்பீரென்று நான் உறுதியாய் நம்பியிருக்கிறேன். காலக்கிரமத்தில் மற்ற இந்திய தேசமன்னர்களும் அதேமாதிரி செய்வார்களென்பதில் எனக்கு சந்தேகமே யில்லை.

நாங்கள் இருவரும் எங்களுடைய இந்தியச் சுற்றுப்பிரயாணம் முடிவடைந்துவிட்டதே யென்று விசனப்படுகிறோம். இந்தியா, பர்மா இவைகளின் உட்பிரியத்தோடு கூடிய அழைப்பை நாங்கள் ஒருநாளும் மறக்கமாட்டோம். போன விடங்களில் எல்லாம் காலஞ்சென்றுவிட்ட விக்டோரியா சக்கிரவர்த்தினி ஒரே மாதிரியாய்ப் பிரியமாய் மதிக்கப்படுவதையும் என் தந்தையாருக்கு ஒரு மாதிரியாய் ராஜபக்தி செலுத்தப்படுவதையும், ஒரேமாதிரியாய் உற்சாகங்காட்டி நாங்களிருவரும் வரவேற்கப்பட்டதையும் நாங்கள் பார்த்தோம். எங்கள் உயிர் உள்ளளவும் இந்தியாவை அனுதாபத்தையுடன் எங்கள் மனதில்வைப்போம். உம்முடைய கவர்ன்மெண்டுக்கு யிருந்த வேலையையும் கவலையையும் குறித்த எங்கள் சுற்றுப்பிரயாணங் காரணமாக இந்தியாவுக்கு தெய்வகிருபையால் நன்மைவிளையுமென்று நான் நம்பியிருக்கிறேன். நீரும் உமது கீழுள்ள உத்தியோகஸ்தர்களும் பார்க்கும் பொறுப்பமைந்த பெரிய வேலையில் உமக்கும் அவர்களுக்கும் தெய்வானுகூலமிருக்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். இந்திய ஜனங்கள், பஞ்சம் தொத்து நோய்கள் இவைகளால் பீடிக்கப்படாமலிருக்க வேண்டுமென்றும் அவர்களுடைய விவசாயத் தொழிலும் கைத்தொழில்களும் விருத்தியடையவேண்டுமென்றும், ஜனசமூகநிலைமைகளில் இயற்கையாகவே ஒருவித மேற்போக்கிருக்கவேண்டுமென்றும் நாங்கள் விரும்புகிறோம். இளவரசியும் நானும் 5-வருஷத்துக் குள்ளாக லேடி மிண்டோவோடும் உம்மோடும் கானடாவிலும் இந்தியாவிலும் சேர்ந்திருக்கும்படியான சமயம் வாய்க்கப்பெற்றோமேயென்று சந்தோஷப்படுகிறோம். உம்முடைய பொறுப்பேறப்பெற்ற வேலையில் உமக்கு சகலவித ஜயமும் உண்டாகவேண்டுமென்று நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன்.

## இந்தியாவின் ராஜபக்தியும் வெகுமதியும்.

இளவரசர் இந்தியாவைவிட்டுத் தம் தேசம் போகக் காராச்சியில் கப்பலேறின சமயத்தில், தமக்கு இத்தேசத்தில் ராஜாங்க



அதிகாரிகளாலும் ஜனங்களாலும் செய்யப்பட்ட உபசரணைகளால் உண்டாயிருந்த திருப்தியையும் சந்தோஷத்தையும் தெரிவித்து ராஜப்பிரதிநிதிக்கு நீண்டகடிதமொன்றெழுதியிருக்கிறார். முக்கியமாய் ஜனங்கள் தாம் சென்ற விடங்களெல்லாம் லட்சக் கணக்காகத் தெருக்களில் திரண்டுவந்து அவர்களது ராஜவிசுவாசத்தையும் குதூகலத்தையுங் காட்டினதைப் பார்த்துத் தமக்கு அளவற்ற சந்தோஷமுண்டானதாகவும், தாம் உயிருடனிருக்கும் வரையில் இந்தியாவை மறக்கமுடியாதென்றும் சொல்லுகிறார். தாம் இந்தியாவுக்கு வந்து பல இடங்களைப் பார்த்தும் பல மன்னர்களுடன் பேசியும், ஜனங்களின் நிலைமையைத் தெரிந்துகொண்டும், இந்தியரின் பெருமைகளையுணர்ந்தும், அனுபோகம்பெற்றதற்குப் பலனாக, இந்திய ஜனங்கள் வரவர வறுமையினின்றும் நீங்கி விவசாயமும் தொழிலும் செழிக்கப்பெற்று, சமூகப் பொதுநிலைமைகளில் முற்படுவார்களெனத் தாம் கோருவதாகவும் சொல்லுகிறார். இளவரசர் இப்படி நம்மிடத்தில் அன்புவைத்து நமது க்ஷேமத்தைக்கோருவது நாமெல்லோருக்கும் திருப்தியைக் கொடுக்கக்கூடியதென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. தம் பிதாவுடன் தமது அனுபோகத்தைச் சொல்லி இந்தியர்களுடைய உண்மையான நிலைமையையும் கோரிக்கைகளையும் அறிவித்து அதனால் சக்கிரவர்த்திக்குத் தயவுண்டாய் நமக்கு என்னபெரும் நன்மைகள் செய்ய உத்திரவு சொல்வாரோ இனித் தெரியவேண்டும். அல்லது, இளவரசரே சக்கிரவர்த்தியாகும் காலத்தில் இந்தியாவை மறக்காமல் அதற்கு வறுமை நீங்கிச் செல்வம்பெருகிச் சுதந்தரமும் பெருமையும் உண்டாகும்படி என்ன செய்யும்படி கட்டளையிடுவாரோ தெரியவேண்டும். பிரிடிஷ் ராஜாங்கம் நடத்தப்படும் முறைகளின்படி, அரசன் ஜனங்களுக்கு நேராகச் செய்யக்கூடிய நன்மைகள் அதிகமாக இல்லை. ஜனங்களுக்கு வரிப்பளுவைக் குறைக்கவேண்டுமானாலும், புதிதான சுதந்திரங்கள் கொடுக்கவேண்டுமானாலும், பார்லிமெண்டார் தக்கசட்டங்கள் செய்து நடக்கச்சொல்லாமன்றி அரசனே தம் இஷ்டப்படி கட்டளையிட அதிகாரம்பெற்றிருக்கவில்லை. ஆயினும் பார்லிமெண்ட்சபையானது பெரும்பாலும் மந்திரிகளால் இயக்கப்படும் இயந்திரம் போன்றதாயிருப்பதாலும், அரசன் பிரியப்பட்டால் மந்திரிகளை வரவழைத்துத் தமதிஷ்டத்தைச் சொல்லி அத்தப்படி ஏற்பாடுகள் செய்யக்கட்டளையிடக் கூடு

மானதாலும், அரசரும் இளவரசரும் நமது நன்மையைக் கோருவராயிருப்பது பிரயோசனமற்றதென்று சொல்லுதல் தகாது. இளவரசர் தமது தேசம் போனதும் [illegible] இந்தியாவில் செய்யப்பட்ட உபசாரங்களுக்குப் பிரதியா[illegible]யர்கள் மீது சுமந்து நிற்கும் வரிப்பளுவைக் குறைக்கவே[illegible]மென்பது தமது விருப்பமென்று தம் பிதாவுடன் சொன்னால், அவ்விருப்பப்படி ஏதாவது செய்யப்படக்கூடும். அல்லது நமது சட்டசபைகளின் உரிமைகளைச் சிறிது விசாலப்படுத்தி நமக்கு இப்போதைவிட அதிக சுதந்தரங்கள் கொடுக்கவேண்டுமென்று விரும்பி அப்படியேசெய்யச்சொல்லிக் கட்டளையிடக்கூடும். மந்திரிமார்களும் இந்தியரின் ராஜவிசுவாசத்தை யுணர்ந்து அதற்கு வெகுமதியாக அவர்களுக்கு அதிகசுதந்திரங்கள் கொடுப்பது தகுமென்று அப்படியே செய்யக்கூடும். இந்தியரின் ராஜவிசுவாசம் சிலகாலமாக மட்டும்தோன்றின உணர்ச்சியல்ல. பிரிடிஷ் ராச்சியம் அன்னிய ராச்சியமாயினுங்கூட அதில் இந்தியரின் விசுவாசம் குறைந்ததாயிருக்கவில்லை. மகமதியர் இந்தியாவை யாண்ட காலத்திலும் அவர்களிடத்தில் இந்துக்கள் முழுவிசுவாசமும் வைத்தவர்களாகவே யிருந்தார்கள். ராஜவிசுவாசமென்பது இந்தியர்களுக்குஇயற்கையாகவே அவர்கள் பிறப்பில் அமைந்திருக்குங்குணம். ஆகையால் நமது ராஜவிசுவாசத்தைப்பற்றி யெக்காலத்திலும் சந்தேகமுண்டாகக்கூடியதல்ல. பிரிடிஷ் ஆட்சியாருக்கு அப்படிப்பட்ட சந்தேகத்துக்கு இடங்கொடுக்கும்படியான அநுபோகம் நேரிட்டதேயில்லை. இப்போது இளவரசர் எப்படி நமது ராஜவிசுவாசத்தை உணர்ந்து மகிழ்ச்சியுடன் புகழ்கின்றனரோ அப்படியே சக்கிரவர்த்தி இளவரசராக இருந்தகாலத்தில் இந்தியாவுக்கு வந்து திரும்பிப் போனபோது இந்தியரின் ராஜ விசுவாசத்தை மனதாரப்புகழ்ந்தனர். ஆட்சியிலுண்டாயிருக்கும் உணர்ச்சியைப்பற்றிப்பேச சமயம் பெற்ற ஒவ்வொரு பிரிடிஷ் ராஜதந்திரியும் புகழ்ந்திருக்கின்றனர். ஆனால் ஒரு விஷயம் கவனிக்க வேண்டியிருக்கின்றது. இந்தியர் வரவரக்கல்வியும், பொது ஜன உணர்ச்சியும் பெருகப்பெற்று வருகிறார்கள். தங்களது உண்மையான நிலைமையைத்தெரிந்துகொண்டு அதிலுள்ள குறைகளுக்கு நிவிருத்தி தேடிக்கொள்ள சாமர்த்தியம் பெற்று வருகிறார்கள். பிரிடிஷ் ராச்சியத்தில் இந்தியர்கள் முழு விசுவாசம் வைத்தவர்களாயிருந்தாலும், அந்த விசுவாசத்துக்குப்பிர



தியாக அவர்களுக்குப் பிரிடிஷார் என்ன நன்மைகளைச் செய்திருக்கிறார்களென்று சிந்தனை செய்யவல்லவர்களாயிருக்கிறார்கள். ராஜவிசுவாசம் எப்படி ஜனங்களுடையகடமையோ, அப்படியே ஜனவிசுவாசமும், அரசருடைய கடமையாகும். அரசரிடத்தில்குடிகள்விசுவாசம்வைத்து அவரால்விதிக்கப்படும் வரிகளைகொடுத்தும்சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்தும் நடக்கும்போது குடிகளிடத்தில் அரசர் நம்பிக்கையும் அபிமானமும் வைத்து அவர்கள் வரவர உயர்ந்தநிலைமைக்கு வருவதைக் கருதவேண்டும். பிரிடிஷ் ராஜாங்கத்தில் இந்தியர் உண்மையானவிசுவாசம்வைத்திருப்பதற்கு வெகுமதியாக பிரிடிஷ் ராஜாங்கத்தார் இந்தியரிடத்தில் நம்பிக்கைவைத்துஅவர்களுக்கு சுதந்திரங்கள் கொடுப்பதும் அவர்களிடத்தில் அபிமானம்வைத்து அவர்களுடைய சௌகரியங்களுக்கு இடையூறுகளை நீக்குவதும் கடமையன்றோ?

முற்றிற்று

118631



THE ROYAL GROUP.